நாவாந்துறை படிப்பகம்
ம...டசி மன்றம்
யாழ்ப்பாணம்.


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 32

சுடர் 31 | கதிர் 342 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 17, புதன்கிழமை 02.11.2016


# நிபந்தனை அடிப்படையில் இலங்கைக்கு வரிச் சலுகை

## ஐரோப்பிய ஒன்றியக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 2
இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை நிபந்தனை அடிப்படையிலேயே வழங்கப்படவேண்டும். வரிச் சலுகை >> 06



## பேச்சு இன்று நடக்கையில் 4 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம், நவ. 2
இலங்கை-இந்திய மீனவர் பேச்சு புதுடில்லியில் இன்று நடைபெறவுள்ள நிலையில், நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்களை எதிர்வரும் 15 ஆம் >> 28

## அப்பாவிகளிடம் கப்பம் கோரும் குழுவே ஆவா

கூறுகிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

யாழ்ப்பாணம், நவ. 2
ஆவா குழு என்பது அப்பாவி மக்களிடம் இருந்து கப்பம் கோருகின்ற குழுவாகும். இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேயவர்த்தன தெரிவித்தார். >> 29

## மத்திய வங்கி மோசடி அறிக்கை சட்டமா அதிபரிடம்

கொழும்பு, நவ. 2
மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பான கோப் குழுவின் விசாரணை அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் கையளிக்கப்பட்டது. >> 29

## மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றார் மைத்திரி

பல்கலைச் செயற்பாடுகள் இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம், நவ. 2
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் கோரிக்கைகளை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன ஏற்றுக் கொண்டு நீதியான விசாரணைக்கு உறுதியளித்துள்ளார். இதனால் இன்றிலிருந்து பல்கலைக்கழகத்தின் அனைத்து பீட மாணவர்களும் கற்றல் செயற்பாடுகளைத் தொடர்வர் என்று ஜனாதிபதியைச் சந்தித்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
மாணவர்கள் படுகொலை பற்றிய விசாரணை அறிக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டவுடன் அது எங்களுக்கும் >> 06

## வைத்தியசாலைக்குள் நுழைந்து பட்டப்பகலில் துரத்தித் துரத்தி வெட்டு

மந்திகையில் நேற்றுப் பயங்கரம்

யாழ்ப்பாணம், நவ. 2
பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினுள் நேற்றுப் பட்டப் பகலில் வாள்களுடன் நுழைந்த கும்பலினால் பெரும் களேபரம் ஏற்பட்டது. வைத்தியசாலைக்கு வந்திருந்த மக்கள் சிதறி ஓடினர். வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க் >> 29



## 124 கிலோ கஞ்சா சிக்கியது வடக்கில்

சந்தேகத்தில் 6 பேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், நவ. 2
வடக்கில் இரு வேறு இடங்களிலிருந்து 124 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
காரைநகர் கடற்கரைப் பிரதேசத்தில் 74 கிலோவும், வவுனியாவில் 50 கிலோவும் என 124 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது. >> 06



மட்டக்களப்பு புதைகுழி

## எச்சங்கள் மீட்ட இடத்தை ஆராயவுள்ளது நிபுணர் குழு

மட்டக்களப்பு, நவ. 2
மட்டக்களப்பு - முறக்கொட்டாஞ்சேனைப் பகுதியில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தை, நிபுணர் குழு பார்வையிட்டு முழு அறிக்கை சமர்ப்பிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.ஐ.எம்.றிஸ்வி நேற்று உத்தரவிட்டார்.
இராணுவப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட காணியில் மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தை >> 29

## மக்கள் உணரும் மாற்றமே வேண்டும்

அரசிடம் வலியுறுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியக் குழு

யாழ்ப்பாணம், நவ. 2
அரசு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதாகச் சொல்கின்றது. ஆனால் மக்கள் மாற் >> 28

முச்சந்தி முரளி




கஞ்சாக்காரர் கட்டுப்படுகிறதா தெரியேல பாருங்கோ...

## கிழக்கை வடக்குக்கு விற்காதே

அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராக அம்பாறையில் சுவரொட்டிகள்

அம்பாறை, நவ. 2
முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீமுக்கு எதிராகக் கிழக்கில் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. புதிய அரச >> 06




## பொலிஸாரின் சித்திரவதைகள் உச்சக்கட்டத்தில்

மனித உரிமைகள் ஆணைக்குழுவால் ஐ.நா. அமர்வுக்கு அறிக்கை முன்வைப்பு

கொழும்பு, நவ. 2
கடந்த இரண்டு வருடங்களில் பொலிஸாரின் சித்திரவதைகள் குறித்து 420 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன்மூலம் இலங்கையில் சித்திரவதைகள் >> 05





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில் கல்வி நிலையங்களை பயன்படுத்தாத வடக்கு இளைஞர்

யாழ்ப்பாணம், நவ.2
தொழிற் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அரசின் 6 தொழில் கல்வி நிலையங்கள் உள்ள போதும், அதனைப் பயன்படுத்த வடக்கில் உள்ள இளைஞர்கள் முன்வருவதில்லை என அரச தொழில் கல்வி நிலையங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

அதிகரிக்கும் வேலை வாய்ப்பின்மையைப் போக்கவும், சகல இளைஞர்களும் பட்டப்படிப்புக்கு நிகரான கல்வியைப் பெறவும் வழி காட்டும் நோக்கில் யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில், வடக்கில் இயங்கும் சகல அரச தொழில் பயிற்சிக்கூடங்களையும் உள்ளடக்கி ஊடக சந்திப்பு ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

வணிகர் கழகத் தலைவர் ஜெயசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், கலந்து கொண்ட அரச தொழில் கல்வி நிலையங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளே மேற்கண்டவாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கில் உள்ள 5 மாவட்ட இளைஞர்களின் தொழிற் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அரசின் 6 தொழில் கல்வி நிலையங்களைச் சேர்ந்த பல நிலையங்கள் உள்ளன. ஆயினும் அவற்றைப் பயன்படுத்த போதிய இளைஞர்கள் முன்வராதமையால் சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றன.

குறிப்பாக வடக்கில் உள்ள பல தொழிற்பயிற்சிக் கூடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற போது, வடக்கு இளைஞர்களைவிட தெற்கு இளைஞர்களே அதிகமாக விண்ணப்பிக்கின்றனர். க.பொ.த உயர்தரம் அல்லது க.பொ.த சாதாரணம் படித்த இளைஞர்கள் கூட ஓர் தொழில் பட்டதாரியாக மாற முடியும்.

அரச தொழிற் பயிற்சி நிலையங்கள் அனைத்திலும் தொழிற்கல்வி இலவசமாக இடம்பெறுகின்றது. இதனை இளைஞர்கள், பெண்கள் கவனத்தில் கொள்ளவேண்டும்–என்றனர். (த–101)

# நேற்று வெளியேறியது சிறப்பு அதிரடிப் படை

## மன்னார் இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் இருந்து



மன்னார், நவ. 2
மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் நிலைகொண்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினர் நேற்றுக் காலை அங்கிருந்து வெளியேறினர்.

மன்னார்–தலைமன்னார் பிரதான வீதியில்– 2 ஆம் கட்டைச் சந்தியில் அமைக்கப்பட்ட இளைஞர் படையணிப் பயிற்சி நிலையத்தில் கடந்த 8 வருடங்களுக்கு மேலாகச் சிறப்பு அதிரடிப் படையினர் பெரிய முகாமாகக் குறித்த பயிற்சி நிலையத்தைப் பயன்படுத்தி வந்தனர். சிறப்பு அதிரடிப் படையினரின் மாவட்டத் தலைமை அலுவலகமாகவும் இது செயற்பட்டு வந்தது.

பயிற்சி நிலையத்தின் பின் பகுதியில் கடல் காணப்பட்டமை மற்றும் மன்னார்–தலைமன்னார் பிரதான வீதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு, கடற்படையினர் முன்னர் பெரிய முகாம் ஒன்றை அமைத்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். போர் முடிவுற்றதை அடுத்துக் கடற்படையினர் அங்கிருந்து வெளியேறினர். பல மாதங்களாகக் குறித்த பயிற்சி நிலையத்தை உரிய அதிகாரிகள் பெறுப்பேற்றுக்கொள்ளாத நிலையில் சிறப்பு அதிரடிப் படையினர் அதனைக் கைப்பற்றித் தமது முகாமாக மாற்றிச் செயற்பட்டு வந்தனர்.

இளைஞர் படையணிப் பயிற்சி நிலையத்தை உரிய திணைக்களத்திடம் மீள ஒப்படைக்கவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனிடம் பல்வேறு தரப்பினரும் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பிரதமர், அங்கு நிலை கொண்டுள்ள சிறப்பு அதிரடிப் படையினர் உடனடியாக வெளியேற்றப்பட்டு நவம்பர் முதலாம் திகதி குறித்த நிலையம் உரிய திணைக்களத்திடம் கையளிக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

இதற்கு அமைவாக இளைஞர் படையணிப் பயிற்சி நிலையத்தில் நிலைகொண்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினர் நேற்று வெளியேறிய நிலையில் குறித்த நிலையம் உரிய திணைக்களத்திடம் கையளிக்கப் பட்டது. (த–21–56)

# திண்மக் கழிவுப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்துத் தீர்வு

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



கொழும்பு, நவ. 2
எமது நாட்டில் திண்மக் கழிவுப் பிரச்சினை விமர்சனத்துக்குள்ளான ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அரசு முன்னுரிமையளித்து தீர்க்க வேண்டிய ஒரு பிரச்சினையாகவும் இருக்கின்றது.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

வகைப்படுத்தப்பட்ட குப்பைகளை மட்டும் சேகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நாடு முழுவதும் ஆரம்பித்து வைக்கும் வகையில், விரைவில் உக்கிப்போகும் மற்றும் உக்கிப் போகாதவை என்று வகைப்படுத்தப்பட்ட குப்பைத் தொட்டிகள் ஜனாதிபதியினால் நகர சபைகளுக்கு வழங்கப்பட்டன.

இங்கு கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

தூய்மையான நகரத்தையும் தூய்மையான நாட்டையும் கட்டியெழுப்புவதற்கு இந்தத் திட்டம் ஒரு சிறந்த தீர்வாகும். திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் அரசு முன்னெடுத்து வரும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களையும் வெற்றிபெறச் செய்வதற்கு நாட்டு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் – என்றார்.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சும், பெருநக[illegible] [illegible]ருத்தி, மேல் மாகாண அபிவிருத்தி [illegible] அமைச்சும் இணைந்து இந்த நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளன.

நிகழ்வில் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க. பைசர் முஸ்தபா, சாகல ரத்நாயக்க, இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சின் செய[illegible] [illegible] (த–5)



# போரில் அவயவங்களை இழந்த சிப்பாய்கள் நேற்றும் போராட்டம்

கொழும்பு, நவ. 2
ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான தமது முரண்பாடுகளைத் தீர்க்குமாறு கோரி, போரின்போது அவயவங்களை இழந்துள்ள ஓய்வு பெற்ற படைச்சிப்பாய்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு அனுமதிக்குமாறு கோரி 20 இற்கும் மேற்பட்ட ஓய்வுபெற்ற படைச் சிப்பாய்கள் ஜனாதிபதி செயலக வீதியை மறித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்குரிய ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்குமாறு வலியுறுத்தி நேற்றுமுன்தினம் கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

கடந்த ஜூலை மாதம் 25 ஆம் திகதி முதன்முறையாக தமது கோரிக்கையை முன்வைத்து புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை
# 2017 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், வாகனத்தரிப்பிடங்கள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2017 தொடக்கம் 31.12.2017 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :- 02.11.2016 - 15.11.2016**
**கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 17.11.2016 நண்பகல் 12.00 மணிவரை**
**கேள்வி திறக்கும் திகதி :- 17.11.2016 பிற்பகல் 12.30 மணி**

| இல | சந்தை பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக்கட் டணம் (VAT தவிர்த்து) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்புப் பணம் (VAT தவிர்த்து) | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (VAT தவிர்த்து) |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை துறையூர் மீன் சந்தை (புதிய கட்டடம்) | - | 2,000.00 | 10,000.00 | 220,000.00 |
| 2 | வேலணை செட்டிபுலம் மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 27,500.00 |
| 3 | வேலணை அம்பிகைநகர் மீன் சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 14,300.00 |
| 4 | சரவணை மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 7,260.00 |
| 5 | புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தை | - | 2,000.00 | 10,000.00 | 172,700.00 |
| 6 | அல்லைப்பிட்டி மீன்சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 66,000.00 |
| 7 | வேலணை சாட்டி கடற்கரை சிற்றுண்டிச்சாலை | - | 1,000.00 | 5,000.00 | 8,250.00 |
| 8 | வேலணை சாட்டி கடற்கரை வாகனத்தரிப்பிடம் | - | 2,000.00 | 10,000.00 | 232,100.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனை சந்தையில் அமைந்துள்ள கடைகள் | | | | |
| 9 | கடை இல. 2 – கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | - | 1,000.00 | 5,000.00 | 31,600.00 |
| 10 | கடை இல. 4 – கருவாட்டுக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 34,760.00 |
| 11 | கடை இல. 5 – கருவாட்டுக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 34,760.00 |
| 12 | கடை இல. 6 – கோழிக் கடை | - | 1,000.00 | 5,000.00 | 33,715.00 |
| 13 | கடை இல. 7 – வேலணை ஆட்டிறைச்சிக்கடை | - | 1,000.00 | 5,000.00 | 33,770.00 |
| 14 | வேலணை 06ஆம் வட்டாரம் பொதுச் சந்தை – மரக்கறி / மீன் | - | 1,000.00 | 5,000.00 | 37,878.50 |
| 15 | வேலணை 06ஆம் வட்டாரம் பொதுச் சந்தை – ஆட்டிறைச்சிக் கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 11,000.00 |
| 16 | வேலணை 06ஆம் வட்டாரம் பொதுச் சந்தை – கருவாட்டுக் கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 11,000.00 |
| 17 | வேலணை 06ஆம் வட்டாரம் பொதுச் சந்தை – சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 1,000.00 | 5,000.00 | 24,000.00 |
| 18 | வேலணை 06ஆம் வட்டாரம் பொதுச் சந்தை – கோழிக் கடை | 750.00 | 1,000.00 | 5,000.00 | 17,907.89 |
| 19 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாறு மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | - | 1,000.00 | 5,000.00 | 13,311.10 |
| 20 | மண்டைத்தீவு வாராந்த சந்தை | - | 1,000.00 | 5,000.00 | 10,000.00 |

*கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **'செயலாளர், வேலணை பிரதேச சபை, வேலணை'** என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டுத் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்துக்கு முன் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதி **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்'** என்னும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் விண்ணப்பங்களுடன் தேசிய அடையாள அட்டையையும் அதன் நிழற்படப் பிரதியையும் கொண்டு வருவதுடன் தாம் வதியும் இடத்தின் வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

*உள்ளூராட்சி மன்றங்களால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப் பத்திரம் நிராகரிக்கப்படும்.

*ஆகக் குறைந்த கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

*கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை என்பவற்றுக்கு 15% Vat பெறுமதி சேர் வரி செலுத்தப்படல் வேண்டும்.

*கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ கேள்விச் சபைக்குப் பூரண அதிகாரம் உண்டு.

*தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரிய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 2/3 பகுதியையும் ஏனைய கேள்விக்காரர்கள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியையும் 2016.12.05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ளல் வேண்டும்.

*கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

*புங்குடுதீவு மடத்துவெளி மீன்சந்தையில் நயினாதீவிலிருந்து கொண்டுவரப்படும் மீன்களுக்கு சந்தை வரி தவிர்த்தே அறிவிடப்பட வேண்டும்.

*சந்தைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் சந்தைகளின் தூய்மைக்கு பொறுப்பாக இருப்பதுடன் கழிவுகள் சேகரிப்பதற்குள்ள கூடைகளில் கழிவுகளை இட வேண்டும்.

*வாகனத் தரிப்பிடங்களில் வேலணைப் பிரதேச சபையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களையே பற்றுச் சீட்டு வழங்கி அறவிட வேண்டும். மேலும் இலங்கை போக்குவரத்துச் சபை அரச முத்திரை பொறிக்கப்பட்ட வாகனங்கள் தவிர்த்தே வாகனத்தரிப்பிடக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும்.

*கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(சி/23068)(11,18,17)

**அப்பாத்துரை குருநாதன், செயலாளர், பிரதேசசபை, வேலணை.**

## வீடு வாடகைக்கு உண்டு

இல.127, நாவலர் விதியிலுள்ள முற்றிலும் ரைல்ஸ்பதித்த மாடி வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு பொருத்தமானது. (J 5798) (16,17,19)

077 3758895,077 5672030

## தளபாடங்கள் விற்பனைக்குண்டு

கடைகளுக்குப் பயன்படுத்தக்கூடிய இரும்பு, அலுமினியம், மரத்தாலான அலுமாரிகள், விரிவுரை மண்டபங்களுக்குரிய கதிரைகள் மற்றும் அலுவலக மேசைகள் விற்பனைக்குள்ளன. (C 23065) (14,17,18)

தொடர்பு: 077 997 5532

## இன்று மின்தடை

மின் விநியோக மார்க்கங்களின் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று காலை 8.30 மணியிலிருந்துமாலை 5.00 மணிவரையும் வவுனியாவில் மடுக்கந்த, பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய இடங்களிலும், மன்னாரில் சிலாவத்துறையிலிருந்து அரிப்பு வரை, சவேரியார் குளம், நொச்சிக் குளம் ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும்என்று அறிவிக்கப்பட்டது. (வ–10)

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

வகுப்பு ஆரம்பம்: 12.11.2016 **பிரெஞ்சு மொழி**

உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!

021 2228093 61 , கச்சேரி - நல்லூர் வீதி யாழ்ப்பாணம். (J 5799)(16,17,19)

## வேலை வாய்ப்பு

Cleaning மற்றும் Garden வேலை

நிறுவனம்: பிரெஞ்சு மொழி கற்பிக்கும் தனியார் நிறுவனம்.

ALLIANCE FRANCAISE DE JAFFNA

61, Kachcheri- Nallur Road, Jaffna Phone: 021 2228093 (J 5788)(16,17,19)

## வேலையாள்கள் தேவை

வெல்டிங் வேலையில் பயிற்சி பெற விரும்புவர்கள் தேவைப்படுகின்றனர்.



வேலை பழகிய பின்னர் வேலை வாய்ப்பும் வழங்கப்படும்.

தாங்குமிடம், சாப்பாடு இலவசம். (J 5797) (16,17,19)

077 9601100, 077 5240618

## Web Server இற்கான கூறுவிலை கோரல்

யாழ்.பொதுசனநூலக இணையத்தளத்தை இயங்க வைக்கும் பொருட்டு இணைய வழங்கியினை (web server) கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளோம். குறித்த இணைய வழங்கியானது (web server ) இலகுவாகவும் பாதுகாப்பான முறையிலும் இணையதளம் தொழிற்படுவதற்கு பின்வரும் தகைமைகளை அவசியம் கொண்டிருத்தல் வேண்டும்.

1.Unlimited Storage.
2. Unlimited bandwidth
3. Unlimited MySQL databases
4. Unlimited FTP Users
5. Site backup & restore (paid option)
6. Premium DNS
7. 1 Year SSL Certificate to secure customer data and increase search rankings (Restrictions apply)

எனவே கூறுவிலை தரவிரும்புவோர் தங்களால் வழங்கப்படக் கூடிய இணைய வழங்கி (web server) தொடர்பான அறிமுக விளக்கத்தினைக் குறிப்பிட்டு கூறுவிலையுடன் கீழே (1 - 6) வரையுள்ள ஆவணங்களையும் இணைத்துக் கடித உறையிலிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'இணைய வழங்கி (web server ) தொடர்பான கூறுவிலை"** எனக் குறிப்பிட்டு **"ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 11.11.2016 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். தேவையான விவரங்களினையும் இணைத்து அனுப்பவும்.

1. Company Profile
2. Certified Copy of Business Registration Certificate.
3. Certified Copy of VAT Certificate
4. Bid Submission Form
5. Valid Certificate of Registration in TRCSL
6. Declaration on Technical Specification

**ஆணையாளர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(சி/23066)
(11,18,17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வியாபார திட்டமிடல் மற்றும் அறிவுசார் சேவைகள்

- Business Proposal Writing
- Market Research (சந்தை ஆய்வு)
- Marketing Research (சந்தைப்படுத்தல் ஆய்வு)
- Feasibility Study (செயலாக்க ஆய்வு)
- Lead Generation
- Translations (English to Tamil / Tamil to English)

077 558 7274 / 021 221 7997

## கல்லீரல் தேவை

Liver Wanted



கல்லீரலின் ஒரு சிறு பகுதி
தேவைப்படுகின்றது.
இரத்த வகை- A+/ O
வயது: 18-50
தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். மேலதிக விவரங்களுக்கு.

அழையுங்கள் : 077 577 8871

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா (முழுநேரம்)**
**முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள்**

31.10.2016 (திங்கட்கிழமை) நடைபெறவிருந்த மேற்படி பரீட்சை இன்று (02.11.2016) புதன்கிழமை வெளிவாரி கற்கை அலகின் பரீட்சை மண்டபத்தில் முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும்.

- பதிவாளர் -

(சி/23061)(11,18,21)

## கொழும்பில் தொடர்மாடி குடியிருப்புக்கள்

சகலவித தளபாடங்களுடன் (குளிரூட்டப்பட்டவை | A/C)

குறுகிய கால வாடகைக்கு

www.colomboapartments.lk



HOTLINE 011 480 1818 / 077 354 0632 / 077 633 2580

## வேலைவாய்ப்பு

♣ வரவேற்பாளர் - (பெண்கள்)
♣ காசாளர் - (இருபாலாரும்)

**காலம்:** 06.11.2016 (ஞாயிற்றுக்கிழமை)
**இடம்:** யாழ் வைத்தியசாலை
315, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
**நேரம்:** முற்பகல் 10.00 மணி.
சுயவிவரக்கோவையுடன் வரவும்.

021 222 3533/1011

## விளம்பரப் பெயர்ப்பலகைகள் அமைத்தல் தொடர்பான அறிவித்தல்

**யாழ்ப்பாணம் மாநகரசபை**

யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள சகல நிலையான மற்றும் காட்சி மாறுகின்ற விளம்பரப்பலகைகளுக்கும் (Billboards and display screens ) உரிய அனுமதியினை உடன் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அனுமதி பெறப்படாத சகல விளம்பரப்பலகைகளும் எதிர்வரும் 11.11.2016 ஆம் திகதி தொடக்கம் எமது சபையால் அகற்றப் படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

ஆணையாளர், மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

26.10.2016 (சி/23062)(11,18,21)

# கலந்துரையாடல்

வேம்படி மகளிர் கல்லூரியில் 2018 உயர்தரப் பிரிவில் விஞ் ஞானப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதி பர் தெரிவித்தார். மாணவர்களின் கல்விச் செயற்பாடு தொடர்பாக நடைபெறவுள்ள இந் தக் கலந்துரையாடல் பாடசாலையின் தம் பையா மண்டபத்தில் நடை பெறவுள்ளது என்று அவர் தெரிவித் தார். (ந-10)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம் 1982 மகம் 3, செவ்வாய், சனி 8. $19\frac{3}{4}$ பாவமுடைய BSc ஆசிரியருக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.

077 801 4278

## வாகனம் வாடகைக்கு விடப்படும்

TATA SUPER ACE (வடி) ஒப்பந்த அடிப்படையில் சாரதியுடன் வழங்கப்படும். நிறுவனங்கள், தனியார் விரும்பத்தக்கது.

077 921 3835

## உடனடி வேலைவாய்ப்பு
## இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்கம் வடமாகாண கிளை

எமது மேற்படி சங்க அங்கத்தவர்களுக்குப் பின்வரும் கல்வித் தகைமையுடையவர்கள் உடனடியாக வேலை வாய்ப்புக் குத் தேவைப்படுகின்றனர்.

**01. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்**
(Technical Officers)
- HNDE / NCT (CIVIL) or Equivalent Qualifications
- Ability to Work in any part of Northern Province.
- 2 years experience in building, Road, Irrigation projects.

**2. கணிய அளவீட்டாளர்கள்** (Quantity Surveyors)
-HNDE / NCT (Q.S) or Equivalent Qualifications
-2 Years Experience in Post Contract Management.

ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் **04.11.2016 வெள்ளிக் கிழமை முற்பகல் 11** மணிக்கு தங்களது கல்வி, அனுபவதராதரப் பத்திரங்களுடன் நேர்முகத் தேர்வுக்குப் பின்வரும் விலாசத்திலுள்ள அலுவலகத்துக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தேசிய நிர்மாணிகள் சங்க அலுவலகம்,
54, மணிக்கூட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
021 221 7567, 077 616 9666

(C/23064)(11,17,18,21)

## விற்பனைக்கு

6",8" கொங்கிறீற் கற்கள், காட்டுக்கல், மண், வீட்டு இடிபாடுகள் என்பன விற்பனைக்குண்டு.

077 606 2747

## அமெரிக்க வீஸா லொத்தர்

**BBS Netting மூலம் விண்ணப்பியுங்கள்**

யாரும் வெற்றி பெறலாம். அதை வீஸாவாக்க முடியுமா? நாங்கள் உலகளாவிய ரீதியில் பல்லாயிரம் வெற்றியாளர்களுக்கு அனுசரணை வழங்கியவர்கள். 14வருட அனுபவமுள்ள எங்களிடம் விண்ணப்பியுங்கள். விண்ணப்பித்த சான்று தரப்படும். 2017ல் வெற்றியை பரிசீலித்துச் சொல்வோம். வெற்றியாளர்க்கு வீஸா பெற வழிகாட்டி, வீஸா இன்ரவியூ திகதி விபரமும் தருவோம். எமது விண்ணப்பங்களை **07/11/2016** முன் கிடைக்க ரூபா15 முத்திரை ஒட்டி சாதாரண தபாலில் அனுப்பவும். Email மூலம் விண்ணப்பிக்க bbsnetting@gmail.com
மேலதிக விபரங்களுக்கு 0775811106 (8am - 5pm)

**BBS Netting, 3/14, Pinwatta Road, Dehiwala.**

## UV Water Solution

வீடுகள், அலுவலகங்கள், உணவகங்களுக்கான குடிநீர் சுத்தமான தூய நீராக வேண்டுமா? இப்போது

**குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**

தரமானதும் மலிவானதும் எம்மிடம் மட்டுமே

கழிவு நீர், குடிநீர் பரிகரிப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு எம்மால் வழங்கப்படும்

277, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
077 509 2737

## நல்லூர் பிரதேச சபை
## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2016

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும் கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் செலுத்திப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

01. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: **02.11.2016 தொடக்கம் 22.11.2016 வரை** ( மு.ப 9.00 **தொடக்கம் பி.ப 2.00 மணிவரை)**
02. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி: **23.11.2016 மு.ப 10.00** மணிவரை
03. கேள்வி திறக்கப்படும் திகதி: **23.11.2016 மு.ப 10.30 மணி** (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்).
04. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும்.
06. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் / சீடா (ICTAD/ CIDA) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை **'தலைவர்/செயலாளர், நல்லூர் பிரதேசசபை,கருவப்புலம் வீதி கொக்குவில்** என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப் படும் கேள்விப்பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, **'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கு 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
08. மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

| இல. | வேலை விவரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை – Vat உள்ளடங்கலாக (மில்லியன்) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக் குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|---|
| 1. | பாடசாலை வீதிக்கான பெட்டி மதகு கட்டுமான வேலை. | 0.32 | 3500.00 | 1000.00 | M 9/C 10 |
| 2. | சீக்கோ வீதிக்கான மதகு கட்டுமான வேலை. | 0.27 | 3000.00 | 1000.00 | M 9/C 10 |

(சி/23063)(11,17,18,21)

**செயலாளர், நல்லூர் பிரதேசசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பெயர்ப்பட்டியல் விவரம் அடுத்தவாரம் இணையத்தளத்தில்

யாழ்ப்பாணம், நவ.2
2016ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் விவரங்களை எதிர்வரும் 6ஆம்திகதியளவில்இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என்று தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவுகள் கிராம அலுவலர்களின் ஊடாகப் பெறப்பட்டுள்ளன. அவை தொடர்பில் கிராம அலுவலர்களுக்கு வாக்காளர்களின் விவரங்கள் தொடர்பில் வரைவுகள் அனுப்பப்பட்டு, அவற்றில் ஏதாவது பிழைகள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அவைகள் திருத்தப்பட்டன. இந்த மாத நடுப்பகுதியில் அல்லது மாத இறுதியில் இந்த ஆண்டுக்கான வாக்காளர்களின் விவரங்கள் முழுமைப்படுத்தப்படும்.

வாக்காளர்களின் விவரங்கள் வெளியிடப்பட்ட பின்னர் எவ்வித மாற்றங்களையும் செய்ய முடியாது என்ற காரணத்தால் விவரங்கள் தொடர்பில் மிக உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது. இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்ட பின்னர் வாக்காளர் பட்டியலில் ஏதாவது பிழைகள் இருப்பின் பிரதேச கிராமஅலுவலரின் உதவியுடன் அவற்றைத் திருத்திக்கொள்ள முடியும்.

எனவே வாக்காளர் பட்டியல் இறுதிப்படுத்தப் படுத்துவதற்கு முன்னர் அனைவரும் தங்களது வாக்காளர் பட்டியலில் தவறுகள் இருப்பின் திருத்திக்கொள்வது கட்டாயமாகும் என்று தேர்தல்கள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

(வ-8)

# வடக்கு மருத்துவ அதிகாரிகள் இன்று வவுனியாவில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், நவ. 2
இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைக்க வேண்டாம் என்பதை வலியுறுத்தி வடக்கு மாகாண வைத்திய அதிகாரிகளால் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப் போராட்டம் இன்று நண்பகல் 12 மணியளவில் வவுனியாவில் நடைபெறவுள்ளது.

'இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு அரசியல் அழுத்தங்கள் அதிகரித்துவருவதைக் கண்டித்தும், தனியார் மருத்துவக் கல்லூரி அமைக்கவேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்தும் முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டமானது வவுனியா வைத்தியசாலையில் இருந்து ஆரம்பமாகி நகரின் ஊடாக மீண்டும் வைத்தியசாலையை வந்தடையும்.

பொதுமக்களின் வைத்திய சேவைகள் பாதிக்கப்படாமல் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இலங்கை மருத்துவச் சபை மீது பிரயோகிக்கப்படும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத அழுத்தங் களுக்கு எதிராக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் நாடு தழுவிய கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை நண்பகல் 12 மணியளவில் ஒழுங்கு செய்து நடத்தவுள்ளனர். அதன் ஓர் அங்கமாக வடக்கு மாகாணத்தில் பணி புரியும் வைத்தியர்கள் வவுனியா பொது வைத்தியசாலையில் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவர் என வடக்கு மாகாண அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி த.காண்டீபன் தெரிவித்தார்.

(த-7-9)

## பொலிஸாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரவலாக பின்பற்றப்படுவதை உறுதியாகின்றது. பயங்கரவாதத் தடைச்சட்டமே அதிகளவுக்கு பொலிஸார் சித்திரவதைகளை மேற்கொள்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறு ஐ.நா. அமர்வுக்கு முன்வைத்துள்ள அறிக்கையில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. நவம்பர் 7ஆம் திகதி முதல் ஒரு மாத காலத்துக்கு சித்திரவதைக்கு எதிரான ஐ. நா. குழு இலங்கை உட்பட பல நாடுகளில் சித்திரவதைகள் பின்பற்றப்படுவது குறித்து ஆராயவுள்ளது.

அந்த அமர்வுக்கு இலங்கை மனித உரிமை ஆணைக்குழு முன்வைத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள சில முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையில் சித்திரவதைகள் தொடர்பில் 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுகளில் இதுவரையில் 420 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இதில் மனித உரிமை ஆணைக்குழுவின் மட்டக்களப்புஅலுவலகத்துக்கு 2015ஆம் ஆண்டு ஏழு முறைப்பாடுகளும்,இந்த ஆண்டில் 5 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன. யாழ்ப்பாண அலுவலகத்துக்கு இரண்டுமுறைப்பாடுகள் கிடைத்துள்ளன. திருகோணமலை அலுவலகத்துக்கு இரண்டு ஆண்டிலுமாக ஐந்து முறைப்பாடுகளும்,வவுனியா அலுவலகத்துக்கு 14 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.அநுராதபுர அலுவலகத்துக்கு அதிகளவில் 54 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இந்த முறைப்பாடுகள் இலங்கையில் சித்திரவதை பரவலாகபின்பற்றப்படுவதை புலப்படுத்தியுள்ளன.களவு, போதைப் பொருள் வைத்திருந்தமை, குடும்பத் தகராறு போன்ற குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டவர்களும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுகின்றனர்.சமூகத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள வறிய மக்களே அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் தனிப்பட்ட பழிவாங்கலுக்காகவும் சித்திரவதையைப் பயன்படுத்துகின்றனர். விசாரணைகளின் போது மாத்திரமன்றி கைதுசெய்யும் போதும் சித்திரவதைகளைப் பொலிஸார் பயன்படுத்துகின்றனர்.

சந்தேகநபரை அல்லதுகைதுசெய்யப்பட்டவரை நிர்வாணமாக்கித் தாக்குவது, தடிகள், பொல்லுகள், இரும்புகளை பயன்படுத்தித் தாக்குவது உட்பட பலவகையான சித்திரவதை முறைகள் பொலிஸாருக்கு எதிராகப் பதிவாகின்றன.

அதிகளவுக்கு பொலிஸார் சித்திரவதைகளை மேற்கொள்வதற்கு பயங்கரவாதத் தடைச்சட்டமே காரணமாக அமைந்துள்ளது. மே மாதம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படுபவர்கள் தொடர்பில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் குறித்து இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வழிகாட்டுதல்களை வழங்கியபோதிலும், எமக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகள் அவை பின்பற்றப்படுவதில்லை என்பதை நிரூபித்துள்ளன.

அறிவிக்கப்படாத தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டமை குறித்த முறைப்பாடுகள் எமக்கு கிடைத்துள்ளன. இது குறித்த விசாரணைகளின் போது அவை இரகசிய முகாம்கள் அல்ல பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் முகாம்கள் என்பது எங்களுக்குத் தெரியவந்தது.

2016ஆம் ஆண்டு ஏப்ரலிற்குப் பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 13 பேர் சித்திரவதைகள் குறித்து எங்களுக்குத் தகவல் வழங்கியுள்ளனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மு/ விசுவநாதர் ஆரம்பப் பாடசாலை மாணவன்
செல்வன் முகுந்தன் சயன்
2016 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 175 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 10 ஆவது நிலையைப் பெற்று சித்தியடைந்து 31.10.2016 அன்று



கொழும்பில் நடைபெற்ற கௌரவிப்பு நிகழ்விலும் விருதினைப் பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவருக்குக் கற்பித்த ஆசிரியருக்கும் நன்றி கூறுகின்றோம்.

மகிழ்ந்து வாழ்த்துவோர்:
கோபிகா அக்கா,பெரியப்பா, பெரியம்மா,
விசுவமடு.
(தெ/5784)(02.21)

பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ர வித்தியாலய மாணவன்
தயாபரன் ஷந்தோஸ்
2016 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் 173 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையயிட்டு வாழ்த்துவதோடு அத்துடன் அவர் இப் பரீட்சையில் சித்தியடைவதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.
வாழ்த்துவோர்: குடும்பத்தினர்.
(C 22916) (16,17,19)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை மாணவியும், உதயராசா சுபாஜினி தம்பதிகளின் செல்வப் புதல்வியுமாகிய
உ.பிரணவிகா
2016 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையயிட்டு அவர் கல்வியில் மேலும் பல சிறப்புக்களையும், பட்டங்களையும் பெற்று முன்னேற லட்சுமி நாராயணன் அருளை வேண்டிப் பாராட்டுவதோடு இவரின் வெற்றிக்கு உழைத்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அன்பொளி ஆசிரியர்கள், சிவபுத்திரன் ஆசிரியர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாராட்டி வாழ்த்துவோர்:-
அப்பா,அம்மா
அண்ணா (கவிநிலவன்),
அம்மப்பா, அம்மம்மா (முள்ளியவளை),
அச்சாமாமா குடும்பம் (கொழும்பு),
அப்பம்மா, சித்தப்பா குடும்பம்
(குமுழமுனை)

68D, கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு தேவை**

பிரதானவீதி, (Main Steet) வீடு வாடகைக்கு தேவை. ஆஸ்பத்திரி வீதி விரும்பத்தக்கது.
077 3627055, 077 4682951

**ஆசிரியர் தேவை**

பிரபல ஆங்கில பாடசாலைக்கு Elacutionஆசிரியர் தேவை.
தொடர்பு - 077 3627055,
077 4682951

**விற்பனைக்கு உண்டு**

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கில் வீட்டுடன் சகல வசதிகள் கொண்ட கடை விற்பனைக்குண்டு.
வாகனத் தரிப்பிடம் உண்டு.
(J 5802) (16,17,19)
077 0637328

**2017 A/L மின்னியல்**

By.M.கருணாநிதி B.Sc (Spl)
Sat,Sun - 10.00 Am
ஆரம்பம்: 05.11.2016 சனி
(J 5807) (16,17,19)
SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

கோட்டிபதி
சீட்டிழுப்பு வாரம்: 59
சீட்டிழுப்பு திகதி 01.11.2016
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 75,740,080/=
I 12 21 51 52

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 510
சீட்டிழுப்பு திகதி 2016.11.01
வெற்றி இலக்கங்கள்
16 38 55 60 L
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 16,552,280/=

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 01.11.2016
வெற்றி வாரம் 2051
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
31 32 49 54
வெள்ளிக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4, 794 420/=

வெற்றி இலக்கங்கள்
54 77
டபள் சான்ஸ்

# ஆவாக் குழுவை அழிக்கவேண்டும்

## இராணுவப் புலனாய்வுப் பிரிவிடம் கோருகிறது பொதுபல சேனா

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களால் உருவாக்கப்பட்டுள்ள ஆவா குழுவில் மிகவும் ஆபத்தானவர்கள் விரைவில் வெளியில்வருவார்கள். ஆவாகுழுவை அழித்தொழிக்க இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கேட்டுள்ளார். சுயசிந்தனையற்ற இந்த அரசின் செயற்பாட்டினாலேயே இன்று ஆவா, கியா போன்ற புனர்வாழ்வு பெறாதவர்களின் குழுக்கள் வடக்கில் உருவாகி இருக்கின்றன. இதனால் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் நாட்டைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பிலிப்பைன்ஸ் புதிய ஜனாதிபதியை முன்னுதாரணமாகக் கொண்டு மனித உரிமைகளை மறந்து விட்டு ஆவா போன்ற குழுக்களை உடனடியாக அழித்து விடுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (வ-5)

## மாணவர்களின்...

கிடைக்கும். அதன் பின்னர் கொல்லப்பட்ட மாணவர்களுக்கு நட்ட ஈட்டுத் தொகை எவ்வளவு வழங்குவது என்பது பற்றித் தீர்மானிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார் என மாணவர் பிரதிநிதிகள் கூறினர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன், கஜன் ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி நள்ளிரவு கொக்குவிலில் பொலிஸாரின் துப்பாக்கில் சூட்டில் கொல்லப்பட்டனர். கொலைக் குற்றச் சாட்டில் 5 பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மாணவர்கள் கொல்லப்பட்டதையடுத்து யாழ். பல்கலைக்கழக அனைத்து பீட மாணவர்களும் கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்தனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாட்டையும் மாணவர் முடக்கினர். இதனையடுத்து அங்கு சென்ற அமைச்சர் சுவாமிநாதனுடன் துணைவேந்தர் மற்றும் மாணவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர். ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்தால் போராட்டத்தைக் கைவிடுவதாக மாணவர்கள் கூறினர். அதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்ததை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது. எனினும் கற்றல் செயற் பாடுகளை மாணவர்கள் தொடர்ச்சியாகப் புறக்கணித்திருந்தனர்.

நேற்று ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சுவாமிநாதன் ஆகியோரைச் சந்தித்தனர் மாணவர்கள். இதில், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர், மாணவ ஆலோசகர்கள், கலைப்பீட பீடாதிபதி, விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதி மற்றும் மாணவர் பிரதிநிதிகள் 15 பேர் கலந்து கொண் டனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த மாணவர் பிரதிநிதிகள்,

கொல்லப்பட்ட மாணவருக்கான இழப்பீடு, மாணவர் பாதுகாப்பு, இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் தடுத்தல், நீதியான விசாரணை ஆகிய கோரிக்கைகளை ஜனாதிபதிதரப்பிடம் முன்வைத்தோம்.

நீதிமன்றில் குற்றப்பத்திரிகை பொலிஸாரினால் தாக்கல் செய் யப்பட்ட பின்னர் சட்டரீதியாக நடவடிக்கை எடுப்பதுடன் அவர்களின் குடும்பத்தினருக்கு உரிய இழப்பீடு வழங்குவோம் என ஜனாதிபதி கூறினார். அமைச்சர் சாகல ரட்நாயக்கவுடன் கலந்தாலோசித்து சம்பவம் தொடர் பில் அறிக்கை ஒன்றையும் கோர வுள்ளதாக அவர் குறிப்பிட்டார். சம்பவம் தொடர்பில் அனைத்துத் தரப்பினரினதும் விசாரணைகளைத் துரிதப்படுத்த உத்தரவிடுவதுடன் நீதியான விசாரணை இடம்பெறும். இனி வரும் காலங்களில் மாணவர்கள் மீது இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாது தடுப்பதுடன், மாணவர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி உறுதியளித்தார். பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கப்படுவதற்கு முன்னர், அவர்களுக்குத் தற்போது என்ன அத்தியாவசிய தேவைகள் உள்ளதோ அவை நிறைவேற்றப்படும். எனினும் இந்த உதவிகளுக்கும் நட்டஈட்டுக்கும் தொடர்பில்லை என்றும் ஜனாதிபதி எம்மிடம் தெரிவித்தார் - என் றனர்.

மாணவர்களின் கொலைக்கான விசாரணையின் நம்பகத் தன்மையை உறுதி செய்வதோடு விசார ணைகளைக் காலம் கடத்தாது விரைவாக மேற்கொள்வதற்கான ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தமது தரப்பால் கோரப் பட்டதாக யாழ்.பல்கலைக் கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

மாணவர்களின் விடயத்தில் தனியான குழுஅமைத்துவிசாரணை மேற்கொள்வது தொடர்பில் ஆராய்வதாகவும் இந்த விடயத்தில் மாணவர்களை அடிக்கடி சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகவும் தெரிவித்ததோடு, உயிரிழந்த மாணவர்களுக்கான நட்டஈடு தொடர்பில் நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரே கூறமுடியும் என்பதால் அந்தக் குடும்பங்களுக்கான உடனடித் தேவைகள் அமைச்சர் சுவாமிநாதன்ஊடாக மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததாகவும் துணை வேந்தர் கூறினார். (த-4-8-101)

## கிழக்கை

மைப்பு மாற்றம் தொடர்பான முக்கிய இந்தக் காலகட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அமைச்சர் ஹக்கீமுக்கு எதிராகக் குறித்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

ஹக்கீமே! கிழக்கை வடக்குக்கு விற்று எம்மை அடிமைகளாக்க வேண்டாம். முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்குத் தகுதி கிழக் கின் எழுச்சியே" என்ற வாசகங்கள் இந்தச் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

இந்தச் சுவரொட்டிகளுக்கு எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை.

எனினும் இந்தச் சுவரொட்டிகள் கிழக்கில் புதிதாக உதயமாகியுள்ள அமைப்பினால் ஒட்டப்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமை கிழக்குக்கு வேண்டும் எனும் கோசத்தை முன்வைத்துக் கிழக்கின் எழுச்சி என்ற அமைப்பு அண்மையில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-30)

## 124 கிலோ...

இந்தியாவிலிருந்து கஞ்சா கடத்தப்பட்டு வருவதாகச் சிறப்பு அதிரடிப் படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. தகவலுக்கு அமைவாகக் காரைநகர் பிரதேசத்தில் தமது சோதனை நடவடிக்கையைச் சிறப்பு அதிரடிப் படையினர் தீவிரப்படுத்தியிருந்தனர்.

கடற்கரையில் பாதுகாப்பு வலயம் சிறப்பு அதிரடிப் படையினரால் உருவாக்கப்பட்டிருந்ததை அறிந்திராத கடத்தல்காரர்கள் கஞ்சாவைக் கடத்த முற்பட்டபோது மாட்டிக் கொண்டனர். நேற்று அதிகாலை நடந்த இந்தச் சம்பவத்தில், 74 கிலோ கேரளக் கஞ்சாவும், அதனைக் கடத்த முற்பட்ட சந்தேகத் தில் நான்கு பேரும் கைது செய்யப்பட்ட னர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரில் மூவர் வேலணைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் கள் என்றும், ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர் என்றும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கடத்தப்பட இருந்த 50 கிலோ கேரளக் கஞ்சா, வவுனியா மாவட்டத்தின் தாண்டிக்குளம் பிரதேசத்தில் வைத்துப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. பொலிஸார் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட சோதனைநடவடிக்கையின் போதே கஞ்சா பிடிபட்டுள்ளது.

"வழமையான சோதனை நடவ டிக்கையில் ஈடுபட்டபோது சந்தேகத்துக்கிடமான வாகனமொன்றை நிறுத்திச் சோதனையிட்டனர் பொலிஸார். இதன்போது அந்த வாகனத்தில் சுமார் 50 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மறைக்கப்பட்டிருந்தது அவ தானிக்கப்பட்டது. கஞ்சாவைக் கைப்பற்றிய சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது செய்யப்பட்டனர். அத்தோடுவாகனமும்பொலிஸ் நிலையத்திதுக்கு கொண்டுவரப்பட்டது. விசாரணைகளின் போது யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு எடுத்து செல்லப்படவிருந்த கேரளக் கஞ்சா என்பது தெரிய வந்துள்ளது" என்று வவு னியா பொலிஸார் தெரிவித்தனர். (த-5-21-101-106)

## நிபந்தனை...

வழங்கப்பட்டாலும், அவை ஆறு மாத காலத்திற்கு ஒரு தடவை மீளாய்வுக்கு உட்படுத்தப் பட வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவினரிடம் வலியுறுத்தியுள்ளது. இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ்வரிச் சலுகையை வழங்குவதா இல் லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக, ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு வருகை தந்திருந்தனர். இந்தக் குழுவினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும் இடையில், நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலை வரின் அலுவலகத்தில் நேற்றுக் காலை சந்திப்பு நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டார்.

சந்திப்புத் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்ததாவது:

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் நேரடியான ஆய்வு மேற்கொள்வதற்கே ஐரோப்பியக் குழுவினர் வந்திருந்தனர். இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படுவதை நாம் விரும்புகின்றோம்.

அவ்வாறு வழங்கப்பட்டால், என்ன காரணத்திற்காக முன்னர் மீளப் பெறப்பட்டதோ அந்தக் காரணங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள னவா என்பது தொடர்பில் ஆராய வேண்டும். முக்கியமாக மனித உரிமை விடயங்கள் தொடர்பில் கரிசனை செலுத்தவேண்டும்.

தற்போது கூட, பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புதிய சட்டம் மிக மோசமானது. அதனைக் கொண்டு வர முடியாது. இந்த விடயங்களையும் சுட்டிக்காட்டினோம். அது மட்டுமல்ல, மிகப் பெரிய விடயங்கள் இன்னமும் செய்து முடிக்கப்படவில்லை.

பொறுப்புக் கூறல் விவகாரம், புதிய அரசமைப்பு மாற்றம் என்பன இன்னமும் முழுமை பெறவில்லை. அவை எந்தளவு தூரத்துக்கு மாற்றம் பெறுகின்றது என்பது அவதானிக்கப்பட வேண் டும்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்பட்டால், ஆறு மாத காலத்துக்கு ஒரு தடவை தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும். அத்துடன் நிபந்தனைகளுக்கு அமைவாகவே ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை வழங்கப்படவேண்டும். இதனை அவர்களிடம் வலியுறுத் தினோம் - என்றார். (த-5)

**ஆசிரியர் தேவை**

பிரபல தனியார் பாலர் பாடசாலைக்கு மானிப்பாய், யாழ்ப்பாணம், கோப்பாய் ஆகிய இடங்களில் கடமையாற்றக்கூடிய [illegible]
தொடர்பு - 077 3627055,
077 4682951

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண மரநடுகை மாதம்

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்."
- வறன் பஃவெற் (அமெரிக்கத் தொழிலதிபர்)

கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"



## கரைதுறைப்பற்று கலாசார விழா

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கலாசார பெருவிழா பிரதேச செயலாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது.

மாஞ்சோலை வைத்தியசாலைக்கு முன்னர் இருந்து பேரணியாக ஆரம்பித்து வித்தியானந்தக் கல்லூரி (தேசிய பாடசாலை) மைதானத்தில் விழா முடிவடைந்தது.

பேரணியில் பிரதேச பண்பாட்டு கலாசார, தொழில் அம்சங்களைப் பிரதிபலிக்கும் ஊர்திகள் பவனிவந்தன. வரலாற்றுப்பெருமை மிக்க 'யானைகட்டிய அரியாத்தை' கதாபாத்திரத்தை வர்ணித்து யானை ஒன்று அரியாத்தையுடன் பவனி வந்தது.

கரைதுறைப்பற்று பிரதேச கலாசாரப்பேரவையால் 2016 கலாசாரவழாவில் அறிமுகம் செய்யப்பட்டு வருடம்தோறும் வழங்கபடவிருக்கும் முல்லைப்பேரொளி விருது இவ்வருடம் 24 கலைஞர்களுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது

நிகழ்வில் வடமாகாண முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன் கலந்து கொண்டார். பிரதேச பாரம்பரிய நிகழ்வுகள் அரங்க நிகழ்வுகளாகவும் நடைபெற்றன.

(ற-433)

### சொந்த மண் சொந்த மரங்கள்

# மர நடுகை மாதம் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, நவ.2

'சொந்த மண் சொந்த மரங்கள்' எனும் கருப்பொருளில் வடக்கு மாகாண சபையால் முன்னெடுக்கப்படும் மர நடுகை மாத ஆரம்ப நிகழ்வு நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது.

கிளிநொச்சி இரணைமடு இடதுகரை வாய்க்கால் வீதி, மகிழங்காடு, கோவிந்தன் கடைச்சந்தியில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மர நடுகை மாதத்தை ஆரம்பித்தார்.

வடக்கு மாகாண சபையின் சுற்றுச் சூழல் அமைச்சால் வருடாந்தம் கார்த்திகை மாதம் மர நடுகை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு மர நடுகை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆண்டுக்கான மரநடுகை மாதம் 'சொந்த மண் சொந்த மரங்கள்' எனும் கருப்பொருளில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூர் மரங்கள் உயிர்ச் சூழலின் உயிர்நாடி எனும் வகையில் 'ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்' என்ற வாசகத்துடன் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மர நடுகை செயற்படுத்தப்படவுள்ளது.



ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், கல்வி அமைச்சர் குருகுலராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், மாகாண எதிர்க் கட்சி தலைவர் தவராசா, மாகாண சபை உறுப்பினர்கள், அமைச்சின் செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சுந்தரம் அருமைநாயகம், அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ற-21-34-35)

## பொலிஸ் சாவடி அமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்பகுதியில் பொலிஸ் சாவடி ஒன்றை அமைக்குமாறு வைத்தியசாலை நிர்வாகத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் நோயாளர்களே இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மந்திகை ஆதார வைத்தியசாலை வளாகத்துக்குள் நேற்று நோயாளர் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்கான சம்பவத்தையடுத்தே இவ்வாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

தற்போது வைத்தியசாலை பொலிஸ் சாவடி வைத்தியசாலையின் பின்பகுதியில் உள்ள கட்டடமொன்றில் இயங்கின்றது. முன்பகுதியில் சம்பவம் இடம்பெற்ற பின்னரே பொலிஸார் வந்து சேர்கின்றனர். கடந்த வாரம் வைத்தியசாலை பணியாளர்கள் வெளியாள்களால் தாக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையின் நோயாளர்கள் பணியாளர்களின் நலன்கருதி உடனடியாக வைத்தியசாலை வளாகத்தின் முன்பகுதியில் பொலிஸ் சாவடி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொலிஸ் சாவடியை அமைப்பதற்கான இடம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்டுள்ளது. கட்டடம் அமைப்பதற்கான நிதி உதவியை, சுகாதார அமைச்சிடமும் வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்திடமும் கோரியுள்ளோம் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(ற-9)

# எமது மண்ணுக்குரிய மரங்கள் பாரம்பரியத்தை பறைசாற்றும்

### மரநடுகை மாத ஆரம்ப நிகழ்வில் வடக்கு முதலமைச்சர் உரை

கிளிநொச்சி, நவ.2

கார்த்திகை மாதத்தில் எம் மண்ணுக்குச் சொந்தமான மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து மர நடுகை செய்யத் தீர்மானிக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் வருடந்தோறும் இந்த மாதத்தில் இந்தப் புனித கைங்கரியத்தில் நாம் ஈடுபடுகின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மர நடுகை மாத ஆரம்ப நிகழ்வு நேற்று கிளிநொச்சி, இரணைமடு வாய்க்கால் வீதி, கோவிந்தன் கடைச் சந்தியில் நடத்தப்பட்டது. அதில் வடக்கு முதலமைச்சர் உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டுக்குரிய கருப்பொருள் 'சொந்த மண் சொந்த மரங்கள்' என்பதாகும். இந்த நாட்டுக்கு மட்டுமே சொந்தமான மரங்கள் பல உண்டு. பிற நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்டு இங்கு விருத்தி அடைந்துள்ள மரங்களும் உள்ளன. அவற்றைவிட இங்கு பாரம்பரியமாக விருத்தியடைந்து வந்துள்ள ஆனால் பிறநாடுகளிலும் அவ்வாறே வளரும் மரங்களும் உள்ளன. இந்த வருடம் எம் மண்ணுக்கே சொந்தமான மரங்களை நடுவோம் என்ற



அடிப்படையில் அவற்றை அடையாளம் கண்டு மாகாணம் முழுவதும் நடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இவ்வாறான எமது பாரம்பரிய தருக்களே எமது மண்ணின் செழுமையை இற்றைவரை தக்க வைத்திருப்பவை. அவற்றை அடையாளம் கண்டு மீண்டும் மீண்டும் நடுவதால் நாம் எமது பாரம்பரியத்தைத் வலியுறுத்துகின்றோம். வரலாற்றை வளம்படுத்துகின்றோம். எமது வாழ்விடங்களில் செழுமையான அடையாளச் சின்னங்களை வாரி வழங்கி விருத்தியடைய வைத்து, எமது நிலங்களை வளம் பெறக் காக்கின்றோம். நடுகை செய்தால் மட்டும் போதாது. அவற்றைத் தொடர்ச்சியாகப் பராமரித்துவரவேண்டும், மரங்களை ஓங்கி வளரச் செய்ய வேண்டும். எமது மண்ணின் பசுமையைப் பாதுகாக்க முன்னிற்க வேண்டும். நாங்கள் இந்தப் புனித கைங் கரியத்தில் பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், வணக்க தலங்கள், இளைஞர் அமைப்புக்கள் என்று பலரின் உதவியையும் இணைத்துள்ளோம். பொதுமக்களின் பங்குபற்றலை விசேடமாகக் கோரியுள்ளோம்.

குறைவான மழைபெறும் இடங்களில் வடமாகாணம் ஒன்றாகும். நிழல் தரும் மரங்கள் பல வளர்வது அத்தியாவசியமாகின்றது. இராணுவத்தால் பாதுகாப்பு என்று கூறப்பட்டு, மரங்கள் பல வெட்டித் தறித்த இந்தப் பிரதேசம் வனாந்தரம் ஆகாது காத்திட நாம் நடும் மரங்கள் உதவி செய்யும்.

மரங்களை நடுவது வெறும் சூழல் பாதுகாப்புக்கு மட்டுமன்று. எமது தேசத்தை, நாட்டை, பாரம்பரியத்தைக் கட்டி எழுப்ப மரங்கள் உறுதுணையாக அமைகின்றன. மக்களைச் சுபீட்சமுடன் வாழ, வளர வழிவகுக்கின்றன. மரங்கள் மனிதர்களின் மாண்பு பெறும் நண்பர்கள். அவற்றை நாட்டிப் பயன்பெறுவோம். "ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம்பெறுவோம்" - என்றார்.

(ற-21-34)

Dialog
Mega அதிர்ஷ்டம்
சனிக்கிழமை இரவு 9.55 க்கு வசந்தம் TV ஊடாக
83 வது வாரத்தின் வெற்றி இலக்கங்கள்
42 31 11 37 70 H
ரூ. 10,000,000/-
Dialog

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து சந்தி கொலை வழக்கு விசாரணை அறங்கூறும் அவை முன் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் 3 வருடங்களுக்கு முன்னர் குடும்பத் தலைவர் ஒருவர் வாளால் வெட்டி அசிட் ஊற்றிக் கொலை செய்யப்பட்ட வழக்கின் விசாரணை யாழ்.மேல் நீதிமன்றில் அறங்கூறும் அவை (யுரி சபை) முன்பாக நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த வழக்கு விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கும்வரை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் வைத்து அப்துல் காதர் நவாஸ் என்பவர் வாளால் மோசமாக வெட்டப்பட்டு அசிட் ஊற்றப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் உயிரிழந்தார்.

சந்தேகத்தில் 8 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணைகளுக்காக யாழ். மேல் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்பட்டது. அறங்கூறும் அவை முன்பாக விசாரணை செய்யுமாறு சந்தேகநபர்கள் மேல்நீதிமன்றில் கோரியிருந்தனர். அதன்படி அறங்கூறும் அவை முன்பாக இந்த வழக்கு விசாரணைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டன.

அறங்கூறும் அவை நேற்றைய தினம் தெரிவு செய்யப்பட்டது. பதிவாளர் சீட்டு குலுக்கல் மூலமாக அவையில் உள்ளடங்கவுள்ளவர்களைத் தெரிவுசெய்தார். அந்த அவையில் 7 பேர் உள்ளடங்கினர். அந்த அவைக்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் சிலர் தாமாகவே விலகிக்கொண்டனர். எதிரிகளுக்கோ சாட்சிகளுக்கோ அறிமுகமில்லாதவர்களாக அறங்கூறும் அவையில் உள்ளவர்கள் காணப்படவேண்டும். அவ்வாறு யாராவது இருந்தால், இருதரப்பில் எவராவது ஆட்சேபனை தெரிவிக்கமுடியும். நேற்று அறங்கூறும் அவைக்கு 4 ஆண்களும் 3 பெண்களுமாக 7 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதன்பின்னர் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். கொலை என்றால் என்ன, கைமோசக்கொலை என்றால் என்ன என்பது பற்றிய விளக்கங்களையும், அறங்கூறும் அவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களைத் தவிர, வேறு எவருடனும் இந்த வழக்கு தொடர்பாக கலந்தாலோசிக்க கூடாது எனவும் நீதிபதி மா.இளஞ்செழியன் 7 பேருக்கும் விளக்கமளித்தார்.

அதனைத் தொடர்ந்து சாட்சியப்பதிவு இடம்பெற்றது. சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் அரச சட்டத்தரணி நாகரட்ணம் நிசாந் முன்னிலையாகியிருந்தார். எதிரிகள் சார்பில் 5 சட்டத் தரணிகள் முன்னிலையாகியிருந்தனர். அதனைத் தொடர்ந்து சாட்சியாளர்களின் சாட்சியப் பதிவு ஆரம்பமானது. நேற்று 2 சாட்சிகளின் சாட்சியம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதில் முதலாவது சாட்சியாக கொலை செய்யப்பட்டவரின் மகன் சாட்சியமளித்தார். இரண்டாவது சாட்சியாக கொலை செய்யப்பட்டவரின் மனைவி கண்ணீர் விட்டவாறு சாட்சியமளித்தார். இவ்வாறு பி.ப. சுமார் 4 மணிவரை சாட்சியப் பதிவு இடம்பெற்றது. எதிராளிகள் முன்னிலையாகியிருந்தனர். (வ-4,6)

## நாடகமும் அரங்கியலும் பயிற்சி·முகாம்

யாழ்ப்பாணம், நவ. 2

2016 ஜீ.சி.ஈ. சாதாரணதர பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பரீட்சைக்குத் தோற்றுகின்ற யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான நாடமும் அரங்கியலும் பயிற்சி முகாம் இடம்பெறும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் என். தெய்வேந்திரராஜா அறிவித்தார்.

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட கோப்பாய் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும், நல்லூர் கல்விக் கோட்டத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 16ஆம் திகதி புதன் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கு 17ஆம் திகதி வியாழக் கிழமை யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக்கல்லூரியிலும், காலை 8.30 மணி தொடக்கம் 2 மணி வரை இந்த முகாம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே இந்த முறை பரீட்சைக்குத் தோற்றுகின்ற யாழ். கல்வி வலய பாடசாலைகளில் நாடகமும் அரங்கியலும் கற்கும் மாணவர்களை நாடக பாட ஆசிரியர்களுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். (வ)

## நகையுடன் புதைக்கப்பட்டதால் மாணவி உடல் தோண்டி எடுப்பு

தங்க நகைகளுடன் மயானத்தில் புதைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்ட மாணவியின் உடலம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்றுத் தோண்டி எடுக்கப்பட்டு மீண்டும் புதைக்கப்பட்டது.

சாவகச்சேரி – கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நேற்று முன்தினம் புதைக்கப்பட்ட மாணவி ஒருவரது உடலமே இவ்வாறு மீண்டும் புதைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி கிராம்புவில் பகுதியில் 17 வயது மாணவி அறையொன்றில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். அவரது சாவு தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தைப் புதைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். அதன்படி நேற்று முன்தினம் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் உடலம் புதைக்கப்பட்டது.

நல்லடக்கத்தின் பின்னர் வீடு திரும்பியபோது மாணவியின் உடலில் அணியப்பட்டிருந்த தங்க நகைகள் அகற்றப்படவில்லை எனத் தெரியவந்தது. நீதிமன்ற அனுமதியின்றி சடலத்தைத் தோண்டி எடுக்கக் கூடாது என்பதை அறிந்த உறவினர்கள் நேற்று சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் பொலிஸார் முன்னிலையில் உடலத்தைத் தோண்டி எடுத்து தங்க நகைகளை அப்புறப்படுத்திய பின்னர் புதைக்குமாறு உத்தரவிட்டார். பொலிஸாருடன் மயானத்துக்குச் சென்ற உறவினர்கள் உடலம் புதைக்கப்பட்ட இடத்தைத் தோண்டி உடலத்தை வெளியே எடுத்து தங்க நகைகளை அப்புறப்படுத்திய பின்னர் உடலத்தை மீண்டும் புதைத்தனர். (ற-9)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு அதிகார சபையினால் விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், நவ. 2

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அதன் உதவிப் பணிப்பாளர் கு. நிரஞ்சன் அறிவித்தார்.

விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறை பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர், இருசக்கர மற்றும் முச்சக்கர வண்டி திருத்துநர், அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் போன்ற பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கற்கை நெறிகள் காரைநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது. விண்ணப்பிக்க விரும்புவர்கள் முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாவட்ட அலுவலகத்தில் பதிவுகளை அலுவலக நேரத்தில் மேற்கொள்ளலாம். (வ-10)

## 400 அதிபர்களுக்கு வெளிநாட்டில் பயிற்சி

இலங்கை அதிபர் சேவை தரம் 3 போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்ற 4 ஆயிரத்து 200 அதிபர்களில் 400 பேருக்கு வெளிநாட்டில் பயிற்சி வழங்கப்படுவதாக கொழும்பு கல்வி அமைச்சு அறிவித்தது.

நாடு முழுவதும் இடம்பெற்ற பயிற்சி வகுப்புகளின் பின்னர் நடத்தப்பட்ட பரீட்சையில் அதிகூடிய புள்ளிகள் பெற்ற 400 அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் முதற்கட்டமாக மாகாண ரீதியாக தெரிவு செய்த 200 அதிபர்கள் கட்டம் கட்டமாக வெளிநாட்டில் பயிற்சி பெற அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றனர்.

ஒவ்வொரு கட்டத்திலும் தலா 20 பேர் வீதம் வலய ரீதியாக தெரிவு செய்யப்பட்டு வெளிநாட்டில் தலா ஒரு வார பயிற்சிகள் பெறுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வீட்டுத்திட்டப் பணிகளை பார்வையிட்டார் செயலாளர்

மீள்குடியேற்ற அமைச்சினால் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டப் பணிகளை மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் இந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்வு பிரதேசங்களில் தலா 8 லட்சம் ரூபா செலவில் 3 ஆயிரம் வீடுகள் அமைக்க அனுமதி வழங்கிய நிலையில் பெரும்பாலான பயனாளிகள் தமது கட்டுமான வேலைகளை நிறைவு செய்துள்ளனர். (வ 9)

## வித்தியா படுகொலை வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

புங்குடுதீவு மாணவி கூட்டுவன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட வழக்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு ஊர்காவற்துறை நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது 12 சந் தேகநபர்களும் மன்றில் முற் படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கில் முதலில் கைது செய்யப்பட்ட 9 சந்தேக நபர்களுக்கும் யாழ்.மேல்நீதிமன்றினால் ஏற்கனவே விளக்கமறியல் காலம் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது. மிகுதி 3 பேருக்கும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை மறியல் நீதிவான் மன்றம் நீடித்தது. (வ-4,37)

# உணவக உரிமையாளர்களுக்கு கழிவு முகாமைத்துவ விளக்கம்

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட அனைத்து உணவகங்கள், விடுதிகளில் பாவிக்கப்படும் பொலித்தீன், உணவு சுற்றும் பொலித்தீன் தாள் என்பவற்றால் சூழலுடன், உடல் ஆரோக்கியமும் பாதிப்படைகின்றது. அவற்றை மீள்சூழற்சிக்கு உட்படுத்தும் போது நிதி வீண் விரமாகின்றது. அவற்றைத் தவிர்த்து வாழை இலை அல்லது உரிய முறையில் சுத்தம் செய்யப்பட்ட பாத்திரங்களை பாவிப்பதன் அவசியம் தொடர்பாக உணவகங்களின் உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையில் நேற்று பிற்பகல் யாழ். மாநகர சபை எல்லைக் குட்பட்ட அனைத்து உணவகங்கள், விடுதி உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது. அதில் வைத்திய சுகாதார அதிகாரி திருமதி சிவதாசன், பொறியியலாளர் சுரேஸ் குமார், சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

நாடாளாவிய ரீதியில் உள்ள 23 மாநகர சபைகளில் இருந்தும் நவம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து திண்மக் கழிவுகள் தரம் பிரித்தே பெறப்படுகின்றன. உணவகங்கள், விடுதிகளில் இருந்து பெறப்படும் திண்மக் கழிவுகளும் தரம் பிரித்தே பெறப்படும். திண்மக் கழிவுகளை வீடுகளில் வைத்திருக்க விரும்பாதவர்கள் தரம் பிரிக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளில் அவற்றைப் போடலாம். வீதிகளில் போடுபவர்கள் மீது கடுமையான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டது.

உணவகங்கள், விடுதிகளில் இருந்து பெறப்படும் திண்மக் கழிவுகளில் இருந்து பொலித்தீன், உணவு சுற்றும் பொலித்தீன் தாள் போன்றவற்றை மாநகர சபை மீள்சூழற்சிக்கு உட்படுத்தும் போது பெருந்தொகையான நிதி வீண் விரயமாகின்றது. சுற்றுச்சூழலுக்கும் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உணவு பரிமாறப்படும் சந்தர்ப்பங்களில் பாவிக்கப்படும் பொலித்தீன் வகைகளுக்கு பதிலாக யாழ். மாநகர சபையின் ஆளுகைக்குட்ட அனைத்து கடைகளிலும் இலகுவில் உக்கக் கூடிய பொருள்களைப் பாவிப்பதன் ஊடாக திண்மக் கழிவை முகாமைத்துவம் செய்வதை இலகுபடுத்தலாம்.

உணவு சுற்றும் பொலித்தீன் தாளுக்குப் பதிலாக வாழை இலை அல்லது உரிய முறையில் சுத்தம் செய்யப்பட்ட பாத்திரங்களை பாவிப் பதன் அவசியம் உணவக உரிமையாளர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. அவர்கள் குறித்த நடைமுறையைப்பின்பற்ற இணக்கம் தெரிவித்தனர். (ற-7)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கல்லூரி மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும் என்று பழைய மாணவர் சங்கச் செயலாளர் இ.விஜய் தெரிவித்தார். (வ-10)

## இலவச பற்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், நவ. 2

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இலவச பற்சிகிச்சை முகாம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும் என்று அதன் இணைப்பாளர் தெரிவித்தார். (வ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டை அழற்சி நோயாளர் சிகிச்சை பெறுவதில் சிரமம்

## சாவா. வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் ஆவன செய்யுமாறு கோரி மனு

சாவகச்சேரி, நவ.2

சாவகச்சேரி வைத்தியசாலை யில் சிகிச்சை பெறுவோரில் நீரிழிவு மற்றும் தொண்டை அழற்சி நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவர்கள் தொடர் பரிசோதனைகள் மேற் கொள்வது தொடர்பில் மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு நோயாளர்களால் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியிடம் நேற்று மனு கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

யாழ்.போதனா வைத்தியசாலையில் நடைபெற்ற தொண்டை அழற்சி சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த தென்ம ராட்சி பிரதேச நோயாளர்களின் நலன் கருதி சாவகச்சேரி வைத்தியசாலையில் மாதத்தில் இரு தினங்கள் சிகிச்சைப் பிரிவு இயங்குகின்றது. ஒவ்வொரு கிளினிக் கிலும் 80 நோயாளர்கள் வீதம் பிரிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுகின்றது. நோயாளர்களின் குருதி மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு அதன் பிரகாரம் வைத்திய அதிகாரிகள் சிகிச்சையளிக்கின்றனர்.

பரிசோதனைக்கு தெரிவுசெய்யப்படும் நோயாளர்களில் பிரதி வாரமும் 5 நோயாளர்களின் குருதி மாதிரிகள் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து வரும் அறிக்கையின் பிரகாரம் தொடர்சிகிச்சைவழங்கப்படுகின்றது.

இந்தப் பரிசோதனை தொடராக மூன்றுதடவைகள் செய்யப்படவேண்டும். தனியார் ஆய்வு கூடங் களில் ஒரு தடவை பரிசோதனை செய்ய ஆயிரத்து 200 ரூபா கட்டணமாக அறவிடப்படுகிறது. அதனால் பல நோயாளர்கள் வைத்தியசாலை மூலம் குருதி மாதிரிகள் அனுப்பி அறிக்கை பெறுகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 2017 ஜனவரி வரை தொண்டை அழற்சிக்கான பரிசோதனைக்கு குருதி மாதிரிகள் அனுப்பவேண்டாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் தொடர் சிகிச்சையை மேற்கொள்ளும் நோயாளர்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். அதைக் கருத்தில் கொண்டு, நோயாளர்கள் தொடர் சிகிச்சை பெற மாற்று ஒழுங்கு மேற்கொள்ள வேண் டும் என்று வைத்தியசாலை நிர்வாகத்தினரைக் கேட்டுக்கொள் கின்றோம் – என்றுள்ளது.

தொண்டை அழற்சி நோயாளர் கள் குருதி பரிசோதனைக்கு மாற்று ஒழுங்குகள் செய்து தருமாறு கோரியுள்ளனர். அது தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சுக்கு அறிவித் துள்ளோம். அங்கிருந்து மாற்று ஒழுங்குகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – என்று வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

(ற-9)



## பிரான்ஸ் அமைச்சருடன் மங்கள சமரவீர சந்திப்பு

கொழும்பு, நவ. 2

பிரான்ஸ் நாட்டின் நடுத்தர வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் மார்டீன் பின்வில், அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அயலுறவு அமைச்சில் நடைபெற்றது.

கடந்த 2015ஆம் ஆண்டு நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பிரான்ஸ் நாட்டு அரச பிரதிநிதி இலங்கைக்குப் பயணம் செய்யும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என அயலுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கும், பிரான்ஸுக்கும் இடையில்காணப்படுகின்ற நீண்டகால இருதரப்பு அரசியல் உறவு மற்றும் வர்த்தகத் தொடர்புகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ளும் வகையில் அந்த நாட்டு வர்த்தக இராஜாங்க அமைச்சர் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது வர்த்தக ரீதியிலான முக்கிய அம்சங்கள் ஆராயப்பட்டிருப்பதாக அயலுறவு அமைச்சு மேலும் கூறியுள்ளது.

(து)

## சட்ட ரீதியான புலம்பெயர்வே நடக்க வேண்டும்

### ஐ.ஓ.எம். அமைப்பு தெரிவிப்பு

இலங்கை இளைஞர்கள் பாதுகாப்பற்ற புலம்பெயர்தலை மேற்கொள்ளல்மூலம்பல்வேறுபாதிப்புக்களை அனுபவித்து வருகின்றனர். அது சட்ட விரோதமா னது. இளைஞர்களின் சட்டரீதியான– பாதுகாப்பான புலப்பெயர்வை புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்) ஊக்குவிக்கிறது என அதன் இணைப்பாளர் மேரி தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் திருகோணமலை உப்புவெளி தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சிகளை நிறைவு செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கடந்த காலங்களில் பலர் பாதுகாப்பற்றபுலம்பெயர்வை மேற்கொண்டுள்ளனர். ஆகையால் ஆஸ்திரேலிய அரசின் உதவியுடன் தொழிற்கல்வி ஒன்றை மேற்கொள்வதற்கான நிதியைப் பெற்று நாம் இந்தப் பயிற்சிநெறியை ஆரம்பித்தோம்.

இவ்வாறு பயிற்சியைப் பெற்றவர்கள் இதன்மூலம் சுயதொழில் ஒன்றைச் செய்து சொந்தக்காலில் நிற்கவேண்டும்– என்றார்.

(து-ய-40)

### மத்திய வங்கி பிணை முறி மோசடி

## குற்றவாளிகளைத் தண்டிக்க சுதந்திரக் கட்சி ஒத்துழைப்பு

கொழும்பு, நவ. 2

மத்திய வங்கியில் இடம்பெற்றுள்ள பிணை முறிகள் விற்பனை மோசடி தொடர்பாகக் கோப் குழுவில் பரிந்துரைக்கப்பட்டுள்ள குற்றவாளிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஒத்துழைப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

கட்சித் தலைவரும், ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுமுன்தினம் இரவு கொழும்பிலுள்ள ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது.

மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பிணை, முறிகள் விற்பனையில் இடம்பெற்றுள்ள மோசடிகள் தொடர்பாக கோப் குழுவின் அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, அமைச்சர்களான நிமல் சிறிபாலடி சில்வா, டிலான் பெரேரா, டபிள்யூ.டி.ஜே செனவிரத்ன, லசந்த அலகியவன்ன உள்ளிட்டவர்கள் கோப் குழு தொடர்பான சுதந்திரக் கட்சியின் குழுவில் உள் ளடக்கப்பட்டுள்ளனர்.

(து)

## நியமனமாகி 4 மாதத்துக்குள் 800 ஆசிரியர்கள் இடமாற்றம்

கொழும்பு, நவ. 2

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கற்று, ஆசிரியர்களாக அண்மையில் புதிதாக நியமனம் பெற்றவர்களில் 800 பேர், கடந்த 4 மாத காலத்துக்குள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர் என இலங்கை ஆசியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் புதிதாக சுமார் 3 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றனர். இவ்வாறு நியமனம் பெற்றவர்களே தங்களுக்கு வழங்கப்பட்ட பாடசாலைகளிலிருந்து இடமாற்றம் பெற்றுள்ளனர்.

புதிய ஆசிரியர்களுக்கு இவ்வாறு இடமாற்றம் வழங்கியுள்ளதனால், பல வருடங்களாகத் தூர இடங்களில் ஆசிரியர்களாக பணியாற்றுபவர்கள் இடமாற்றம் பெறமுடியாதுள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(து)

## சிவனொளிபாத மலைக்கு அருகே கட்டப்படும் விடுதி

### உடன் நிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, நவ 2

சிவனொளிபாத மலைக்கு 6 கிலோ மீற்றர் தூரத்தில்–நல்லதண்ணி பீக்பீல்ட் பகுதியில் நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ள விடுமுறை விடுதி நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனதிபதியின் உத்தரவுக்கு அமைய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள் சிலர் நேற்று முன் தினம் அந்தப் பகுதிக்கு சென்று ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள், ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமைய விடுதி நிர்மாணப் பணிகளை நிறுத்த [illegible] வுறுத்தல்கள் வழங்கியதாக குறித்த பகுதியில் உள்ள எஸ்டேட் கண்காணிப்பாளர் தினேஷ் செனவிரத்ன தெரிவித்தார்.

மவுசாகல நீர்த்தேக்கத்துக்கு மேல் பகுதியில் உள்ள மறே நீர்வீழ்ச்சிக்கு அண்மையில் உள்ள விடுதியை உடைத்து, அதற்குப் பதிலாகப் புதிய விடுதி ஒன்றை நிர்மாணிக்கத் தேசிய கட்ட ஆராய்ச்சி நிலையம் மற்றும் அபகமுவ பிரதேச சபையின் அனுமதிகள் பெறப்பட்டிருந்ததாகக் குறித்த எஸ்டேட்டின் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

டுபாய் நாட்டின் வியாபாரி ஒருவருக்குச் சொந்தமான நிறுவனத்தின் பணிப்பாளர்கள் இலங்கைக்கு வரும்போது அந்த வியாபாரிக்குச் சொந்தமான 82 ஏக்கர் தோட்டத்தில் விடுதியை அமைக்கத் திட்டமிட்டிருந்ததாகவும், குறித்த டுபாய் நாட்டின் வியாபாரி இலங்கைக்கு வரும்போது ஹெலி மூலமே பீக்பீல்ட் தோட்டத்துக்கு வருவதாகவும், இதனால் பீக்பீல்ட் தோட்டத்தில் ஹெலியைத் தரையிறக்க ஓடுபாதை ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் பீக்பில்ட் தோட்டத்தின் கண்காணிப்பாளர் கூறியுள்ளார்.

சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளைப் போன்று இது ஒரு ஹோட்டல் திட்டம் அல்ல எனவும், இது ஒரு விடுமுறை விடுதி எனவும், இந்த விடுமுறை விடுதி சிவனொளிபாத மலைக்கோ சிவனொளிபாத வன பகுதிக்கோ அண்மையில் இல்லை எனவும் பீக்பீல்ட் தோட்டத்தின் கண் காணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

குறித்த இடம் தொடர்பில் நல்லதண்ணி வனவிலங்கு காரியாலய அதிகாரிகளினால் ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த இடம்வனவிலங்குவலயத்துக்கோ அல்லது வனப் பகுதிக்கோ சொந்தமானதல்ல எனவும், இந்த இடத்தில் இருந்து பார்த்தால் சிவனொளி பாதமலை தெரிவதில்லை எனவும், வனவிலங்கு அதிகாரிகளினால் தகவல்கள் கண்டறியப்பட்டன.

இதேவேளை–சிவனொளிபாதமலையில் உள்ள வன பாதுகாப்பு பகுதியில் இருந்து 6 கிலோமீற்றர் தொலைவில் உள்ள மரே நீர்வீழ்ச்சிக்கு அருகில் உள்ள பகுதியே தனியாருக்குச் சொந்தமான நிலம் என ஆதாரம் வெளி வந்துள்ளது.

(து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிகரெட் விலை அதிகரிப்பு

கொழும்பு, நவ 2
அனைத்து வகையான சிகரெட்டுக்களுக்கும்நேற்றுமுதல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.
15 சதவீத பெறுமதி சேர் வரி நேற்று முதல் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சிகரெட் ஒன்று 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## பஸ் மிதிபலகை உடைந்து நான்கு மாணவர்கள் காயம்

கொழும்பு, நவ 2
வெள்ளவாய, மல்வத்தாவல பகுதியில் பாடசாலை மாணவர்கள் சிலருடன் பயணித்த தனியார் பஸ்ஸின் மிதிபலகை உடைந்து விழுந்ததில் நான்கு மாணவர்கள் காய மடைந்துள்ளனர்.
குறித்த பஸ் கிரிந்திஓயா நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வெள்ளவாய ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# ஆவா குழுவினரை அடக்க முடியாமை அரசுக்கு வெட்கக்கேடு

## அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, நவ 2
மூன்று தசாப்தகாலப் போரை வென்றெடுத்த இலங்கை அரசுக்கு ஆவா என்ற பெயரில் ஐந்து, ஆறு நபர்களால் வடக்கில் மேற்கொள்ளப்படுகின்ற குற்றச் செயல்களையும், தெற்கில் செயற்படும் பாதாள உலகக் கும்பலையும் ஒழிப்பதற்கு முடியாதிருப்பது வெட்கக் கேடான விடயம் என்று மெகா பொலிஸ் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச் சரும், ஜாதிக ஹெல உறுமயவின் தலைவருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



இந்தக் கும்பல்களுக்குப் பின் னால் அரசியல் தொடர்புகள் காணப்படுகின்றனவா என்ற சந்தேகமும் தனக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கூறி னார்.
ஜாதிக ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவருகின்ற ஆவா குழுவின் அட்டகாசம் தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க கருத்து வெளியிட்டார்.
அவர் தெரிவித்ததாவது:
பீரங்கிகள், ஏவுகணைகள் காணப்பட்ட யாழ்ப்பாணத்தில் 25 ஆயிரம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த எங்களுக்கு ஆவா என்ற குழுவிலுள்ள ஐந்து ஆறு நபர்களைப் பிடிக்க முடியாதிருக்கிறது. 23 வயதுடைய குமார் ரட்ணம் என்கிற ஒரு நபரே ஆவா குழுவை நடத்துபவர். வாள், கத்திகளையும், மோட்டார் சைக்கிள்களையும் பயன்படுத்தி இந்தக் குழு உருவாக்கப்பட்டுள்ளது.
வடக்கில் கப்பம் கேட்பது, கைகால்களை வெட்டுவது போன்று இந்தக் குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்தி அங்கு சமாதானத்தை ஏற்படுத்த எமக்கு முடியாதிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மக்கள் மாலை 6.30 மணிக்குப் பின்னர் அச்சத்தினால் நித்திரைக்குச் சென்று விடுகின்றனர். பீரங்கிகளைத் தோற்கடித்த நாட்டுக்கு இந்தச் சிறிய பிரச்சினையைத் தீர்க்கமுடியா திருப்பது பிரச்சினையே. அதே போன்று தெற்கிலுள்ள மட்டக்குளி, சமிட்புர, கொழும்பு ஆகிய பகுதிகளில் செயற்படுகின்ற பாதாள உலகக் குழுக்களை ஒழிப்பதற்கும் போரையே முடிவுக்குக் கொண்டுவந்த எம்மால் முடியாதிருக்கிறது.
இந்த விவகாரத்தில் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாகச் சந்தேகம் எழுகின்றது. சிலர் மீது விரைவான வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்ற அதே வேளை வேறு சிலர் மீது வழக்கு தாக்கல் செய்யப்படுவதில்லை - என்றார். (இ)

# சிறுபான்மையினரை சீண்டவே மாணிக்கமடுவில் புத்தர் சிலை

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவர் கண்டனம்

அம்பாறை, நவ.2
சிறுபான்மைச் சமூகங்களைச் சீண்டி நல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முனையும் செயற்பாடாகவே மாணிக்கமடுவில் புத்தர் சிலை பலவந்தமாக நிறுவப்பட்டுள்ளது. வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்க விடயம் இதுவாகும்.
இவ்வாறு அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத் தலைவரும் தொழிற் சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் தெரிவித்தார்.
அம்பாறை மாவட்டத்தில் பௌத்தர்கள் வாழாத தமிழ் மக்கள் வாழும் பழமை வாய்ந்த இறக்காமம் மாணிக்கமடு கிராமத்தின் மாயக்கல்லிமலையில் புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.
அது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கடந்த மகிந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பௌத்தர்கள் இல்லாத இடங்களிலெல்லாம் திட்டமிட்டு புத்தர் சிலைகளும் விகாரைகளும் முளைத்து வந்த வரலாறு நல்லாட்சியிலும் தொடர்வது கண்டிக்கத்தக்கதும் கவலையளிப்பதுமாகவுமுள்ளது.
அன்று பௌத்த பேரினவாத செயற்பாடுகள் ஊக்குவிக்கப்பட்டதோடு மதவெறிகொண்ட அமைப்புக்கள் தீனி போட்டும் வளர்க்கப்பட்டன. அந்த வெறியாட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென்ற எதிர்பார்ப்புடனேயே சிறுபான்மை சமூகங்கள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதில் முக்கிய பங்காளர்களாயினர்.
ஆட்சி பீடமேறியுள்ள நல்லாட்சி அரசிலும் பௌத்த மேலாதிக்க இனவெறிச் செயற்பாடுகள் தொடர்கதையாகி வருவது சிறுபான்மை மக்கள் நல்லாட்சி மீது கொண்ட நம்பிக்கைக்கு குந்தகமாகவே அமைந்துள்ளன.
இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மாணிக்க மடு எனும் கிராமம் பழம்பெரும் தமிழ்க் கிராமமாகும்.
அயலில் முஸ்லிம் பிரதேசங்களையும் கொண்ட இந்தக் கிராமத்தில் வறுமைக்கோட்டுக்குள் வாழும் 150க்கு மேற்பட்ட தமிழ்க் குடும்பங்கள் வாழ்கின்றன.
கடந்த சனிக்கிழமை அந்தப் பகுதிக்கு திடீரென பொலிஸ் பாதுகாப்புடன் வந்த குழு ஒன்றே இந்தக் கிராமத்திலுள்ள மாயக்கல்லிமலை எனும் மலையில் புத்தர்சிலையை நிறுவியது.
இறக்காமம் பிரதேச செயலாளரின் அனுமதியின்றி பலவந்தமாகக் குறித்த புத்தர்சிலை நிறுவப்பட்டு பௌத்த கொடிக் கம்பங்களும் அந்த இடத்தில் நடப்பட்டுள்ளன.
இந்த நடவடிக்கை இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளதுடன் பிரதேசத்தில் அச்சத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.
இந்த செயற்பாடு சிறுபான்மைச்சமூகங்களைச் சீண்டிநல்லிணக்கத்தைச் சீர்குலைக்க முற்படும் கண்டிக்கத்தக்க விடயமாகும். இந்த அத்துமீறிய அடாவடிச் செயற்பாட்டை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளமுடியாது. இந்தச் செயற்பாட்டுக்கு அரசில் அங்கம் வகிக்கும் அம்பாறை மாவட்டத்திலுள்ள முக்கிய அரசியல்வாதி ஒருவர் பக்கபலமாகவிருக்கின்றார் என்றும் மக்கள் பேசிக்கொள்கின்றனர்.
இந்த விடயத்திற்கு தமிழ், முஸ்லிம் அரசியல் தலைமைகள் காத்திரமான நடவடிக்கை எடுப்பதுடன் நல்லாட்சி அரசுக்கு அழுத்தம் கொடுத்து பலவந்தமாக நிறுவப்பட்ட சிலையை அகற்றுவதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும்.- என்றுள்ளது. (ற-30)






இலங்கை மின்சார சபையின் 47ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வவுனியா காரியாலயத்தில் குருதிக் கொடை வழங்கப்பட்டது. வவுனியா பிரதேச மின்சார சபையின் பிரதம பொறியியலாளர் தலைமையில் நடைபெற்ற குருதிக் கொடை முகாமில் மின்சார சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். வவுனியா பொது வைத்தியசாலை இரத்த வங்கியில் பற்றாக்குறை காணப்படுகின்றது என்று அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்தில் இருந்து

# தாயகம் திரும்புவோரின் கொடுப்பனவை அதிகரியுங்கள்

## வட மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் மீள்குடியேற்ற அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.2

இந்தியாவில் அகதிகளாகத் தங்கியிருந்து தற்போது நாடு திரும்புவோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனிடம் கோரினார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

தமிழ்நாட்டில் மிக நீண்டகாலமாக அகதிகளாக தங்கியிருந்து, மீண்டும் தாயகம் திரும்பும் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரதானமான சில பிரச்சினைகள் குறித்துத் தங்களின் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன். 2011ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப்பகுதியில் ஆயிரத்து 882 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 165 இலங்கை தமிழ் அகதிகள் தாயகம் திரும்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்நாட்டில் பல்வேறுபட்ட பகுதிகளில் அமைந்துள்ள 108 முகாம்களிலும், வெளியிடங்களிலும் இன்னமும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக, பல்வேறுபட்ட நெருக்குதல்களுக்கு மத்தியில் தாயகத்துக்கு மீளத் திரும்பும் கனவுகளை சுமந்த நிலையில் வாழ்கின்றனர்.

தாயகம் திரும்பியுள்ளவர்களின் வாழ்வாதாரம், தொழில், கல்வி, காணி, வீட்டுவசதி போன்ற அடிப்படையான விடயங்களில் காணப்படக்கூடிய முன்னேற்றங்கள் மட்டுமே, தாயகம் திரும்பும் எண்ணத்தை தமிழ்நாட்டில் உள்ள எமது மக்களிடம் மேலும் மேலும் வலுப்படுத்தும். மீள் சமூக ஒருங்கிணைப்புக்காகவும், போக்குவரத்துக்காகவும் பண உதவியாக மொத்தமாக 169 அமெரிக்க டொலரையும், வாழ்வாதார முயற்சிகளுக்காக உச்சதொகையாக ஒரு லட்சம் இலங்கை ரூபாவும், மீளக்குடியமர்பவர்களுக்கு ஆறு மாத காலத்துக்கு உலர்உணவுப் பொதிகளும் வழங்கப்படுகின்றன.

அமைச்சின் நடவடிக்கைகளை வரவேற்கும் அதேவேளை, இந்தத் தொகையை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மீளதிரும்பும் தாயக உறவுகளின் சார்பாக கேட்டுகொள்கின்றேன். வாழ்வாதாரத்துக்கான உதவித் தொகையை இரண்டு லட்சம் ரூபாவரையில் அதிகரிக்க வேண்டும் என்றும், உலர் உணவு வழங்கும் காலத்தின் அளவை ஒரு வருடத்துக்கு நீடிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தியாவில் இருந்து தாயகம் திரும்புவோர் தமது பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை இலங்கையில் பதிவு செய்யும்போது, 25 ஆயிரம் ரூபா அறவிடப்படுகின்றது. அகதிகளாக வாழ்ந்து வெறும் கையுடன் வருபவர்களிடம் கட்டணம் அல்லது தண்டம் அறவிடப்படும் நடைமுறையை நிறுத்த வேண்டும். அவர்களின் அகதிமுகாம் ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு பிறப்பு, இறப்பு பதிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களுடன் தாயகம் திரும்பும் இலங்கை அகதிகள் விசேட பிரிவாக கருதப்பட்டு ஆள் பதிவு திணைக்களத்தின், ஊடாக உடனடியாக 'தேசிய அடையாள அட்டைகள்' வழங்க வேண்டும்.

இந்தியாவில் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்றவர்களின் கல்வி தராதரங்கள் மனிதாபிமான அடிப்படையில் கணிப்பிடப்பட்டு, இலங்கையில் கல்வியைத் தொடரவும், மதிப்பிடப்பட்டு தொழில் சந்தையில் இணையவும் பாதைகள் திறக்கப்படவேண்டும். வாழ்வாதாரத் தொழில் முயற்சிகளுக்காக அரச வங்கிகளில் பிணைதாரர் இன்றி கடன் பெறப்படக்கூடியதான பொறிமுறை ஒன்றை வங்கிகளுக்குப் பரிந்துரைக்க வேண்டும்.

நீண்டகால இடைவெளி காரணமாக, இடம்பெயர்ந்த அகதிகளின் குடும்பங்களில் புதிதாக உருவாகியுள்ள காணியற்ற உப குடும்பங்களுக்கு சம்பந்தபட்ட மாவட்டங்களில் அரச காணிகள் இனம்காணப்பட்டு, வாழ்வாதார அல்லது விவசாய வளங்களுடன் கூடிய 'மாதிரி குடியிருப்பு கிராமங்கள்' ஏற்படுத்தப்பட வேண்டும். தாயகம்திரும்பும் அகதிகள் ஏற்கனவே வசித்த அல்லது பயன்படுத்திய நிலங்களை மீளவும் தத்தமது ஆளுகைக்கு ஏற்படுத்திக்கொள்ள இயலுமானவாறு பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அடிப்படையானதும் அவசியமானதுமான இந்த நடவடிக்கைகளை இயலுமானளவு விரைவாக முறைப்படுத்தப்பட்டதும், ஒருங்கிணைக்கப்பட்டதுமான வகையில் நடைமுறைக்கு கொண்டு வரப்படுமாயின், அதிகளவான தாயக உறவுகள் மீள் வருகையை நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்க முடியும் - என்றுள்ளது. (ற-21)

## 161 பஸ் உரிமையாளர்களுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரம்

முல்லைத்தீவு, நவ.2

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பஸ் உரிமையாளர்கள் 161 பேருக்கு வழித்தட தற்காலிக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.



கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பஸ் உரிமையாளர்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் நேற்று முன்தினம் காலை கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்டன. 90 பஸ் உரிமையாளர்களுக்கு அவை வழங்கப் பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பஸ் உரிமையாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இரவு 8 மணி முதல் இரவிரவாக அனுமுதிப் பத்திரங்கள் முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிமனையில் வழங்கப்பட்டன. 71 பஸ் உரிமையாளர்களுக்கு அவை வழங்கப்பட்டன.

நிகழ்வில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா. டெனீஸ்வரன், வடக்கு வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அ.நீக்கிலாஸ்பிள்ளை, பொலிஸ் உத்தியோகத்தர்கள், வட இலங்கை தனியார் போக்குவரத்து உரிமையாளர் ஒன்றியத்தின் நிர்வாக உறுப்பினர்கள், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ற-21)

## மாவட்ட மருத்துவர் அமைப்பு முல்லைத்தீவில் உருவாக்கம்



முல்லைத்தீவு, நவ.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் மருத்துவ சேவையில் காணப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்குடன் மாவட்ட மருத்துவ அதிகாரிகள் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

மாஞ்சோலை வைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த அமைப்பு ஆரம்பிக்கப் பட்டது.

அமைப்பின் தலைவராக மருத்துவர் ஆ.சுதர்சனும், பதில் தலைவர்களாக மருத்துவர் மு.சுதர்சன், மருத்துவர் பாஸ்கரன், மருத்துவர் சத்தியரூபன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். அமைப்பின் வன்னி மாவட்ட போசகராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவு செய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நூற்றுக்காணக்கான மருத்துவ அதிகாரிகள் இருக்கின்றனர் இருந்த போதும், மருத்துவ சேவையில் முல்லைத்தீவு மாவட்டம் பல பிரச்சினைகளை எதிர்கொண்டது. மண்பற்றுள்ள மருத்துவர்கள் ஒன்றுகூடிப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளமை நம்பிக்கை தருகின்றது. பல்வேறு மாவட்டங்களில் கடமையாற்றும் நாற்பதுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பல நூறு கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து இந்த முயற்சிக்கு ஆதரவளித்திருப்பது முல்லை மக்களைப் பெருமிதம் கொள்ள வைத்துள்ளது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார். (ற-21)

## வவு. பஸ் நிலைய வர்த்தக கட்டடத் தொகுதியில்

# மழையைத் தாங்காது உடைந்தன கூரைத் தகடுகள்

## நகர சபையின் அசமந்தத்தால் இந்த நிலை எனப் பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, நவ.2

வவுனியாவில் நேற்றுமுன் தினம் பெய்த கடும் மழையால் வவுனியா மத்திய பஸ் தரிப்பிடத்தில் உள்ள வியாபார நிலையங் கள் பாதிப்படைந்தன என்று அவற்றின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

வவுனியாவில் 43.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது. கடும் மழையால் வியாபார நிலையங்களின் கூரைத் தகடுகள், உள்ளக கூரைத் தகடுகளும் (சீலிங்) உடைந்து வீழ்ந்தன என்று கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

வியாபார நிலையக் கட்டடத் தொகுதி வவுனியா நகர சபை நிர்வாகத்துக்குட்பட்டது. கட்டடத் தொகுதி மழை காலத்தில் தாக்குப் பிடிக்காது என்று நகர சபைக்குச் சுட்டிக் காட்டப்பட்டிருந்த போதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.



நேற்றுமுன்தினம் பெய்த மழையால் சில வியாபார நிலையங்களின் கூரைத்தகடுகள் உடைந்து வீழ்ந்தன.

மின் இணைப்பு வயர்கள் அறுந்ததுடன், மின் குமிழ்களும் உடைந்தன. சில கடைகளுக்குள் மழை வெள்ளம் உட்புகுந்துள்ளது. வியாபார நடவடிக்கைகள் பாதிப்படைந்தன.

இது தொடர்பாக பல தடவைகள் உரிய தரப் பினருக்கு அறிவிருந்திருந்தோம். நிதி கிடைத்தால் சீரமைப்போம் என்றே பதில் கூறுகின்றனர். வரி அறவிடும் நகர சபை கட்டடத் தொகுதியைச் சீரமைக்காது தாமதப்படுத்துகின்றது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பாதிக்கப்பட்ட வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து எந்தத் தகவலும் எனக்கு கிடைக்கவில்லை. இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வை உடனடியாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பேன் - என்று நகரசபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் தெரிவித்தார்.

(ற-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இன்னும் புரியவேண்டியது எவ்வளவோ உண்டு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்து கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் வடக்கு மக்கள் வெளிப்படுத்திய உணர்வுகளையும் வேதனையையும் தான் சரியாகப் புரிந்துகொண்டிருக்கிறார் என்று இலங்கை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இதுபோன்ற சம்பவம் தென்னிலங்கையில் இடம்பெற்றிருந்தால் இதைவிட மோசமான அமைதியின்மை ஏற்பட்டிருக்கும் என்று தான் நம்புகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அரச தலைவரின் இந்த உரை, வடக்கில் வாழும் தமிழ் மக்களை ஆறுதல்படுத்தும் விதத்தில் அமைந்தது. ஒரு நாட்டின் தலைவராக அனைத்து மக்களையும் அரவணைத்துச்செல்லவேண்டியது அவரது கடமையும்கூட. ஆனால், பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப்பட்ட விடயத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளும் வேதனையும் என்ன என்ற உண்மையை அரச தலைவர் புரிந்துகொண்டாரா என்கிற கேள்வி இருக்கிறது.

ஏனெனில் நடந்தது ஒரு சட்டம் ஒழுங்குத் தவறு என்ற வடிவத்துக்குள்ளேயே இந்த விடயம் தற்போது வரையில் பொலிஸாரால் கையாளப்பட்டு வருகின்றது. காவலர்கள் தடுத்தும் நிறுத்தாமல் சென்ற வாகனத்தைத் தடுத்து நிறுத்த துப்பாக்கிச் சூடு எனும் பலத்தைப் பயன்படுத்தியது தவறு என்ற கோணத்திலேயே நீதிச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், அது மட்டுமேயல்ல, தமிழ் மக்களின் கவலையும் வேதனையும். பொலிஸ் துப்பாக்கி அவ்வளவு விரைவாகத் தூக்கப்பட்டதன் பின்னால் உள்ள இன மேலாதிக்க அரசியல் பற்றியது அந்த விவகாரம். இலங்கையைக் கடந்த 30 வருடகாலமாகச் சிதைத்த வன்முறைக்கு வித்திட்டதும் இதே மனோபாவம்தான் என்பதை எவரும் மறுத்து விடமுடியாது.

போருக்குப் பின்னரும், மகிந்த ஆட்சியின் பின்னருமான காலத்தில், இலங்கையில் நிலைமாறு கால ஆட்சியை - நீதியை நிலைநாட்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே ரணில் - மைத்திரி ஆட்சிக்கு உலக அரங்கில் பெரும் ஆதரவு வழங்கப்பட்டது. நிலைமாறுகால நீதியில் முக்கியமானது கடந்த காலத் தவறுகள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தவது. பல்கலைக்கழக மாணவர்களின் கொலைகள் இந்த நிலைமாறுகால நீதியின் மீதான நம்பிக்கையைச் சிதைக்கிறது.

அரச இயந்திரங்களான இராணுவம் மற்றும் படைகளுடன் பொலிஸும் தொடர்ந்தும் தமிழர்களுக்கு எதிராக மேலாதிக்க மனோநிலையுடனேயே செயற்படுகின்றன என்பதன் உச்சமாக இந்தச் சம்பவம் வெளிப்பட்டுள்ளது. இது மட்டுமல்ல, காவலில் வைக்கப்பட்ட இளைஞனை சித்திரவதை செய்து கொன்றமை, போக்குவரத்து விதி மீறலுக்காக அழைத்துச் செல்லப்பட்ட லண்டன்வாசி உள்ளிட்ட இருவரை வதைத்தமை என்று, பொலிஸ் படையின் தமிழர்களுக்கு எதிரான அட்டூழியங்கள் மிக அண்மையில் பதிவாகி வெளிச்சத்துக்கு வந்த சம்பவங்களில் சில.

இவையெல்லாவற்றுக்கும் பின்னணியில் சிங்கள, பௌத்த மேலாதிக்கவாதம் இருந்தது என்ற நியாயமான அச்சம் தமிழர்களுக்கு இருக்கிறது. இந்த மேலாதிக்கவாதத்திற்கு எதிராகவே அவர்கள் கடந்த 60 வருடங்களாகப் போராடி வருகிறார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் கொலைகளின் பின்னணியில் இந்த இன அரசியல் செயற்படவில்லை என்பதைப் புறந்தள்ளிவிட்டு, வெறும் குற்றச்செயலாக அதனைக் குறுக்கிக்கொள்ளக்கூடாது. அதற்கும் அப்பால் சென்று அந்தத் துப்பாக்கி சடுதியாக வெடித்ததற்குப் பின்னால் இருந்த அரசியல் வெளிப்படுத்தப்படவேண்டும். அது குற்றவிசாரணைக்கு ஊடாக ஒரு போதும் வெளிப்படாது. அதற்கென ஓர் அரச தலைவர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டு சுயாதீன விசாரணையை நடத்துவதன் மூலமே அது நடக்க முடியும். அரச தலைவர் மைத்திரிபால அதைச் செய்யவேண்டும். அப்போது தான் அவர் சொல்வதுபோல தமிழர்களின் உணர்வுகளை உணர்ந்தவராவார்.

# மத்திய வங்கி பிணை முறி ஊழலில் முன்னாள் ஆளுநருக்குப் பொறுப்பு

## சட்ட நடவடிக்கையுடன் மக்கள் பணமும் திரும்பப் பெறப்படவேண்டும் கோப் குழு அறிக்கையின் பரிந்துரைகள்

சண்டேரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

இலங்கை நாடாளுமன்றத்தில் பொது நிறுவனங்கள் தொடர்பாக ஆராயும் குழுக்களின்தலைவர்களாக இருந்து பணியாற்றுவதென்பது ஒரு போதும் இலகுவான காரியமாக இருந்ததில்லை.

இப்போது நீதி அமைச்சராக இருக்கும் விஜயதாச ராஜபக்ச, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கோப் குழுவின் தலைவராக இருந்து தமது அறிக்கையில் சில முக்கிய தகவல்களை வெளியிட்டு பலத்த சர்ச்சைகள் ஏற்பட்டமையால், 2007ஆம் ஆண்டு அரச தரப்பிலிருந்து ஐ.தே.கட்சிக்கு மாறும் நிலைமை ஏற்பட்டது. அதே மாதிரியான ஒருநிலைமை இப்போது கோப் குழுவின் தலைவராக இருக்கும் ஜே.வி.பி. உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்திக்கும் ஏற்பட்டுள்ளது. சுமார் 2000 பக்கங்களைக் கொண்ட இணைப் [illegible] அவரது 55பக்க அறிக்கை நாடாளுமன்றத்தில் கடந்தவாரம் தாக்கல் செய்யப்பட்டது. மத்திய வங்கியின் பிணைமுறி விற்பனையில் ஏற்பட்டுள்ள ஊழல்கள் தொடர்பான விசாரணைகளின் முடிவுகளும், அது தொடர்பான கோப் குழுவின் பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன. இந்த அறிக்கையை குழுவின் தலைவர் உட்பட 16 உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஆமோதித்துள்ளனர். ஜே.வி.பி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்களும் இதில் அடங்குவர். இவர்களில் சிலர் அரசில் அமைச்சர்களாய் இருப்பவர்கள். ஆனால் ஒன்பது ஐ.தே.க. உறுப்பினர்கள், முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பான கருத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் இணைப்புப் பிரதிகளுடன், அறிக்கைக்கு அங்கீகாரம்வழங்கியுள்ளனர். பிணைமுறிகளின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான முன்னாள் ஆளுநரின் செயற்பாடுகள் மற்றும் மகேந்திரனின் அவசியமற்றதலையீடுகள் பற்றிய குறிப்புக்கள், தவறான தகவல்களின் அடிப்படையில்செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் என்றும் மகேந்திரன் மீது குற்றம் சாட்டுவதற்கு முன் ஏனைய பல விடயங்கள் மேலும் ஆராயப்படவேண்டியவை என்றும், அவர்கள் தமது இணைப்புப் பத்திரங்களில் தெரிவித்து ஏனைய உறுப்பினர்களின் நிலைப்பாட்டை எதிர்த்துள்ளனர்.




### ஆளுநருக்கு நேரடிப்பொறுப்பு

திறைசேரி பிணைமுறிகள் தொடர்பாக இதுவரை விசாரணைகளை நடத்தியுள்ள மூன்று குழுக்களில் இரண்டும், இது தொடர்பான கணக்காளர் அறிக்கையும், முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு அவரது மருமகனுக்கு கரிசனையுள்ள பேர்பேச்சுவல் றெசறீஸ் (Perpetual Treasuries) நிறுவனம் நியாயமற்ற முறை கொடுக்கல் வாங்கலில் பயனடைவதில் தொடர்பிருந்துள்ளது எனத் தெரிவித்துள்ளன.

வெள்ளிக்கிழமை நாடாளுமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் முன்னாள் ஆளுநர் திறைசேரி பிணை முறிகள் கொடுக்கல் வாங்கலில் நேரடியாகப் பொறுப்பு வகித்துள்ளார் என்று பெரும்பான்மையான குழு உறுப்பினர்கள் கண்டு பிடித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆளுநர் மீதும் ஏனைய அதிகாரிகள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்குமா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுமக்களுக்கு உரித்தான குறித்த பணத்தை திரும்பப் பெறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டில் இந்த விடயம் தொடர்பாக ஆய்வு நடத்தியிருந்த அப்போதைய கோப் குழுவின் தலைவர் டி.ஈ.டபிள்யு குணசேகரவும் முன்னாள் மத்தியவங்கி ஆளுநருக்கு பிணைமுறி விவகாரத்தில் நேரடி பொறுப்பு உள்ளது என்ற வகையில் கருத்து வெளியிட்டிருந்தார். முன்னாள் ஆளுநர் தரப்பில் தவறுகள் இடம்பெற்றிருந் ததாகவும் அவர் தெரிவித்திருந்தார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்டிருந்த சட்டவாளர்கள் குழுவொன்று திறைசேரி பிணைமுறிகள் பற்றி முடிவெடுத்ததில், ஆளுநர் நேரடியாகப் பொறுப்பைக் கொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரங்கள் கிடையாது என்று தங்கள் அறிக்கையில் கூறியிருந்தார்கள். ஆனால் குறித்த நாளில் கேள்விகள் தொடர்பான அந்த நிறுவனத்தின் போக்கு வழக்கத்துக்கு மாறாகக் காணப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்ததுடன், இது தொடர்பில் அரசு சார்ந்த முறையான அதிகாரபூர்வ விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தது. வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் பேசுகையில், ஹந்துன்நெத்தியின் அறிக்கையானது, நாடாளுமன்றுக்கும் நல்லாட்சிக்கும் கிடைத்துள்ள ஒருவெற்றி. பொதுநிதிகள் மீது நாடாளுமன்றுக்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்று நாங்கள் போராடி வந்திருக்கிறோம். அதனை இப்போது சாதித்திருக்கிறோம் என்றார்.

**ஒன்பது ஐ.தே.க. உறுப்பினர்கள் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பான கருத்துக்களுக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் இணைப்புப் பிரதிகளுடன் அறிக்கைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளனர்.**

### பூட்டிய அறைக்குள் நாடகம்

கோப் குழுவின் அறிக்கை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், கதவுகள் பூட்டிய அறைக்குள் பெரும் நாடகமே நடந்துள்ளதாக அறிய முடிந்தது. முன்னாள் மத்திய வங்கி ஆளுநருக்கு பாதகமற்ற முறையில் அறிக்கையை தயாரிக்கச் செய்வதற்கு ஐ.தே.க. உறுப்பினர்கள் பெரும்பாடு பட்டிருக்கிறார்கள். அழுத்தம் காரணமாக ஒரு கட்டத்தில் குழுத்தலைவர் ஹந்துன்நெத்தி வெளிநடப்புச் செய்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தாம் வெளிநடப்புச் செய்த காரணத்தை பத்திரிகைகளுக்கு வெளியிட ஹந்துன்நெத்தி முன்வந்த போதும், அவ்வாறு செய்வது நாடாளுமன்றத்தின் பாரம்பரியத்துக்கு உகந்ததல்ல என்று பல உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதால் அது தடைப்பட்டு விட்டது.

வெஸ்ட் மின்ஸ்ரெர் நாடாளுமன்ற முறையில் சில கொள்கை வசதிகள் இருக்கின்றன. சில மரபுகளும், நடைமுறைகளும் பின்பற்றப்படுகின்றன. கோப் குழுவின் தலைவர் கௌரவமான முறையில் நடந்து கொண்டுள்ளார். அன்றைய தினம் அழுத்தம் காரணமாக அவர் வெளிநடப்புச் செய்தார் என்றால், அதனை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. அதே நேரம் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேறுவிதமான கருத்துக் கொண்டிருந்தால் அவையும் அறிக்கையில் இடம்பெறு வது மிகச் சரியான விடயமே என்று கருத்துத் தெரிவித்தார் கோப் குழு உறுப்பினரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம். கோப் குழுக் கூட்டத்துக்குள் பரிமாறப்பட்ட கருத்துக்கள் ஊடகருக்குக் கசியவிடப்பட்டிருக்குமானால், அது குறித்து தமது அதிருப்தியைத் தெரிவிப்பதாக பிரதி அமைச்சரும் குழு உறுப்பினருமான சுஜீவ சேனசிங்க தெரிவித்தார். இரகசிய அறையில் நிகழ்ந்த விடயங்களை வெளியிடு வது சபையின் பாரம்பரிய வரைமுறைகளை மீறுவதாகும். குறித்த ஊடக உறுப்பினர்களை குழுவின் முன் வரவழைத்து தகவல் கசிய விட்டவர்களை நாம் கண்டு பிடிக்க வேண்டும் என்றார் - அவர்.

கோப் குழுவிலும், பொதுக் கணக்குகள் குழுவிலும் தலைமைப் பொறுப்பை எதிர்த்தரப்பினரிடம் இந்த அரச உறுப்பினர்கள் விட்டுக் கொடுத்ததானது, முந்திய குழுக்களில் அமைச்சர்களையே தலைமைப் பொறுப்பில் விடுத்திருந்த முன்னைய ஆட்சியாளரை விட ஜனநாயகத்தின் பாற்பட்ட முன்னேற்றகரமான செய்கையே. ஆனால் வெளிப்படைத் தன்மையை கடைப்பிடிக்கப் போவதாகக் கூறிக்கொண்டு , பதவிக்கு வந்தவர்களிடம் அதனைக் காணக்கூடியதாக இல்லை. கோப் குழுவிலுள்ள அரச உறுப்பினர்கள் முக்கியமான விடயங்களை மூடிமறைப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகள் ஏற்கனவே அவர்களுக்குப் பாதகமான நிலைமையையே தோற்று வித்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோப் குழு அறிக்கையின் மீது மேற்கொண்டும் நட வடிக்கை எடுப்பதற்காக அதனை சட்டமா அதிபரிடம் கையளிப்பதாக உறுதியளித்திருப்பது சரியான திசையிலான நடவடிக்கையாக இருந்த போதிலும், இவ்வாறான பல அறிக்கைகள் ஏற்கனவே சட்டமா அதிபர் திணைக்களத்தில் தொட்டும்கூடப் பார்க்கப்படாமல் கிடந்து வருகிறது. பொதுமக்களின் நம்பிக்கையை உயர்த்துவதாக இது இருக்காது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சியின்போது சிறிலங்கா இன்சூரன்ஸ் கூட்டுத்தாபனம் தனியார் மயப்படுத்தப்பட்டமை மற்றும் அதுபோன்ற வேறு பல செயற்பாடுகளும் விஜயதாச ராஜபக்ச தலைமையிலான கோப் குழுவினால் ஆராயப்பட்டு கண்டுபிடிக்கப்பட்டவைகளின் அடிப்படையிலேயே பொதுநல வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து இன்சூரன்ஸ் கூட்டுத்தாபன விற்பனையானது முறையற்றது என்று அறிவித்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர். அரசுக்குரிய பணம் மீளப் பெறப்பட்டது.

அதே முறையில் இந்த கோப் குழு அறிக்கையும் பொதுநல வழக்கொன்றுக்கு வழிகோலக் கூடும். அதன்மூலம் நியாயம் கிடைக்க முடியும். அரசு நடவடிக்கை எடுக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையிருக்காது.

# இந்தக் காலத்தில் யாரைத்தான் நம்புவது?

இது ஒரு ரயில் பயணத்தில் ஏற்பட்ட சுவாரஸ்யமான அனுபவம்.

கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்தில் புறப்படுவதற்கு தயாராக நின்றது யாழ்தேவி. அன்று ஏதாவதொரு விடுமுறை தினமான இருக்க வேண்டும்: சரியான சனநெருக்கடி. சீற் கிடைப்பது கஷ்டம். எப்படியோ எனக்கும் மகனுக்கும் ஒருவாறு சீற்கிடைத்தது.

ஜன்னலோரத்தில் ஒரு பிக்குணி (பெண் பௌத்த துறவி. பிக்குவின் பெண்பால் சொல் பிக்குணி) அமைதியே உருவாக அமர்ந்திருந்தார். பொதுவாக துறவிகள் எதிர்ப்பாலினத்தவர்களுக்கு அருகில் அமருவதில்லை. எனவே நான் அவருக்கருகில் அமர்ந்துகொண்டு எனது 15 வயது மகனை மறு பக்கம் இருத்தினேன். எதிரே மூன்று தமிழ் இளைஞர்கள். ரயில் புறப்பட்டது.

ரயில் ஓடஓட எனக்கு கண்ணைச் சுழற்றியது. அன்றுபகல் கடும் அலைச்சல். என்னையறியாது தூங்கி விழுந்தேன். பாவம் பக்கத்தில் இருந்த பிக்குணி, அவர்மீது என்னையறியாமல் பலமுறை சரிந்து விழுந்தேன். சிலவேளை களில் 'சொறி' என மன்னிப்புக் கேட்டேன். ஆனாலும் அவர் சினக்கவில்லை. மாறாக சிறு புன்னகையுடன் இருளை வெறித்தபடி இருந்தார். எதிரே இருந்த இளைஞர்களும் ஆழ்ந்த நித்திரை.

ரயில் குருநாகலை வந்தடைந்தது. திடீரென பிக்குணி தலையைக் குனிந்து முகத்தை மறைத்துக்கொண்டார்.

எனக்கு எங்கோ பொறித்தட்டியது:

நித்திரையை விரட்டிவிட்டு நிமிர்ந்து அமர்ந்து பிக்குணியை நோட்டம் விட்டேன். ரயில் புறப்பட்டது. ஒருகட்டத்தில் பிக்குணி மடியில் வைத்திருந்த திருவோடு (பௌத்த துறவி கள் வீடுவீடாகச் சென்று இரந்து உண்ண வேண்டும் என்பதே பௌத்த தர்மத்தின் விதி. அதற்காகவே அந்த பிட்சாபாத்திரம்) சத்தமிட்டது. அந்தத் திருவோடு ஒரு அழகிய பெட்டகம் போல் காட்சி தந்தது.

பிக்குணி அதனைத் திறந்தார். உள்ளே விலையுயர்ந்த ஸ்மார்ட் போன் ஒன்று சிணுங்கியது. அதனை அணைத்துவிட்டு கைகளை வெளியே எடுத்தார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது... அந்தக் கைகள் ஒரு பெண்ணின் கைகள்போல் இருக்கவில்லை. ஆணின் கைகளைப்போல கரடுமுரடாக இருந்தன. என்னால் நம்பமுடியவில்லை.

மெதுவாகத் தலையைக் கவிழ்ந்து தூங்கும் பாவனையில் அவரது கால்களை நோட்டமிட்டேன். காவியை முழங்கால்வரை மடித்துத் தூக்கி விட்டிருந்தார். கீழே கால்கள் அச்சு அசலாக ஆண்களின் கால்கள் போலிருந்தன. ஆண்கள் அணியும் செருப்பு! (இவ்வளவு நேரமும் அந்தக் காலுடன் எனது கால் உரசியவாறுதான் வந்தது!)

குளிரிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது. மகனுக்கு காதோரம் விடயத்தைக் கூறினேன். அவர் சர்வசாதாரணமாக இது என்ன ரகசியமா? எனக்கு அப்போதே அவர் ஆண் என்று தெரியும். தாடி மழித்திருக்கிறார். பார்க்கவில்லையா? என்றார். அப்போதுதான் அவரது முகத்தை நான் பார்த்தேன். இடம்மாறி அமர்ந்து பயணத்தை தொடர்ந்தேன்.

அந்தப் பிக்குணி இடையில் ஓரிடத்தில் இறங்கிக் கொண்டார்.

ஆனாலும் இன்றுவரை எனக்கு அவர் பற்றிய சந்தேகம் தீரவில்லை.

உண்மையாகவே அவர் ஒரு பிக்குதானா?

பெண்களுடன் உரசிக்கொண்டு போவதற்காக பெண்பிக்கு போல் ஆடை தரித்து வந்தாரா? இல்லாவிட்டால் வேறு ஏதேனும் குற்றச்செயல்களில் ஈடுபட்டு பொலிஸ் பிடியிலிருந்து தப்புவதற்காக அவ்வாறு வேடமிட்டிருந்தாரா?

ஏன் அவர் தனது முகத்தை மறைக்கவேண்டும்?

அப்படியானால், ஏன் அந்தப் பிக்குணி வேடம்?

**மாலதி ஜெயக்குமார், கிளிநொச்சி.**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிம் ஜோங்கின் மனைவியைக் காணவில்லையாம்

பியாங்யாங், நவ. 2
வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன்னின் மனைவியைக் காணவில்லை என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கடந்த ஏழு மாதங்களில் நடைபெற்ற அரச நிகழ்வுகள் எதிலும் கிம் ஜோங் உன்னின் மனைவி றி சோல் ஜு கலந்தகொள்ளவில்லை. இதனையடுத்தே அவர் தொடர்பாக இவ்வாறானதொரு கருத்துப் பரவி வருகிறது. கிம்மின் மாமனாரான ஜாங் சங்ராக், கிம்மினால் கொல்லப்பட்டார். இதனால் சோலின் நிலைப்பாடு தொடர்பாக அச்சமும் வெளியிடப்பட்டது. (ம-எ)



## ஆப்கானிஸ்தானின் வான் தாக்குதலில்
# 19 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர்

ஆப்கானிஸ்தான் எல்லையில் முகாமிட்டிருந்த லஸ்கர் இ தொய்பா அமைப்பைச் சேர்ந்த 19 ஆயுததாரிகளை வான் தாக்குதலின் மூலம் கொன்றதாக ஆப்கான் இராணுவம் அறிவித்தது.
ஆப்கானிஸ்தான் - பாகிஸ்தான் எல்லையில் உள்ளது குணார் மாகாணம். இந்த மாகாணத்தில் உள்ள டங்கம் மாவட்டத்தில் லஸ்கர் இ தொய்பா அமைப்பின் ஒரு குழு தங்கியிருந்து எல்லை வழியாக ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து நாசவேலைகளில் ஈடுபட இருப்பதாக அந்த அரசுக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் ஆப்கானிஸ்தான் இராணுவம் அப்பகுதியில் தீவிரவேட்டை நடத்தி அவர்கள் மீது வான்வழித் தாக்குதலை நடத்தினார்கள்.
இதில் 19 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர், 8 ஆயுததாரிகள் காயமடைந்தனர் என்று ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ம)





# பூனைப் பிரியாணி

சென்னை, நவ. 2
தமிழ்நாட்டின் சென்னை நகரில் பல்லாவரம் பகுதியில் தெரு ஓரக்கடைகள் சிலவற்றில் கோழிப் பிரியாணி என பூனைப் பிரியாணி விற்பனை செய்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
உணவு சோதனை அதிகாரிகள் திடீரென மேற்கொண்ட சோதனையில் இறைச்சிக்காக கோழிகள் வெட்டப்படும் இடத்தில் பூனைகள் அடைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. கடை உரிமையாளர்களிடத்தில் நடத்தப்பட்ட முதல்கட்ட விசாரணையில் இறைச்சிக்காக வெட்டப்படவே பூனைகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.
பூனைகள் அனைத்தும் விடுவிக்கப்பட்டன. பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து தொடர்ந்தும் விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-எ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளா

## ஐ.நா. திடுக் தகவல்

பக்தாத், நவ. 2
ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பில் ஏகப்பட்ட சிறுவர்கள் ஆயுததாரிகளாக உள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாகப் பிரகடனப்படுத்தியுள்ளது ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழு. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொடூரத்தனமான நடவடிக்கைகள் காரணமாக அந்த அமைப்பைத் தனது பொதுவான எதிரியாகக் கொண்டு உலக நாடுகள் பலவும் தாக்குதல்களை அரங்கேற்றி வரு கின்றன, ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூல் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலேயே இருந்தது. மோசூலை மீண்டும் கைப்பற்றுவதற்குத் திட்டம்தீட்டிய ஈராக் மிகப் பெரும் இராணுவ நடவடிக்கையில் இறங்கியது. 35 ஆயிரம் ஈராக் இராணுவச் சிப்பாய்கள் உள்ளடங்கலாக 90 ஆயிரம் படையினர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக களத்தில் உள்ளனர். துருக்கியும் ஈராக்குக்கு உதவியாக களமிறங்கியது. இருபதுக்கும் அதிகமான கிராமங்கள் மீட்கப்பட்டிருந்தன. குவையாரா பெருங்கிராமமும் மீட்கப்பட்டுள்ளது.
கடந்த இரு வாரங்களாக நடைபெற்றுவரும் இந்தப் போரில் கிட்டத்தட்ட ஆயிரம் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று சொல்லப்படுகிறது. அவர்களில் ஆயுததாரிகளாக மாறிய சிறுவர்கள் மட்டும் 300 பேர் என்று ஐக்கிய



# அல் நுஸ்ரா ஆயுதக் குழுவால் 3 நாள்களில் 84 பேர் சாவாம்

டமஸ்கஸ், நவ. 2
சிரியாவின் அலெப்போ நகரில் ஆயுதக் குழுக்கள் நடத்திய தாக்குதல்களில் கடந்த மூன்று நாள்களில் மாத்திரம் 84 பேர் உயிரிழந்தனர் என சிரிய இராணுவம் குற்றம் சாட்டியது.
அலெப்போ நகரில் உள்ள ஆயுதக் குழுவான அல் நுஸ்ரா மிகவும் மோசமான தாக்குதலை அரங்கேற்றி வருகிறது. கடந்த மூன்று தினங்களில் மட்டும் 84 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரசாயனத் தாக்குதல்களையும் அல் நுஸ்ரா அமைப்பு பயன்படுத்துகிறது. தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள அந்த அமைப்பு மக்களைக் கேடயமாகப் பயன்படுத்துகிறது எனவும் இராணுவத் தரப்பு மேலும் குற்றஞ் சாட்டியது. (ம-எ)

## சீனாவில்

# நிலக்கரிச் சுரங்கத்தில் விபத்து 15 பேர் சாவு; 18 பேர் மாயம்

சீனாவின் லாய்சு நகரிலுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலக்கரிச் சுரங்கத்தில் நேற்று ஏற்பட்ஏரிவாயுக்கசிவு விபத்தால் 15 பேர் சாவடைந்தனர்.
சுரங்கத்தில்விபத்து ஏற்பட்டபோது 35 தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டி ருந்தனர். வாயிலுக்கு அருகிலிருந்த இருவர் மட்டும் உடனடியாகத் தப்பித்துக் கொண்டனர். சம்பவம் தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைக்குத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த அவர்கள் உயிரிழந்த நிலையில் 15 பேரின் உடல்களை மீட்டனர். ஏனைய 18 பேரையும் தேடும்பணிகள் நடைபெற்றன. இதனால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.



விபத்தைத் தொடர்ந்து அந்த பகுதியில் உள்ள அனைத்து சுரங்கங்களிலும் நிலக்கரி உற்பத்தியை நிறுத்தும்படி நகராட்சி உத்தரவிட்டுள்ளது. உலகிலேயே அதிக அளவில் நிலக்கரி உற்பத்தி செய்யும் சீனாவில், சுரங்க விபத்துகள் அடிக்கடி ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# வருடாந்த ரோபோ கண்காட்சியில் அறிமுகமானது அதிதிறன் ரோபோ

பீஜிங், நவ. 2
மனித மூளைக்கு நிகரான செயற்பாடுகளை கிட்டத்தட்ட வெளிப்படுத்தக்கூடிய ரோபோவொன்று, பீஜிங்கில் கடந்த வாரம் நடைபெற்ற உலக ரோபோ கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
சியா ஐ என குறித்த ரோபோவே இவ்வாறான அதிதிறன் தன்மையுடன் படைக்கப்பட்டுள்ளது.
சியா ஐ மனித மொழிகளை விளங்கிக் கொண்டு பதில் வழங்கும் வல்லமை பெற்றது. உடலின் உள்ளக அசைவையும் உணரும் வல்லமை பெற்றது.
மனித மூளையின் செற்பாடுகளை இனம் காண்பதால் மனிதனது செற்பாடுகளை ரோபோவால் வெளிப்பகிர முடிகிறது என சியா ஐ இனது தயாரிப்பாளர்கள் தெரிவித்தனர். (ம-எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேஸிலில்

# லொறி பஸ் விபத்து 20 பேர் பரிதாபச் சாவு

சாவ் பாலோ, நவ. 2

பிரேஸிலின் பார்னா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் பயணிகள் பேருந்தும், லொறியும் விபத்துக்குள்ளானதில் 20 பேர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தனர்.

பர்னா மாநிலத்தின் முக்கிய நெடுஞ்சாலையிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது. விபத்தையடுத்து பஸ் தீக்கிரையானது. 20 பேர் சம்பவ இடத்தில் சாவடைந்தனர். பத்துப்பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்களில் சிலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)





ஹெலாவீன் திருவிழா என்றழைக்கப்படும் பேய்கள் திருவிழா நேற்றுமுன்தினம் உலக அளவில் கொண்டாடப்பட்டது. அமெரிக்கா, உக்ரையின், ஐக்கியராச்சியம், சீனா, அயர்லாந்து, ஜப்பான் இன்னும் பல நாடுகளில் இந்த விழா தீவிரமாக முன்னெடுக்கப்பட்டது. பேய்கள் போன்று வேடம் அணிந்து, மக்கள் பொது இடங்களில் காட்சியளித்தனர். (ம-எ)

# ஆயுதக் குழுவில் சிறுவர் ஏராளம்



நாடுகள் சபை தெரிவித்தது.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு தற்போது மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. நன்கு பயிற்சி பெற்ற ஆயுததாரிகளின் இழப்பைத் தவிர்ப்பதற்காக குறித்த அமைப்பின் சார்பில் களமிறக்கப்படுபவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்களாகவே உள்ளனர்.

படைப்பலத்தை அதிகரிக்க பல்லாயிரக்கணக்கான உள்ளூர் சிறுவர்களுக்கும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பயிற்சி வழங்குகிறது எனவும் ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியது. (ம-எ)

# நானூறுக்கும் மேற்பட்ட அணுகுண்டுகளை தயாரிக்கும் வல்லமை பெற்றது இந்தியா

## பாகிஸ்தான் நிறுவனம் பரபரப்பு

புதுடெல்லி, நவ. 2

நானூறுக்கும் மேற்பட்ட அணுகுண்டுகளைத் தயாரிக்கக்கூடிய ஆற்றலுடனும், வளங்களுடனும் இந்தியா இருக்கிறது என பாகிஸ்தான் நிறுவனமொன்றின் ஆய்வில் வெளிப்பட்டது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனமொன்று நடத்திய ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டது.

356 தொடக்கம் 492 அணுகுண்டுகளைத் தயாரிக்க வல்ல தொழில் நுட்பத்தை இந்தியா கொண்டுள்ளது.

அவற்றுக்கான உலோகம் மற்றும் ஏனைய தேவையான பொருள்களை இந்தியா தயார் நிலையில் வைத்துள்ளது. மிகப் பழமையான பெரிய அளவிலான திட்டங்களையும் இந்தியா கொண்டுள்ளது என அந்த நிறுவனம் நடத்திய ஆய்வில் மேலும் வெளிப்பட்டது. (ம-எ)





# ஒரே ஏவுகணையில் 82 செயற்கைக் கோள்கள் உலக சாதனை முயற்சியில் இஸ்ரோ தீவிரம்

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ ஓர் ஏவுகணையில் 82 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

ரஷ்யாவின் விண்வெளி நிறுவனம் கடந்த 2014 ஆம் ஆண்டு ஓர் ஏவுகணையில் அதிகபட்சமாக 37 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி வரலாற்றில் இடம் பெற்றிருந்தது. இதற்கு அடுத்த படியாக அமெரிக்க விண்வெளி மையம் கடந்த 2013 ஆம் ஆண்டு ஓர் ஏவுகணையில் அதிகபட்சமாக 29 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பியுள்ளது. இந்த அடைவு மட்டங்களை தற்போது ஓரங்கட்டவுள்ளது இஸ்ரோ.

அடுத்த வருடம், ஜனவரி 15 ஆம் திகதி, ஒரே தடவையில் 82 செயற்கைக் கோளை அனுப்பும் முயற்சியில் இந்தியா ஈடுபடவுள்ளது. இவற்றில் 60 செயற்கைக் கோள்கள் அமெரிக்காவுடைன. 20 செயற்கைக் கோள்கள் ஐரோப்பிய நாடுகளுடையன. 2 செயற்கைக் கோள்கள் இங்கிலாந்துடையன. (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால இலக்கியங்கள்-5

# தமிழினி ஜெயக்குமாரனின் 'ஒரு கூர்வாளின் நிழலில்'

நா.யோகேந்திரநாதன்




'ஒரு கூர்வாளின் நிழலில்' என்ற இந்த நூல் தொடர்பான எனது பார்வையை முன் வைப்பதற்கு முன்பாக இது தொடர்பாகவும் எழுந்துள்ள சில சர்ச்சைகள் தொடர்பாகவும் அவதானிக்க வேண்டியுள்ளது.

ஒரு சாரார் தமிழினி திறந்த மனதுடன் விடுதலைப் புலிகளின் நல்லது கெட்டவற்றை முன்வைத்து தவறுகளை ஏற்றுக்கொண்டு விமர்சன ரீதியில் இந்தப் படைப்பை எழுதியுள்ளார் எனக் கூறுகின்றனர். நடுநிலையாளர்கள் எனத் தம்மை அடையாளப்படுத்தும் சிலரும்கூட, கடந்த காலத் தவறுகளை ஆய்ந்தறிந்து அவற்றிலிருந்து விடுபட்டு முன் செல்ல ஒரு பரந்த விவாதத்துக்கான வெளியை இந்த நூல் திறந்து விட்டுள்ளதாகவும் பாராட்டியுள்ளனர். இன்னொரு சாரார், இது தமிழினியால் எழுதப்படவில்லையெனவும் கடந்த காலப் போராட்டத்தையும் போராட்டத் தலைமையையும் இழிவுபடுத்தும் நோக்குடன் தமிழினி இறந்த பின்பு அவரின் பெயரைப் பயன்படுத்தி எழுதி வெளியிடப்பட்டது எனவும் கூறி வருகின்றனர்.

அடுத்த தரப்பினரோ, இந்த நூல் தமிழினியால் எழுதப்பட்ட போதிலும் இதில் விடுதலைப் புலிகளின் எதிரிகளால் திட்டமிட்ட வகையில் இடைச் செருகல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனக் கூறிவருகின்றனர்.

அதேவேளையில், தமிழினியுடன் நீண்ட காலமாக ஒன்றாக மகளிர் அரசியல்துறையில் பணியாற்றிய முன்னாள் போராளி வெற்றிச் செல்வி கொழும்பில் இடம்பெற்ற எனது நூல் அறிமுக விழாவில் 'கூர்வாளின் நிழலில்' என்ற நூலில் நான் பழகிய நான் அறிந்த தமிழினியக்காவைக் காணவில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார்.

எப்படியிருப்பினும் இந்த நூலில் காணப்படும் தமிழினிக்கும் யதார்த்தத்தில் போராளிகள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் காணப்பட்ட தமிழினிக்குமிடையே பெரும் முரண்பாடு இருப்பதாகவே தோன்றுகிறது.

இப்படியாக இந்த நூல் பற்றிப் பல்வேறு பார்வைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், ஒரு போராளியின் சுயசரிதையூடாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதி வரலாற்று இந்த நூல் ஊடாக ஆவணமாக முன்வைக்கப்படுவதாக ஒரு மாயை பரப்பப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. ஏனெனில் தமிழினியின்போராட்ட வாழ்வின் பெரும் பகுதியில் அவர் முக்கிய பொறுப்புக்களை வகித்து வந்துள்ளார். எனவே இவரின் கருத்துக்களை எவருமே முற்றாக உதாசீனம் செய்துவிடமுடியாது. இவற்றின் எதிரொலிகள் தமிழ் சமூகத்தின் மத்தியில் எழவே செய்யும்.

இந்த நூலில் தமிழினி எங்கெங்கு சென்று எப்படி வந்தபோதிலும் அவற்றின் மூலம் விடுதலைப் புலிகளின் தலைமையும் புலனாய்வுப் பொறுப்பாளரும் இலக்கு வைக்கப்பட்டிருப்பதை உணரமுடியும். போரின் தோல்விக்கும் மக்களின் துன்ப-துயரங்களுக்கும் பேரழிவுக்கும் இவர்கள் இருவருமே மூல காரணமாக விளங்கினார்கள் என ஒரு தோற்றப்பாடு இந்த நூலின் பிரதான ஓட்டமாக எங்கும் பரவிக் கிடக்கிறது.

எத்தனை இலட்சம் பேருடைய கண்ணீரும் குருதியும் இயக்கத்தினுடைய வளர்ச்சிக்கு நீர்பாய்ச்சியிருக்கிறது. "அப்படியிருக்கையில், தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டமும் தனி ஒரு மனிதனின் விருப்பு-வெறுப்புகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டு நின்றதும் அவரது விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ற தீர்மானங்களின்படி வழிநடத்தப்பட்டதும் எத்தகைய மோசமான இன அழிவை ஏற்படுத்தியிருந்தது."

தலைமை என்பது மக்களின் அபிலாசைகளின் அடிப்படையிலும் ஓர் அமைப்பின் ஒட்டு மொத்த இலக்கின் கூர்மையாகவும் இருக்கவில்லையெனவும், பிரபாகரன் ஒரு தனிமனிதன் எனவும் அவரின் சொந்த விருப்பு-வெறுப்புகளுக்கமையவே ஏனைய யாவும் வடிவமைக்கப்பட்டன எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இதே குற்றச்சாட்டு இதே வார்த்தைகளில் 2009ஆம் ஆண்டு நடுப்பகுதியில் ஊடகமொன்றில் ஒரு பத்தி எழுத்தாளரால் வெளியிடப்பட்டிருந்தது. தற்சமயம் தமிழினியின்பெயரில்இந்தநூலில்பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது, இந்த நூலில் இடைச் செருகல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சாட்சியமாக விளங்குவதுடன் இந்த இடைச்செருகல்களின் பின்னால் யார் இருந்தார்கள் என்பதையும் வெளிப்படுத்தும் வண்ணம் உள்ளன.

இந்தக் கருத்தின் மூலம் இடம்பெற்று முடிந்த இன அழிப்பின் மூல கர்த்தாவாக சிங்களப் பேரினவாதிகளோ, உள்ளிருந்து கழுத்தறுத்த துரோகிகளோ, இந்தப் போராட்டத்தைக் கருவறுக்க ஆரம்ப காலத்திலிருந்து பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட இந்திய வல்லாதிக்க சக்திகளோ, உலக ஏகாதிபத்திய ஒடுக்குமுறையாளர்களோ அனைவருமே குற்றமற்றவர்களாக்கப்பட்டு பிரபாகரனின் மேல் எல்லாப் பழியும் போடப்படுகிறது.

பல்லாயிரக்கணக்கான மக்களினதும் போராளிகளதும்-மாவீரர்களதும் அர்ப்பணிப்பில் முன்னெடுக்கப்பட்டு எவ்வளவோ சாதனைகளை ஈட்டிய போராட்டத்தை எதிரியின் காலடிகளில் சமர்ப்பிக்க மறுத்துப் போராட்டத்தை முன்னெடுத்தது அவரின் பெரிய குற்றமா?

பன்னாடுகள் விரிக்கும் வலைக்குள் சிக்குப்பட்டுமேற்கொள்ளப்படும் தீர்வின் பலாபலன்கள் எப்படியிருக்குமென்பதற்கு பலஸ்தீன விடுதலைப்போராட்டம் சிறந்த படிப்பினையாக விளங்கி வருகிறது. அப்படியான ஏமாற்றுக்குள் தலைவர் சிக்குப்பட மறுத்தது அவர் விடுதலைப் போராட்டத்துக்குச் செய்த துரோகமா? அதற்கான விளக்கத்தை இந்த நூல் தரத் தவறி விட்டது.

வெல்லப்பட்டமுடியாத போரொன்றுக்குப் போராளிகளின் உணர்ச்சிகளும், உயிர்களும் கையாளப்பட்ட விதங்கள் மக்களின் நம்பிக்கைகளைப் பொய்யாக்கிய செயற்பாடுகள் எனக்கு மட்டுமன்றி பல போராளிகள், பொறுப்பாளர்கள் மற்றும் தளபதிகளுக்கும் உடன்பாடாக இருக்கவில்லை. ஆனாலும் தலைமையின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதே எமது கொள்கைப்பிடிப்புக்கும் இயக்க விசுவாசத்துக்குமான அடையாளமாகக் கருதப்பட்ட சூழ்நிலையில் அப்படியொரு இராணுவப் பண்பாட்டில் வளர்க்கப்பட்டிருந்தோம்.

இந்த நூலாசிரியரால் இந்தப் போர் வெல்லப்பட முடியாதது என உணர்ந்த நிலையிலும், ஏன் இவர் அதன் பின்னால் இழுபட்டார் என்பதற்கான சமாதானமாகவே இது படுகிறது. எந்த ஓர் அரசமைப்பிலோ போராட்ட அமைப்பிலோ தலைமையின் கட்டளைக்குக் கட்டுப்படுவதுகட்டாயமானது. கட்டளைகள்கேள்விக்கிடமின்றி நிறைவேற்றப்பட வேண்டியவை.

ஆனால் அவை பற்றிய விமர்சனங்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உரிய இடங்களில் முன்வைக்கப்பட வேண்டும். ஆனால் பலர் வீதி வீதியாகக் கீழ்மட்டப் போராளிகளையும் பொதுமக்களையும் விமர்சனங்களைக் குழப்பும் வண்ணம் முன்வைத்துவிட்டு பொறுப்பாளர்களிடமோ தெரிவிக்கப்படவேண்டிய உரியவர்களிடமோ தெரிவிக்காது அவர்கள் சொல்வதற்கெல்லாம் ஓமண்ணை போட்டதை நாம் பார்த்திருக்கிறோம். ஒரு மூத்த படைப்பாளி தமிழ்ச்செல்வன் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் "நான் மேதகு பிரபாகரன் என அழைக்க மாட்டேன்" எனவும் "எங்கள் தலைவரை மேதகு போட்டு எங்களிடமிருந்து அந்நியப்படுத்த மாட்டேன்" எனவும் திட்டவட்டமாகக் கூறினார். அதற்காக இயக்கம் இவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது மட்டுமல்ல தமிழ்ச்செல்வன் அவரின் கருத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் அந்தப் படைப்பாளிக்கு ஆதரவாக எந்தவொரு போராளியோ கலை இலக்கியவாதியோ குரல் கொடுக்கவில்லை.

அடிப்படை விடயம் என்னவெனில் பலர் எங்கே தங்கள் பதவிகள் போய்விடுமோ தாம் தலைமைக்கு விசுவாசமற்றவர்களாகக் கருதப்பட்டு விடுவோமோ என்ற சுயநலம் காரணமாக தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை உரிய நேரத்தில் உரிய இடங்களில் தெரிவிப்பதில்லை. ஆனால் தங்களுக்குள் பேசிப்பேசி தலைமை பற்றிய நம்பிக்கையீனங்களை வலுப்படுத்தி வந்தனர்.

18 வருடங்கள் போராளியாகவும் அதிக காலம் பொறுப்பான பதவிகளையும் வகித்த தமிழினிக்கு தலைவரைச் சந்திக்கப் பல சந்தர்ப்பங்கள் கிட்டியிருக்கும். அப்போது அவர் ஏன் மக்களின் உணர்வுகளையும் போராளிகளின் மனநிலையையும் தலைவரிடம் வெளிப்படுத்தவில்லை.

தலைவர் பிறர் கூறும் கருத்துக்களைப் பொறுமையாகவும் உன்னிப்பாகவும் கேட்பார் என்பதும் உடனடியாக அதுபற்றிப் பதில் எதுவும் சொல்லமாட்டார் என்பதும் இவை தொடர்பான நடவடிக்கைகளைத் தேவையான முறையில் நிறைவேற்றுவார் என்பதும் இயக்கத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினால் சுட்டிக்காட்டுபவர்களைத் தண்டிப்பதில்லை என்பதும் அவர்களில் மிகுந்த மதிப்பு வைத்திருப்பார் என்பதும் அவரைச் சந்திக்கும் பொது மக்களின் அனுபவங்களாகும்.

தலைமையின் மீதான விசுவாசம் வேறு, தலைமையின் மீதான தனி நபர் வழிபாடு வேறு. தலைமையின் தவறுகளை உரிய இடத்தில் சுட்டிக்காட்டுவதும்கூட தலைமை மீதான விசுவாசத்தின் ஒரு பகுதியே. ஆனால் இந்த நூலாசிரியரோ தலைமை மீதான விசுவாசத்துக்கும் கண்மூடித்தனமான தனிநபர் வழிபாட்டுக்குமிடையே பேதம் புரியாமல் தடுமாறியுள்ளார்.

வெல்லப்பட முடியாத போர் என்பது தெரிந்தும் மன உடன்பாடு இல்லாமலே தளபதிகளும் பொறுப்பாளர்களும் போராளிகளும் தலைமையின் கட்ட ளைக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்றால் இவர்களெல்லாம் கொடூரமான அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்ட அடிமைகளா அல்லது முழுமையாக மூளைச் சலவை செய்யப்பட்ட ஜடங்களா? அல்லது தலைவரின் விரல் நுனியில் பிணைக்கப்பட்ட பொம்மலாட்டப் பொம்மைகளா?

எத்தனையோ களமுனைகளில் எதிரிகளைத் திணறடித்து வெற்றிகளைக் குவித்த தளபதிகள் பற்றியும் போராளிகள் பற்றியும் மாவீரர்கள் பற்றியும் விடுதலைக்காக நேரம் குறித்து உயிர்களை அர்ப்பணித்த கரும்புலிகள் பற்றியும் என்னச் சொல்ல வருகிறார் இந்த நூலாசிரியர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தவறுகளே இடம்பெறவில்லை என நாம் சத்தியம் செய்ய வரவில்லை. பல சந்தர்ப்பங்களில் தவறுகள் ஏற்பட்டனவென்றாலும் அவற்றுக்கான பின்னணிக் காரணங்கள் ஆராயப்பட்டிருக்கவேண்டும். அவை தவிர்க்கப்பட முடியாமைக்கு என்ன காரணம் என அலசப்பட்டிருக்க வேண்டும். அப்படி இடம்பெற்றிருந்தால் இந்த நூல் ஒரு நல்ல விமர்சனப் பார்வை கொண்ட வரலாற்றுப் பதிவாக இருக்கமுடியும்.

"இறுதிப்போர் காலத்தில் பொட்டம்மான் மீது ஏனைய தளபதிகள் மிகுந்த கோபமடைந்திருந்தமையை வெளிப்படையாகவே உணரமுடிந்தது. படையணிகளின் பலவீனங்களைப் புரிந்து கொள்ளாமல் அவர் வழங்கும் கட்டளைகள் பலருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது" எனக் குறிப்பிடப்படுவதன் மூலம் பொட்டம்மானைக் குற்றவாளியாக்குவது தளபதிகளின் தலை மீது போடப்பட்டு முன்வைக்கப்படுகிறது.

இதன்மூலம் இந்த நூல் தலைவரையும் பொட்டம்மானையும் வசைபாடுவதையே இலக்காகக் கொண்டுள்ளதென்றே தென்படுகிறது. விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளென வசைபாடுபவர்களுக்கும் இவர்களுக்குமிடையே பேதம் இருப்பதாக எம்மால் உணர முடியவில்லை.

*(அடுத்த வாரம் தொடரும்.....)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




இந்தியாவின் ராஜஸ்தான் உதய்ப்பூர் பல்கலைக்கழகத்தில் கடந்த 14 ஆம் 15ஆம் திகதிகளில் இடம்பெற்ற 11வது அனைத்துலக எழுத்தாளர் விழாவுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பேராளர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். எழுத்தாளர் சாந்தன் கவியரங்கு மற்றும் ஆய்வரங்குகளில் பங்கு கொண்டார்.

# இறந்த பின்னும் வாழும் மானுடம்

## பன்முக சேவையாளன் உடுப்பிட்டி தந்த பண்பாளன் பாலு மாமா என்ற அமரர் பாலேந்திரன்

உடுப்பிட்டி வடக்கு கொம்மாந்தறை பிரதேசம் முழுவதும் 'பாலுமாமா' என அன்பாகவும் செல்லமாகவும் எல்லோராலும் அழைக்கப்படும் தம்பிராசா பாலேந்திரனின் அகாலச் சாவுச்செய்தி, அவரது இழப்பு தாங்கொணாத் துயரத்தை இட்டுச் சென்றுள்ளது. வடமராட்சி கொம்மாந்தறையில் 1961 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி உதித்தவர் 'பாலுமாமா'. கடந்த 14 ஆம் திகதி ஏற்பட்ட வாகன விபத்துடன் அவரது சமூக வாழ்வு அவரது சேவை அவரது அர வணைப்பு என்பன முடிவுக்கு வந்தன.

உண்மையில் ஒரு மனிதனின் சமூக சேவை, சமூக பிணைப்பு, மக்களிடம் கொண்டுள்ள அன்பு ஆகியவற்றை அவரது இறப்புக்குப் பின்னரான நிகழ்வில் நாம் கலந்து கொண்டபோது உணரக்கூடியதாக இருந்தது.

வடமராட்சியில் அவர் செல்லாத வீதிகளுமில்லை, ஊர்களும் இல்லை. அந்தளவுக்கு இயலாதவர்கள், ஏழைகள், முதியவர்கள், சிறியவர்கள் மற்றும் உதவி தேவைப்படுவோருக்கு முன்னின்று உழைத்த சமூக சேவகன். உடுப்பிட்டி தந்த 'பாலுமாமா'-பாலு அண்ணை காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர்-சிவஞானபதிதம்பதியினரின் மருமகனும் ஆவார்.




இவரைப் போன்றே சேவையுள்ளம் மனிதநேயம் கொண்ட அவரது மனைவி திருமதி பாலேந்திரன் ரேவதி, செயலக திட்டமிடல் அலுவலராகவும், யாழ். மாவட்டச் செயலர் அலுவலகத்தில் மாவட்டச் செயலதிபரின் பிரத்தியேக முகாமை அலுவலராகவும் இருந்து சேவைப் பணியை ஆற்றி வருகின்றார்.

மறைந்த பாலுமாமாவின் சேவைகளை எழுத்தில் வடித்துவிட முடியாது. அவரது எண்ணற்ற பணிகள் ஒவ்வோர் மனதிலும் ஆழப் பதிந்தவை.

அவரது பூதவுடல் கடந்த 17 ஆம் திகதி அன்று தீயுடன் சங்கமமானது. இளவயதில் அவரது இழப்பு தாங்கமுடியாத துயரம்.

தனது அன்னையின் சிறப்புக்காகக் கட்டிய புதுமனையில் அவரது (பாலுமாமாவின்) பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது.

எனினும் பிறந்தவர் ஒவ்வொருவரும் இறப்பு எனும் நிகழ்ச்சியில் பங்குகொள்ள வேண்டும் என்றவாக்குக்கு இணங்க அன்னாரது குடும்பத்துக்கு ஆறுதல் கூறி அவரது ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**செ.ரமேஷ்**
உள்ளூராட்சி உதவியாளர்

# கவிதை நூல் வெளியீடு

சவூதி அரேபியாவில் வசிக்கும் ஈழத்துக் கவிஞர் கவித்தென்றல் ஏரூர் எழுதி, வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வெளியீடு செய்த 'இரவுகள் தொலைத்த எழுத்துக்கள்' கவிதை நூலின் வெளியீட்டு விழாவானது வன்னியின் மாற்றுத் திறனாளிகளுக்கு நல்வாழ்வு அளிக்கும் இனிய வாழ்வு இல்லத்தில் கடந்த ஜூன் மாம் 26 ஆம் திகதி இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முத்துஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய அதிபர் கம்பீரக் குரலோன் சி.நாகேந்திரராஜா தலைமை தாங்கினார். தமிழ் மொழி வாழ்த்தை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயாலய மாணவிகள் வழங்கினர். வரவேற்பு உரையை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய ஆசிரியர் சுதர்சன் வழங்கினார். ஆசியுரையை சிவஸ்ரீ நவரத்தினம் வழங்கினார். வரவேற்பு நடனத்தை வவுனியா சிதம்பரேஸ்வரா நடனாலயப் பள்ளி இயக்குநர் செந்தூர்ச்செல்வன் வழங்கினார்.

வாழ்த்துரையை கவிதாயினி முல்லை றிசானா வழங்கினார். அறிமுகவுரையை செல்லமுத்து வெளியீட்டக இயக்குநர் யோ.புரட்சி நிகழ்த்தினார். நூலை இனிய வாழ்வு இல்லச் சிறார்கள் வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை வாணி வைத்திய நிலைய ஆயுர்வேத வைத்தியர் சிவசுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். வெளியீட்டு நிகழ்ச்சிகளை முல்லைஸ்வரம் இசைக்குழு இயக்குநர் முல்லை யோகேஸ் தொகுத்து வழங்கினார்.

வெளியீட்டு விழாவில் கிடைக்கப்பெற்ற நிதியை நிகழ்வின் முதன்மை விருந்தினரான வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் இனிய வாழ்வு இல்ல முகாமையாளர் திருச்செல்வத்திடம் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து சிறப்புரையை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சிவமோகன் ஆற்றினார். வெளியீட்டாய்வுரையை கலாபூசணம் நடராஜா இராமநாதன் வழங்கினார். தொடர்ந்து செல்லமுத்து வெளியீட்டகத்தின் பணிகளைப் பாராட்டி அறிவு விருட்சம் துரித கல்வி மேம்பாட்டு சமூக அமைப்பினரால் கௌரவிப்பு வழங்கப்பட்டது.

தொடர்ந்து கவிஞர் வே.முல்லைத்தீபனின் தலைமையில் 'சிரிக்க சிரிக்க சிரிப்பு வரும்' எனும் கவியரங்கம் இடம்பெற்றது. இந்தக் கவியரங்கில் கவிஞர்கள் காவலூர் அகிலன், கிளி யூர் ரமணன், புங்குடுதீவு தயான் ஆகியோர் பங்கேற்றனர்.

நிகழ்வில் இனிய வாழ்வு இல்ல மாணவிகளின் நடனம் மற்றும் இனிய வாழ்வு இல்ல மாணவி தமிழினியின் பாடல் என்பனவும் இடம்பெற்றன. பாடலை வழங்கிய தமிழினி இரு விழிகளும் பார்வையற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

கவித்தென்றல் ஏரூருக்கான பாராட்டுரையை இனிய வாழ்வு இல்ல முகாமையாளர் திருச்செல்வம் வழங்கினார்.

நன்றியுரையை 'ஒரு பூவின் மடல்' கவிநூல் ஆசிரியர் முல்லை தனுஜா ஆற்றினார்.

தூரதேசத்தில் வாழ்ந்தாலும் ஈழ மண்ணின் மாற்றுத்திறனாளிகளை மனதிருத்தி அவர்களுக்குச் சமர்ப்பணமாக கவித் தென்றல் ஏரூர் எழுதிய இந்த நூல் மனிதர்களை நேசிக்கும் ஒரு கவிஞனின் மனமாகவே பலராலும் பாராட்டப்பட்டது.











கொக்குத்தொடுவாய்க் கலைஞர்களுக்கான கௌரவிப்பும், 'போதையற்ற யுகம் படைப்போம்' நாடகமும்









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவனத்தை ஈர்த்த

## சரண்தாஸ் - நாடக ஆற்றுகை

நி.ஹரன்



ஓர் ஊரில் திருடன் ஒருவன் இருக்கிறான். அவன்பெயர் சரண்தாஸ். அவனைக் காவலர்கள் பிடிக்க முனைகின்றனர். அவன் இதிலிருந்து தப்பிக்க ஆசிரமம் ஒன்றை நாடுகின்றான். ஆசிரமத்தின் சாமியார் "நீ யார்?" எனக் கேட்க "நான் ஒரு திருடன். ஆனால் உண்மை பேசும்திருடன்" என்று கூறி நான்கு சத்தியங்களைக் கடவுளிடம் செய்கின்றான். ஒன்று தங்கத் தட்டில் சாப்பிடமாட்டேன், இரண்டாவது யானையின் மேல் ஏறி ஊர்வலம் வரமாட்டேன், மூன்றாவது இந்த நாட்டு மகாராணி வந்து தன்னைத் திருமணம் செய்யும்படி கேட்டாலும் அதனை மறுத்துவிடுவேன், நான்காவது இந்த நாட்டின் மகா ராசாவாக ஆட்சிப் பொறுப்பை ஏற்கமாட்டேன் என்பவையே அந்தச் சத்தியங்கள்.

தொடர்ந்து காவலர்கள் இவனைத் தேடி வர அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக அந்த நாட்டு மகா ராசாவின் அரண்மனைக்குள் படை வீரர்கள் துரத்திப் பிடிக்க முயன்றும் அதனையும் மீறி குதிரை வேகத்தில் புகுந்தான். உடனே அரசன் அவனை யார் எனக் கேட்கின்றான், நான் உண்மை பேசும் திருடன் என்கிறான் சரண்தாஸ். மூடையைத் திறந்து காட்டும்படி அரசன் கூற அதனைத் திறந்து காட்டுகின்றான். உடனே அரசன் திகைத்து விட்டான். ஏனெனில் அவற்றுள் இருந்தவையோ அரசனின் தங்க ஆபரணங்களும் தங்க நாணயங்களும் ஆகும். "இவற்றை நான் மகாராணிக்குக் கொடுத்திருந்தேன். அவை எவ்வாறு உன்னிடம் வந்தன" என அரசன் கேட்க "அதை நான் அமைச்சரின் அறையிலிருந்து எடுத்தேன்" என்று திருடன் சொல்ல கதை சூடு பிடிக்க தொடங்கியது. அரசன் இது தொடர்பாக தீர விசாரிக்கத் தொடங்குகின்றான். அப்போது தான் அமைச்சரின் மனைவி மூலம் தெரிய வந்தது அமைச்சருக்கும் மகாராணிக்கும் இடையில் கள்ளக் காதல் இருந்தது என்றும் மகாராணியே அந்தத் தங்க ஆபரணங்களை அமைச்சருக்குக் கொடுத்தாள் என்பதும். உடனே அமைச்சரைச் சிறை வைக்கும்படி பணித்த அரசன், உண்மை பேசிய திருடனை தன்னுடன் வைத்திருந்தான். நாட்டு வறிய மக்கள் படும் உண்மை நிலையையும் அரசனின் கீழ் உள்ள அமைச்சர்கள் செய்யும் நிதி மோசடிகளையும் அரசனுக்குத் திருடன் தெரிவித்தான். அப்போது தான், தனது நாட்டின் உண்மை நிலையைத் தெளிவாக அரசன் விளங்கிக் கொண்டான்.

திருடனின் வேண்டுகோளுக்கு இணங்க ஏழை எளியவர்களுக்கு அரசன் நிறைய உதவிகள் வழங்கினான். பின்னர் மகாராணியின் சதியால் அரசன் கொல்லப்பட அதனைச் செய்தது திருடன் சரண்தாஸ் தான் எனக் கூறி அவனை சிறையில் அடைத்து அமைச்சரைச் சிறையிலிருந்து மீட்டாள் மகாராணி. சதிக்குக் காரணமாக இருந்தவர்களை அமைச்சர்களாக்கினாள். தங்களுக்கு உதவி செய்த சரண்தாஸை சிறையில் வைத்திருந்ததை அறிந்த மக்கள் சிறையிலிருந்து மீண்டு வந்த துரோகியான அமைச்சரைக் கொன்றுவிடுகின்றனர். இதனால் நாட்டை ஆளும் பேராசையுடன் இருந்த மகாராணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அவளுக்கு பக்கபலமாக இருந்த அமைச்சர்களின் மூலம் சரண்தாஸை தம் பக்கம் இழுத்து மக்கள் பலத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொள்ள முனைந்தாள். ஆனாலும் அதுவும் முடியவில்லை. இறுதியில் யாருக்கும் தெரியாதவாறு சரண்தாஸைத் தன் படுக்கை அறைக்கு அழைத்து தன்னை திருமணம் செய்யும்படி கெஞ்சினாள். அவனோ மறுத்துவிட்டான். உடனே கூக்குரலிட்டு சரண்தாஸ் தன்னுடன் தகாத உறவில் ஈடுபட முனைந்தான் எனக் கூறி மீண்டும் சிறை வைக்கின்றாள்.

இறுதியில் அவனை வாளால் வெட்டிக் கொலை செய்யும்படி மகாராணி பணிக்க அதை அறிந்த அந்த நாட்டு மக்கள் ஓரணியாகத் திரண்டு சரண்தாஸை அந்தக் கொலைகாரரிடமிருந்து மீட்டெடுத்தனர். மகாராணியின் கீழ்த்தரமான நடத்தை மக்களுக்குத் தெரியவர மகாராணியும் நீரில் மூழ்கி இறந்துவிடுகின்றாள். பின்னர் அந்த நாட்டு மக்கள் சரண்தாஸை சிம்மாசனத்தில் உட்கார வைத்து அரசாட்சி செய்யவிரும்பினர். ஆனால், அவனோ அதை மறுத்து தான் நாட்டு அரசனாக அரண்மனை சிம்மாசனத்தில் உட்கார்ந்து அரசாட்சி செய்வதை விடுத்து, ஆலமரத்தடியில் இருந்தே நாட்டை ஆளலாம் எனக் கூறி மக்களைச் சந்தோசத்தில் ஆழ்த்தினான். இதன் மூலம் சரண்தாஸ் கடவுளுக்குச் செய்த சத்தியங்களை மீறாத ஒரு சத்திய புருசனாக மக்கள் மனத்தில் இடம் பிடித்து நாட்டை மாற்று வகையில் ஆட்சி செய்ய முனைகின்றான். இது அண்மையில் இடம்பெற்றசரண்தாஸ் எனும் நாடகத்தின் கதை ஆகும்.

இந்த நாடகம் கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அன்று மக்கள் களரி நாடக விழாவில் நல்லூர் செம்மணி வீதி சாதனா பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்ட நகரும் அரங்கில் இரவு 7 மணியளவில் பராக்கிரம நிரியெல்ல வின் இயக்கத்தில் மக்கள் களரி நாடகக் குழுவினரால் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்த நாடகத்தின் குறிப்பிடத்தக்க சிறந்த விடயமாக அரங்க உத்திகளின் பயன்பாட்டைக் கூறலாம். எடுத்துக்காட்டுக்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். நாடகம் ஆரம்பமாகின்றது என்பதைத் தெரிவிக்க மணி ஒலிக்கப்பட்டு பார்வையாளர் பகுதி இருளாக்கப்பட்டது. இதன் மூலம் பார்வையாளர் அமைதியாகி நாடகத்தைப் பார்க்கும் மன நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அடுத்ததாக அம்பு எய்யும் காட்சியைக் குறிப்பிடலாம். வில்லுடன் அம்பை வைத்துக் கொண்டு ஒருவர் நிற்க அம்பு எய்யப்பட்டதைக் காட்ட அம்பைப் பிடித்து நின்ற இன்னொருவர் பிடித்த அம்போடு ஓடுகின்றார். அதே போன்று ஈட்டி எறியும் காட்சியிலும் ஈட்டி செல்வதைக் காட்ட ஈட்டியோடு ஒருவர் ஓடுகின்றார். மேலும் அரண்மனைக் காட்சியில் யன்னற் கதவு வழியாக வெளியே நடப்பவற்றைப் பார்க்க மரச்சட்டகம் ஒன்றை ஒருவர் பிடித்து நிற்க அதற்கூடாகப் பாத்திரங்கள் வெளியே பார்ப்பதாகக் காட்டப்பட்டது. அத்தோடு காட்சி மாற்றங்களின்போது பொதுவான இசை பின்னணியில் வழங்கப்பட கறுப்பு உடையணிந்த நடிகர்கள் தேவைப்படும் மேடைப் பொருள்களைக் கொண்டு வந்து வைத்து நாடகத்தில் குழப்பம் ஏற்படாத வகையில் காட்சி மாற்றங்களை நேர்த்தியாக மேற்கொண்டிருந்தனர்.

சரண்தாஸ் நாடகத்தின் நடிப்புத் தொடர்பாகச் சொல்லியே ஆகவேண்டும். இந்த நாடக அரங்கு செவ்வக வடிவிலான உயர்த்தப்பட்ட மேடையைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்கு பக்கப் பார்வையாளர்களைக் கொண்ட கூடாரமிடப்பட்ட அரங்காகக் காணப்பட்டதனால் நடிப்பும் நான்கு பக்கப் பார்வையாளர்களை நோக்கியதாக அமைந்திருந்தது. நாடகத்தின் முற்பாதி நகைச்சுவை சார்ந்த நடிப்பாகவும் பிற்பாதி உணர்வுமிகு நடிப்பாகவும் காணப்பட்டது. இந்த நாடகத்தில் நடித்தவர்கள் சிறப்பாக நடித்திருந்தாலும் சரண்தாஸ், காவலர், சாமியார், அரசன் மகாராணி மற்றும் அமைச்சரின் மனைவி போன்றோரின் நடிப்பாற்றல் மெச்சத்தக்க வகையில் அமைந்திருந்தது. எனினும் சிறிய சம்பவங்களுக்கு வரும் பாத்திரங்களின் நடிப்பில் இன்னும் கூடுதல் கவனம் எடுத்திருந்தால் ஆற்றுகை மேலும் சிறப்பாக இருந்திருக்கும்.

தற்காலத்தில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் நடைபெற்றுவரும் நிலையில் நாடகத்திற்கூடாகவும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதை இந்த நாடக ஆற்றுகை பறைசாற்ற முற்பட்டது. ஏனெனில் இந்த நாடகத்தின் நெறியாளர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர். நாடகத்தில் பங்குகொண்ட கலைஞர்கள் தமிழ் மற்றும் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள். இது பாராட்டப்படவேண்டிய ஒரு விடயம். மேலும் இந்த நாடக ஆற்றுகை இலவசமாகக் காண்பிக்கப்பட்டமையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய விடயமாகும். அத்தோடு இந்த ஆற்றுகையில் காண்பிக்கப்பட்ட சில சம்பவங்கள் தற்போது நாட்டில் நிலவுகின்ற உண்மையான அரசியல் நிலைப்பாட்டுடன் பொருந்துகின்ற வகையில் அமைந்திருந்தது என்பது கண்கூடு. மொத்தத்தில் நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டில் நாடகக் கலையும் தன்னாலான பங்களிப்பைச் செய்து வருகின்றது என்பது திண்ணம்.





கட்டுரையாளர்:
அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









# தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தினம்

**தென்னவன்**

மனித வாழ்க்கைக்கு குருவின் வழிநடத்தல் அவசியமாகிறது. குருவின் வழிகாட்டல் என்பது மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியது. குரு என்பவர் வாழ்நாள் பூராகவும் அனைவராலும் மதிக்கப்படுபவர். ஒவ்வொருவரின் உயர்வுக்கும் காரணகர்த் தாவாகத் திகழ்பவர்கள் இவர்கள்தான். இதிகாச காலம் தொடக்கம் இன்றைய காலம் வரை தன்னைவிட உயர்ந்த நிலைக்கு தனது மாணவன் வரவேண்டுமென்ற எண்ணக்கருவுடன் குருவானவர் கல்வி போதிக்கின்றார். ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களை ஒரே சமமாக மதித்து கல்வி போதிக்கும் உயர்ந்த பண்பு களைக் கொண்டவர்களை வேறெந்தத் தொழிலிலும் காண முடியாது.

கல்விக்கு வயதில்லை என்பதற்கமைவாக எந்த வயதி லும் கல்வி கற்றாலும் குருவுக்கு நாம் மதிப்பளிப்பதுண்டு. ஒரு தாயாக, தந்தையாக, வழிகாட்டியாகத் திகழக்கூடிய ஆற்றல் குருவுக்கு மட்டுமே உள்ளது. மருத்துவர்களால் கண்டுபிடிக்கமுடியாத நோயைக்கூட ஒரு குருவினால் மாணவரிடம் எளிதில் கண்டுபிடிக்கும் ஆற்றல் உள்ள தாகக் கூறுவார்கள். மாணவனின் விருப்பு, வெறுப்பு, நோய், ஒவ்வாமை குடும்பப் பின்னணி போன்றவற்றை அறிந்து தெளிவுபடுத்தும் வல்லமை குருவிடம் உண்டு. தாய் மடியிலிருந்து இறங்கி கல்வி கற்கப் புறப்படும் காலம் தொடக்கம் ஒருவன் குருவிடம் பெற்ற அனு பவங்களைக் கொண்டு வாழ்க்கையில் மிகச் சிறந்த கல்விமானாக பண்பாளனாக நற்பிரஜையாக உருவாகின்றான். மாணவருடைய ஒழுக்கம், பண்பு, நன்னடத்தை போன்றவற்றைக் குரு நிறையக் கற்றுக் கொடுப்பார். அதனை முறையாகப் பயின்ற எந்தவொரு மாணவனும் குருவின் அன்புக்குப் பயந்து நற் பிரஜையாக வாழப் பழகிக் கொள்கின் றான்.

இத்தகைய பெருமைமிக்க குரு என அழைக்கப்படும் ஆசிரியர்களைக் கௌரவித்து அவர்பணி சிறக்கப் பாராட்டவது நம் அனைவரினதும் தலையாய கடமையாகும்.

அந்தவகையில் தென்மராட்சி கல்வி வலயத்தினர் வலயப்பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களை கௌர விக்கும் ஆசிரியர் தினவிழாவை அண்மையில் சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடத்தினர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஆசி ரியப் பணி மூலம் உயர் பதவிகளை வகிக்கும் யாழ்.பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம், மருதங்கேணி பிரதேச செயலர் க.கன கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் புகையிரத நிலைய வீதிச் சந்தியிலிருந்து ஊர்வலமாக விழா மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். ஓய்வுநிலை சங்கீத வித்துவான் பொன்.ஸ்ரீவாமதேவனால் உருவாக்கப்பட்ட ஆசிரியர் கீதம் வலய ஆசிரியர்களால் இசைக்கப்பட் டன.

வரவேற்புரையினை சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.நடராசா நிகழ்த்த வலய ஆசிரியர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. முறையான பயிற்சி பெற்றால் நடனத்திற்கு வயது ஒரு தடையாக இருக்க முடியாது என்பதற்கு உதாரணமாக மிருசுவில் அ.த.க. பாடசாலை, கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. வரணி மத்திய கல்லூரி, மீசாலை விக்னேஸ்வரா ம.வி. ஆகிய வற்றின் நடனபாட ஆசிரியைகளின் நடன நிகழ்வு அமைந்திருந்தது.

தலைமையுரை நிகழ்த்திய வலயக் கல்விப் பணிப்பாளர், "மாறிவரும் பூகோள மாற்றத்திற்கு ஏற்ப மாணவர்களின் கல்வியில் அடைவுமட்டத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். கற்பித்தல் கடமையானது மிகப் பெரிய சவா லுக்கு அப்பால் காணப்படுகிறது. பல்வேறு வகை யினருக்கு முகம் கொடுக்கவேண்டியுள்ளது மாணவர் களின் கல்வியில் காட்டும் அக்கறையானது அவர் களின் உயர்வுக்கு உன்னதமான வழிகாட்டுதலாக அமைய வேண்டும்.

ஆசிரியர்களின் சேவைகளைப் பாராட்ட இவ்வாறான நிகழ்வு அவசியமாகிறது. இங்கு கூடியுள்ள மக்களுக்கு ஓர் ஆசிரியர் மாணவர்களின் கல்வியில் காட்டும் அக்கறையினைத் தெளிவுபடுத்த இவ்வாறான களம் அவசியமாகிறது. அத்துடன் கல்வித் துறையில் அரும்பணியாற்றி ஓய்வு பெற்றவர்களையும் இந்த விழாவில் பெற்றோர் முன்னிலையில் கௌரவிப்பதானது அவர்களின் சேவைகளை அனைவரும் தெரிந்திருக்க வேண்டுமென்பதற்காகவே என்றார்.



தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர் தினத்தில் உரு வாக்கப்பட்ட அன்பாசான் என்னும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வாழ்த்துப்பாடல் இசைக் கலைஞர்களால் பாடப்பெற்றன.

தென்மராட்சி கல்வி வலயத்தில் பாடசாலைகளில் கடமையாற்றி கடந்த ஒரு வருட காலத்தில் ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் அதிபர்கள் கல்விசாரா அலுவலர்கள் போன்றோர் கௌரவிப்பு இடம்பெற்றன. அத்துடன் ஆசிரியர் தினத்தையொட்டி ஆசிரியர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டிய ஆசிரியர் களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌர விக்கப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயத்தில் மாண வர் நாடாளுமன்றங்களை உருவாக்கிச் சிறப்புடன் செயற்படுத்திவரும் பாட சாலைகளுக்கு விருதுகள் வழங்கப் பட்டன. அத்துடன் வகை 111 பாடசாலை களில் மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்த மாணவர்களை எழுதுதல் மற்றும் வாசித்தல் தகைமையை வெளிப்படுத்திய பாடசாலைகளின் அதி பர்கள் கௌரவிப்பும் இடம் பெற் றன.

விருந்தினர்களின் உரைகளையடுத்து வலய ஆசிரியர்களின் கலை நிகழ்வகளாக அட்டகாசம் என்னும் நாட கம் சங்கீத பாட ஆசிரியைகளின் இராக சங்கமம், வில்லுப்பாட்டு ஆகியவை இடம்பெற்றன.

# கவிச்சக்கரவர்த்தி குண்டலினிபுர நாகமணி

நயினை மான்மியம் என்ற மகா காவியத்தை தமிழ் உலகுக்கு கவிச் சக்கரவர்த்தி குண்டலினிபுர நாகமணி அருளினார். இது 1925 தொடக்கம் 1930 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்த இறை யற்புதமாகும். இந்தக் காப்பியத்தில் 1061 பாடல்கள் உள்ளன. இந்தக் காப்பியத்தை பாயிரத்திலேயே மகாகாவியம் நோக் கப்பட்டது. ஈழமண்டலச் சருக்கம், தல விசேட சருக்கம், மூர்த்தி விசேடச் சருக் கம், தீர்த்த விசேடச் சருக்கம், விழா வணிச் சருக்கம் என 26 சருக்கங் களைக் கொண்டது இந்த மகா காவியம். இலக்கியவளம், சைவ சித்தாந்தக் கருத்துக்கள், பௌத்த தர்மம், மணிமே கலை வரலாறு, ஆபுத்திரன் வரலாறு, நாகர்வதம் எனப்பல ஆழமான கருத்துக் கள் இந்தக் காவியத்தில் அமைந்துள் ளன. இவற்றைச் சாதாரணமானவர் களால் ஆராய முடியாது நயினை மான் மியம் கிட்டத்தட்ட 80 வருடங்கள் புலப் படாது மறைந்திருந்து. அண்மையில் நாகபூசணி அம்மையின் கிருபையினால் கிடைக்கப்பெற்றது. இதற்கு மகாவித்து வான் சரவணமுத்து செல்வத்துரையால் உரை எழுதப்பட்டு எமக்கு செம்மையாக அச்சிடப்பட்டுள்ளது. இந்தக் காவியத்தி லுள்ள பாடல்கள் கம்பராமாயணத்துக்கு இணையாக அமைந்துள்ளன. நயினை மான்மியத்தை அருளிய நாகமணிப் புலவரை குண்டலினிபுர கவிச்சக்கர வர்த்தி என கம்பருக்கு இணையாக அழைப்பதில் மிகையில்லை. கம்பன் கழகம் அமைத்துக் கம்பன் புகழ் பாடு வதுபோல் மணிமன்றங்கள் அமைத்து நயினை மான்மியத்தின் புகழை உல கறியச் செய்ய வேண்டியது நம் கடமை யாகும்.

- மருத்துவர் சி.யமுனாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன்பொய்கை

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நவம்பர் மாத ராசி பலன்



## மேடம்

பரந்து-விரிந்த பொது அறிவு உள்ள மேட ராசிக்காரர்களே, சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் உங்களுக்குப் பணவரவு உண்டு. சாதுரியமாகப் பேசி சில காரியங்களைச் சாதித்துக் காட்டுவீர்கள். கணவன்-மனைவிக்குள் இருந்து வந்த கசப்புணர்வுகளெல்லாம் விலகும். மனைவிவழி உறவினர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். பழுதான மின்னணு, மின்சார சாதனங்களை மாற்றி புதிதாக வாங்குவீர்கள். ஆனால் அஷ்டமத்துச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் பிணைக்கு கையெழுத்து எவருக்கும் இட வேண்டாம். பணம் வாங்கித் தருவதில் யாருக்கும் குறுக்கே நிற்க வேண்டாம். ராசிநாதனாகிய செவ்வாய் 10 ஆம் வீட்டில் கேந்திர பலம் பெற்று உச்சமாகி அமர்ந்திருப்பதால் செல்வாக்கு கூடும். பதவிகள் தேடி வரும். சவாலான விடயங்களைக்கூட சர்வசாதாரணமாக முடிப்பீர்கள். சகோதரங்கள் ஆதரவாக இருப்பார்கள். வேலைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்புண்டு. நீண்ட நாள்களாக வீடு, மனை வாங்க வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்தவர்களுக்கு அவரவர் ரசனைக்கேற்ப வீடு, மனை அமையும். வங்கிக் கடன் உதவியும் கிடைக்கும். குரு 6 ஆவது வீட்டிலே நின்றுகொண்டிருப்பதனால் உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்த முயல்வார்கள் கவனமாக இருங்கள்.

**பெண்களுக்கு**

சுறுசுறுப்பாகக் காணப்படுவீர்கள். சிலவேளைகளில் உடலில் ஒவ்வாமை சம்பந்தப்பட்ட நோய் வந்து போகும். சோப்பு, வாசனைத் திரவியங்களை கவனமாக கையாளுங்கள். வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். வியாபாரத்தை விரிவுப்படுத்த சில உதவிகளும் கிடைக்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். கலைஞர்களுக்கு வேற்று மொழி பேசுபவர்களால் புது வாய்ப்புக்கள் தேடி வரும். ஆடம்பரச் செலவுகளை தவிர்த்து விட்டு சற்றே சிக்கனமாக செயற்பட வேண்டிய மாதம் இது.

## இடபம்

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்பதை உணர்ந்த இடபராசிக்காரர்களே, செவ்வாய் உச்சம் பெற்று 9 ஆவது வீட்டிலே அமர்ந்திருப்பதால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனைவி வழியிலே உதவிகள் உண்டு. மனைவிக்கு வேலை கிடைக்கவும் வாய்ப்பிருக்கிறது. சகோதரங்களுடன் இருந்து வந்த மனத்தாங்கல்கள் எல்லாம் நீங்கும். சகோதரிக்கு திருமணம் கூடிவரும். உங்கள் ராசிநாதனாகிய சுக்கிரன் சனியுடன் சேர்ந்து நின்றுக் கொண்டிருப்பதனால், மூச்சுத் திணறல், ஒவ்வாமை போன்ற நோய்கள் வந்து நீங்கும். வாயுப்பதார்த்தங்களை நீங்கள் தவிர்ப்பது நல்லது. வாயுக்கோளாறால் நெஞ்சு வலிக்கும் பயந்து விடாதீர்கள். ஆனால் 8 ஆம் திகதி முதல் 8 ஆவது வீட்டிலே சுக்கிரன் மறைவதால் திடீர் பயணங்கள். அயல்நாடு செல்ல நுழைவு விசைவு கிடைக்கும். கண்டகச் சனி நடைபெற்றுக் கொண்டிருப்பதனால் மனைவிக்கு லேசாக தலைச்சுற்றல் வந்து நீங்கும். நவம்பர் 3 ஆம் திகதி வரை புதன் 6 ஆவது வீட்டில் நின்றுக்கொண்டிருப்பதனால், பிள்ளைகளால் அலைச்சல் இருக்கும். சுகாதிபதி சூரியன் சாதகமாக இல்லாததால் தாயாரின் உடல்நிலை பாதிக்கும். தாயாருடன் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. குரு 5 ஆவது வீட்டிலே நிற்பதால் புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். எதிர்பாராத திடீர் திருப்பங் களும் உண்டாகும். புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று வருவீர்கள். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். சொந்த ஊரில் செல்வாக்குக் கூடும். இழந்த மதிப்பு, மரியாதையை மீண்டும் பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

திருமணப் பேச்சு சாதகமாக முடியும். சிலர் அயல்நாடு சென்று உயர்கல்வி பெறக்கூடிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் சூடு பிடிக்கும். பற்று வரவு உயரும். பழைய பாக்கிகளெல்லாம் வசூலாகும். புது ஒப்பந்தங்கள் கூடி வரவும் வாய்ப்பிருக்கிறது. கண்டகச் சனி தொடர்வதனால் கூட்டுத் தொழிலைத் தவிர்க்கப் பாருங்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். மூத்த அதிகாரிகள் உதவுவார்கள். கலைஞர்கள் சின்னச் சின்ன வாய்ப்புக்கள் வந்தாலும், மறுக்காமல் ஏற்றுக் கொள் வது நல்லது. யதார்த்தமான படைப்புக்களைக் கொடுக்கப் பாருங்கள். வேலைச் சுமையும், அலைச்சலும் ஒருபக்கம் இருந்தாலும் மகிழ்ச்சி தரும் மாதம் இது.

**நாளை ஐப்பசி-18**
வியாழக்கிழமை -03.11.2016
திதி: சதுர்த்தி முழுவதும்
நட்சத்திரம்: கேட்டை மு.இ.07.36
ராகுகாலம்:01.34-03.04 வரை
சுபநேரம்: 07.34-09.04 வரை
சதுர்த்தி விரதம்



# இறுவட்டு வெளியீடு

இக்பால் அலி



சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் ஆங்கிலபாட ஆசிரியர் ஆறுமுகம் சண்முகநாதனின் பல்குரல் பதிவு இறுவட்டு வெளியீட்டு விழா நிகழ்வு, கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த மாதம் 23ஆம் திகதி அன்று வெகு விமரிசையாக இடம்பெற்றது. கரவெட்டி திரு இருதயக் கல்லூரி அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெற்ற இந்த நிழ்வில், தலைமை விருந்தினராக நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோருடன், சிறப்பு விருந்தினராக இயக்குந ரும் ரெலோ இயக்கத்தின் கொள்கை பரப்புச் செயலாளருமான கணேஸ் வரன் வேலாயுதம் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இன்பரூபன் வரவேற்புரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் சண்முகநாதனின் ஆற்றலை விதந்து கூறினார். ஆசியுரையை கோவில் பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள் நிகழ்த்தினார்.

சிவன் நிறுவனத் தலைவரின் மகனின் மறைவுக்காக இரு நிமிடம் அஞ்சலியுடன், தலைவர் தலைமையுரையாற்றும்போது, இந்தியக் கலைகள் எம்மை ஆக்கிரமிக்கின்றன. எமது மண்வாசனை மிக்க தனித்துவமான கலையைக் கட்டி எழுப்ப வேண்டும். நாம் துவளாது முன்னேற வேண்டும். எமக்கான களம் பெரியது. புலம்பெயர் சமூகம் எமது கலைஞர்களின் திறன்களை அங்கீகரிக்கவும், இதேவேளை-எமது மண்ணைச் சேர்ந்த அடிமட்ட சமூக மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்காக உழைத்து வரும் கணேஸ்வரன் வேலாயுதத்துக்கு அண்மையில் சர்வதேச விருது கிடைக்கப் பெற்றமை எமது மண்ணுக்கு பெருமை தரும் விடயமாகும் என்று தெரிவித்தார்.

முதன்மை விருந்தினரான செல்வம் அடைக்கலநாதன் உரையாற்றும்போது; கலைகளை ஆதரிக்க நாம் அனைவரும் முன் வருதல் வேண்டும். பாரம்பரியக் கலைகள், கூத்துக்கள், இசை நாடகங்கள் எல்லாம் இன்று அருகிக் கொண்டு செல்கின்றன. இவற்றை மீட்டேடுத்து எதிர்காலச் சந்ததிக்குப் பாரப்படுத்துகின்ற பணியை எமது கலைஞர்கள் முன்னெடுக்க வேண்டும். சண்முகநாதனின் தனிமனித முயற்சியும் திறமையும் உண்மையில் பாராட்டக்குரியது. அவர் எனது குரலையும் பதிவு செய்துள்ளார் என்பது சந்தோசமாகவுள்ளது. அவரது திறமையை வெளிப்படுத்த களங்களைத் திறப்பதற்கான உதவிகளை நிச்சயம் வழங்குவேன் எனக் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தமது உரையில்; இது ஒரு சிறப்பான முயற்சியாகும். காலம் கடந்தாயினும் அவர் தன் திறமையை வெளிக்காட்டும் வகையில் இக்குரல் பதிவு இறுவட்டு வெளியீடு செய்தமைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கலைஞர்கள் ஊக்குவிக்கவும் அவர்களை கௌரவிக்கவும் நானும் எனது ஊடகமும் காத்திரமான பங்களிப்பைச் செய்வோம் என்று உறுதியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று தெரிவித்தார்.

இறுவட்டின் முதல் பிரதியை நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதனிடமிருந்து சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஸ்வரன் வேலாயுதம் பெற்றுக்கொண்டார்.

இந்த இறுவட்டுக்கு இசைக் கோலம் வழங்கிய கலைஞரை, கரவெட்டி பிரதேச செயலாளர் சி. சிவசிறி நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார்.

பிரதேச செயலாளர் தனது உரையில், சண்முகநாதனின் திறமையை நான் நேரில் கண்டு இரசித்திருக்கிறேன். அவர் எமது பிரதேசத்தின் மிகச் சிறந்து வளர்ந்து வரும் கலைஞர். அவரது முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதற்காகவே எமது பிரதேச செயலகக் கலாசாரக் குழு எமது செயலக மாநாட்டு மண்டப அனுமதியையும் வழங்கி சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாட்டையும் செய்து கொடுத்திருக்கின்றது. இவர் தனது ஆசிரியர் பணியுடன் இந்தச் செயற்பாட்டை செய்தமையினூடாக எவ்வளவு சிரமத்தை எதிர் நோக்கியிருப்பார் என்பதை உணர்கின்றேன். அவர் மேலும் வளர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்-என்றார்.

கவிஞர் வேல் நந்தக்குமார் எழிலுரையையும், எழுத்தாளர் சீனா. உதயக்குமார் சிறப்புரையையும் வழங்கினார். சண்முகநாதன் தமது ஏற்புரையில் தன்னை ஆதரித்து வருகை தந்தோரை வணங்கி நன்றி கூறுவதுடன், தன்னை ஆதரித்து வருகை தருவேன் என்று கூறிய பலரை இங்கு காணவில்லை என்று ஏக்கத்துடன் கூறினார். மேலும் நூறு பெரியார்களின் குரலை எனது குரலினூடாக பதிவு செய்து, அதனை சாதனை இறுவட்டாக வெளியீடு செய்வேன் என்று அனைவரது கரகோசத்தின் மத்தியில் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவஞானசுந்தரத்தின் மணிவிழா






சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் காசிநாதர் சிவஞானசுந்தரத்தின் 60 வயதுப் பூர்த்தியை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச நற்பணி மன்றங்கள் இணைந்து நடத்திய மணிவிழா கடந்த 30ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

விழா நாயகன் தம்பதி சமேதராக சங்கத்தானை முருகமூர்த்தி கோவிலிலிருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஓய்வுநிலை மருத்துவர் ச.அம்பிகைபாகன், ஓய்வுநிலை அதிபர் செ.சுப்பிரமணியம் ஆகியோரின் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின வரவேற்புரையை ஓய்வுநிலை அதிபர் இ.ரவீந்திரன் நிகழ்த்தினார். கொழும்பு திருக்கணித ஜோதிட நிலையத்தின் ஜோதிடமணி சி.ஜெகதீஸ்வர சர்மா குடும்பத்தினர் ஆசியுரையுடன் விழா நாயகனுக்கு தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவித்தனர்

வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம், பேராசிரியர் க.கந்தசாமி, பேராசிரியர் தி.வேல்நம்பி, ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோரும், பாராட்டுரைகளை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன், மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய அதிபர் க.எழிலழகன், ஓய்வுநிலை அதிபர் அ.கயிலாயபிள்ளை, சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற உப தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோரும் வாழ்த்துக் கவிகளை தென்மராட்சி இலக்கிய அணியைச் சேர்ந்த அ.வாசுதேவா, கவிஞர் த.நாகேஸ்வரன், தெ.திருவேரகன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

கா.சிவஞானசுந்தரத்தின் சேவைகளைப் பாராட்டும் 'மாண்புறு மட்டுவில்' என்னும் நூல் வெளியீடும் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் நூலை வெளியிட்டு வைக்க சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் ந.சிவபாலன் பெற்றுக் கொண்டார். நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் பிரதி அதிபர் ச.லலீசன் நிகழ்த்தினார்.

சமூக ஜோதி என்னும் கௌரவப் பட்டத்தை ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன் வழங்கிக் கௌரவித்தார்.

"விழாவைக் காண பெருமளவு மக்கள் கலந்து கொண்டிருந்தமை கா.சிவஞானசுந்தரம் பிரதேசத்தில் மேற் கொண்ட கலை கலாசார சமய சேவைகளைப் பிரதிபலிக்கிறது" என விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அனைவரும் தெரிவித்தனர் (9)

கே.எஸ்.சிவஞானராஜா

# உன்னால் முடிந்தால் பொன்னாலையில் வந்து பார் தன்னால் பஜனை பாடவரும்

ஆம்! இறைவனோடு சங்கமிக்கவும் சந்தோசப்படவும் காதல் வயப்படவும் கலைமயமாக்கவும் ஒரு நிலைப்படுத்தவல்லது பஜனையாகும். பஜன் என்பது வடமொழியாக இருப்பினும் கூட்டுப்பிரார்த்தனை என்பது தமிழ் வடிவமாக்கப்பட்டுள்ளது. இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளிலும் பஜனை என்பது சங்கம அடியார்களது திருக்கூட்டத்தின் பெரும் பாட்டெனப்படும். பெரும் பாட்டெனப்படுவது அடியார்களின் பக்தி என்ற ஊற்றில் திளைத்து, தம்மை மறந்து தலைவரானவர் பாடலை முன்னெடுத்துப்பாட அதனை ஏனைய சக அடியார்கள் சேர்ந்து ஒத்திசைவாகப் பாடுதலாகும். இதற்கு இராகம் தாளம், கமகம், பாடல், சுருதிப்பெட்டி, ஹார்மோனிம், சிப்லாக்கட்டை, சலங்கை, தாளச்சோடிகள், உடுக்கு, கெஞ்சிரா, மத்தளம், டோலக், மிருதங்கம், புல்லாங்குழல் என நன்கு சாதகமான பின்னணி இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுவது தற்கால மரபோடு இணைந்து விட்டது. வடமாகாணத்தில் கிட்டத்தட்ட அறுநூறு பஜனைக் குழுக்கள் இருப்பதாகவும் அதிலும் இருநூறு குழுக்கள் மட்டுமே கிழமை தோறும் இயங்குவதாகவும் அறிய முடிகிறது.

திருகோணமலை நாராயணன் கோயில், பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயம், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம் மூன்றிலும் நாராயண அடியார்கள் நாராயண பஜனை செய்யும் போது உடல் உள்ளம் உணர்ச்சிவசப்பட்டுப் பொங்கிப் பூரிப்படையும்.

**பொன்னாலை**

மூளாய் வயல் வெளியில் பயணிக்கும் போதும் காரைநகர் பாலத்தடியில் வரும் போதும் பொன்னாலைக் கோபுரம் மிகவும் கம்பீரமாக உயர்ந்து நிற்பதைக் கண்டு வணங்க முடிகிறது. ஏறத்தாழ நூறு அடிக்கு மேலாக உயர்ந்து நிற்பதை அனுமானிக்க முடிகிறது. ஆகம விதிப்படி அமைந்த ஆலயம், நேரம் தவறாத பூஜை



பயபக்தியான அந்தணப் பெருமக்கள், பரிபாலிக்கும் நிர்வாக மரபு, கீர்த்தி அம்சகரமான மூர்த்திகள், இந்த மண்ணை வாழ வைக்கும் சித்திகரமான உற்சவங்கள், கருட பகவானின் விண்ணார்ந்த தரிசனம், மீன் ஆமை வராகம், நரசிங்கம், வாமனம், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கல்கி எனும் பத்து அவதாரங்கள் ஆலயத்தை அலங்கரிக்கின்றன. கடலில் அகப்பட்ட ஆமையொன்று பிடிபட்டுக் கொண்டு வரப்பட்டபோது அது பொன்னாக மாறிய அற்புதமே பொன்னாலைத் திருப்பதியாகும். இங்கு ஒவ்வொரு ஞாயிறன்றும் முற்பகல் பத்துமணியில் இருந்து நண்பகல் பன்னிரண்டு மணிவரை நெஞ்சமதில் செறியும் பஜனையை மிக மிக அற்புதமாகவும் இரம்மியமாகவும் நயமாகவும் நாட்டமுடனும் கண்ணனுக்கு அர்ப்பணம் செய்கிறா[illegible]கள். சுமார் இருபது நாராயண அடியார்கள் இந்த[illegible] பஜனையில் பங்கு பற்றிக் கண்ணனையும் அடியா[illegible]களையும் மகிழ்விக்கின்றனர். அமைதியான கோயில், ஆனந்த மயமான கோயில், கனதியான பேறுடைய[illegible] காத்திரமான வாலாயம் கொண்டது.

**பஜனைப்பாடல்**

*பல்லவி*

நாராயணா என்றால் நாக்குளிரும்.
இதைப் பாராயணம் செய்தால் மனங்குளிரும்.
தீராத பழிதீர வழிபிறக்கும். முன்பு
பாராத பொருள் பார்க்க விழி திறக்கும்
பண்ணாகிச் சுவையாகிப் பாலாகிப் பழமாகி
கண்ணாகி மணியாகிக் கருவாகி உயிராகி
எண்ணாகி எழுத்தாகி ஏகாந்தத் துணையாகி
விண்ணாகி மண்ணாகி வெளிநின்ற பரஞ்சோதி.

**அதிசயம்**

பொன்னாலைக்கு ஞாயிறுதோறும் வாருங்கள், பா[illegible]கள், கேளுங்கள், பாடுங்கள், கவலை தீருங்கள், பி[illegible] தீருங்கள், பஜனையோடு கூடி வாழுங்கள், அனுபவி[illegible]கள், ஆறுதலடையுங்கள் குடும்பசுகமடையுங்கள். [illegible] பதிக்குச் சென்ற பலன் கிடைக்கும். இதயம் குளி[illegible] குருதி அழுத்தம் சீராகும். நீடித்த ஆயுள் கிடைக்கும். [illegible] சமநிலையடையும். சந்தோசம் கொழிக்கும். ஒரு மா[illegible]தில், வரும் நான்கு ஞாயிறு சென்று பஜனையில் கல[illegible] பொன்னாலையில் வழிபட்டு வாருங்கள். வீட்டில் [illegible]சயம் நிகழ்ந்தே தீரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# உணர்வுகளைக் கலைவடிவமாக்கும்

## கலைவிண்ணன் சிற்பக்கலாவினோதன் மகேசு பார்த்தீபன்

சாமுவேல் டேவிட்ராஜ்

கலை இரகசியங்களை வடிவமைத்தும் உயிர் கொடுத்தும் கலையை ஒரு மொழியாக்கும் ஆற்றல் கொண்டவனே ஒரு கலைஞன்.

கலைக்கும் கலைஞர்களுக்குமிடையே ஒரு கலை உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பக் காரணமாய் அமைபவனும் கலைஞனே. "கலைகள் ஒரு சமூகத்தின் இருக்கை நிலைகளை அளவீடு செய்யும் அளவுகோலாகவும் பயன்படுகின்றன." எனவேதான் கலைத்துவமற்ற ஒரு சமூகம் குறிக்கோளற்ற ஒரு கூட்டமே எனுமளவுக்கு கலை ஒரு சமூக மொழி ஊடகமாகச் செயற்படுகின்றது.

கலைஞர்கள் இல்லாமல் கலைகள் உருவாக்கப்படுவதில்லை. உருப்பெற்ற கலை வடிவங்கள் உயிர்வாழும் தளங்கள் என சுவைஞர்கள் தம்மை உறுதி செய்கின்றனர். இன்று எமது பிரதேசத்தில் கலைகளை, கலைஞர்களை மதிக்கும் அறிவு குறைந்து செல்வதை அவதானமாகக் கொள்ள முடியும். இதற்குப் பலர் பல காரணங்கள் கூறி இருப்பினும், முதன்மைக் காரணியாக விளங்குவது "மண்பாசம்" அல்லது "மண்பற்று" அல்லது "மண்வாசனை" அற்ற நிலையே ஆகும்.

சிற்ப சித்திரக் கலைகளை சமூக அடிப்படையிலும், பாடசாலை அடிப்படையிலும், ஆர்வத்துடனும் மதிப்புடனும் வளர்ச்சிப் பாதைக்கு ஆக்கமும்- ஊக்கமும் கொடுத்து அயராது உழைத்து வரும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் சிற்பக்கலா வினோதன் மகேசு பார்த்தீபன் நெடுந்தீவுக்கு உரித்துடைய மகேசு - வேத்நாயகி தம்பதியினருக்கு 1972ஆம் ஆண்டில் வினோத கலைமகனாகப் பிறந்தவர். இவரது தந்தையும் ஒரு சிறந்த இலக்கிய எழுத்தாளர் (நெடுந்தீவு மகேசு) என்பது குறிப்பிடத்தக்கதாகும்

சிற்பக்கலா வினோதன் தனது ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு மகா வித்தியாலயத்திலும் இடைநிலை உயர்தரக் கல்வியை ஸ்ரான்லி கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். 1992 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி யில் சிற்பசித்திர ஆசிரியராக இணைந்து கற்பித்து வருகின்றார். 1998-1999 ஆண்டு காலப் பகுதியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பயிற்சியை முடித்து, தனது கற்பித்தலிலும் கலை வடிவமைப்புக்களிலும் தம்மை ஈடுபடுத்தி சாதனைகள் செய்து வருகின்றார்.

கலா வினோதன் தனது கையில் கிடைத்த கழிவுப் பொருள்களையும் ஏனைய கலைப்படைப்புக்குரிய ஊடகங்களிலும் கலையின் இரகசியத்தை நேர்த்தியாகவும் உயிர்த்துடிப்புடனும் அளவுப் பிரமாணங்களுக்கமைவாகவும் கற்பனை திறனைச் சாதகமாக்கித் தனது கலைப்படைப்புக்களை வடிவமைத்து வருகின்றார்.

இவர் பல ஊடகங்களைப் பயன்படுத்தும் கலை வல்லுநர். அதாவது தேன் மெழுகு கருங்கல், சுண்ணாம்புக்கல், மரம், சவர்க்காரம், காகிதக்கூழ், பிளாஸ்ரபரீஸ், களிமண், சிப்பிகள், முத்துக்கள், கண்ணாடி, உலோகம், இரும்பு, பித்தளை, சிமெந்து, வைபர் போன்ற ஊடகங்களைப் பயன்படுத்தி வடிவமைப்புக்களை மேற்கொள்வதற்கு மதிநுட்பமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் புலமைத்துவ வாதியாக விளங்குகின்றார்.

அண்மையில் (2.10.2016) சிற்பக்கலா வினோதனது சிறந்த படைப்பொன்று அரங்கேறியமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது தொண்டமானாறு செல்வச்சந்நிதியில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் நிர்வாகி செ.மோகனதாஸ் சுவாமிகளின் பல்துறைசமயசமூகப் பணிகளைப்பாராட்டி "ஞானதானம்" எனும் சிறப்பு விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அந்த விருதுக்கான இலச்சினை 18 கிலோ எடையுடைய தனிப் பித்தளை உலோகத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்விலச்சினைக்குரிய கருப் பொருளை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் ரி.கணேசமூர்த்தி அமைத்துக்கொடுக்க, அதற்குரிய அளவுப் பிரமாணங்கள் அதன் கலை அழகு, கற்பனைத்திறன் கலைத் தொழில் நுட்பம், நேர்த்தி என்பன அர்த்தம் காணும் வகையில் கலா வினோதன் வடிவமைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வடிவமைப்பின் கலைப் பெறுமதி அளவீடு செய்யப்பட்டு, 225ஆவதுஞானச்சுடர் வெளியீடு நிகழ்வின் போது சிற்பக் கலா வினோதன் மகேசு பார்த்தீபன் பொன்னாடை போர்த்தி, நினைவுப் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை பெருமைக்குரிய விடயமாகும்.

### சிற்பக்கலா வினோதனின் படைப்புக்களும் விருதுகளும்

01.சிற்பக்கலா வினோதன் எனும் விருது 2007ஆம் ஆண்டு வண. கலாநிதி.டி.எஸ் தியாகராஜா பேராயர், தென்னிந்திய திருச்சபையால் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் 500 க்கு மேற்பட்ட சவர்க்கார சிற்பங்கள் தனித்துவமான சிற்ப அணுகுமுறைகளைப் பின்பற்றி படைக்கப்பட்ட படைப்புக்களாகும்.

02.வடக்கு-கிழக்குக் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சினால் திருகோணமலையில் ஒழுங்கு செய்யப்பட்ட சவர்க்கார சிற்ப வடிவமைப்புக் கண்காட்சியில் 'சிற்ப சிறந்த கலைஞன்' என்ற விருது வழங்கப்பட்டுப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

03.2007ஆம்ஆண்டில் கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட சிற்பக் கண்காட்சியில் சிறந்த ஆக்கங்கள் என இனங் காணப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

04.சாரணர் சங்க அனுசரணையுடன் வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் 2007ஆம் ஆண்டு சிற்பக் கண்காட்சியில் சிறந்த சிற்பக் கலைஞனுக்கான விருது கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.

05.நெடுந்தீவு-கனடா ஒன்றியத்தின் அனுசரணையுடன் திறந்து வைக்கப்பட்ட நெடுந்தீவு மகா வித்தியாலயத்தின் ஸ்தாபகர் அமரர் நவரட்ணசிங்கத்தின் 6 அடி பித்தளைச் சிலையை வடிவமைத்தமையைப் பாராட்டும் முகமாக பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

06.2008ஆம் ஆண்டில் வட்டுக்கோட்டை சிறுவர் இல்ல நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட, சிற்பக் கண்காட்சியில் சிறந்த சிற்பக் கலைஞன் எனத் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

07.நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தின் கலாசார நூல் வெளியீட்டு விழாவில் சிறந்த சிற்பக் கலைஞன் எனத் தெரிவாகி கௌரவிக்கப்பட்டார்.

08.நெடுந்தீவு ஆலமாவடி பிள்ளையார் ஆலயத்துக்கு மாணிக்கவாசகரின் உருவச்சிலை ஐம்பென் ஊடகத்தில் 8 இஞ்சி உயரத்தில் வடிவமைத்தமைக்குப் பாராட்டு விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

09. கலா வினோதனின் கைவண்ணத்தில் 2004ஆம் ஆண்டு H.N.B வங்கியின் இலச்சினையை முருகைக் கல் ஊடகத்தினால் வடிவமைத்து சுன்னாகம் H.N.B கிளைக்கு வழங்கப்பட்டு பின்னர் அக்கலை இலச்சினை கொழும்பு H.N.B பிரதான காரியாலயத்தின் நூதனாசாலையில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிற்பக்கலா வினோதன் மகேசு பார்த்தீபன் சிற்பக்கலைகளை வடிவமைப்பதில் சிறந்த கலைஞனாக திகழ்கின்றார். இவரது ஏனைய படைப்புக்கள் மேலைத்தேய நாடுகளிலும் உயிர் வாழ்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இவர் தொடர்ந்தும் பல புத்தாக்க கலை முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார். இவரது கலைப்பயணம் வளர்ச்சி பெறவும் உயர்ச்சிப் பெறவும் கல்லூரிசமூகமாக இணைந்து வாழ்த்துகின்றோம்.

**கட்டுரையாளர்**
*யாழ்ப்பாணக் கல்லூரி வரலாற்றுத்துறை ஆசிரியர்.*





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

















# வவுனியா மாவட்ட பண்பாட்டுப்பெருவிழா நிகழ்வுகள் 2016

வவுனியா மாவட்ட கலை இலக்கிய கருத்தமர்வும், பண்பாட்டுப் பெருவிழாவும் அண்மையில் வவுனியா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார பேரவை, வவுனியா மாவட்டச் செயலகம் ஆகியன இணைந்து இந்த விழாவை நடத்தின.

வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் த. திரேஸ்குமார் தலைமையில் ஆரம்பமான முதல்நாள் நிகழ்வில், வடமாகாண பிரதிப் பிரதம செயலாளர் சிவபாதசுந்தரம், யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, வவுனியா தெற்கு வலய கோட்டக் கல்வி பணிப்பளர் எம். பி. நட்ராஜ், வவுனியா பிரதேச செயலர்களான கா. உதயராஜா, மேழிக்குமரன், தமிழருவி த. சிவகுமார், மூத்த ஊடகவியலாளர் அருணா செல்லத்துரை, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், சிங்கள, கலை, பண்பாட்டு கலாசார நிகழ்வுகளைச் சித்திரிக்கும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், கலை இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. தமிழ்–சிங்கள கலை, பண்பாட்டு நிகழ்வுகளுடன் அதிதிகள் வவுனியா நகரசபைக்கு அண்மையிலிருந்து கலாசார மண்டபத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு வரப்பிரசாதம்



அரியாலையூர் மிஷாந்தி செல்வராஜா

ஆம். மனித வாழ்க்கை ஒரு வரப்பிரசாதமே. மண்ணில் பிரசவம் செய்த உயிரினங்கள் அனைத்துமே மண்ணில் வாழ்ந்து மண் ணுக்குள் போவதை எவராலும் தடுக்கவும் முடியாது. மாற்றவும் முடியாது, இது யாவரும் அறிந்தே. அவ்வாறு இருக்க மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் இயற்கையாகச் சாவு எய்தும் முன் நாமே விபத்துக் களில் சிக்குண்டு ரயிலில் மோதி கழுத்தில் தூக்கிட்டு ஏன் சாகவேண்டும்? பிரச்சினை இல்லாதவன் என் றொருவன் உலகில் உண்டா? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். வாழ்க்கை என்றால் போராட்டம் தான். எதுவும் சுலபமாக, இலவசமாகக் கிடைத்தால் அப்பொருளுக்கோ வேலைக்கோ மதிப்பிருக்காது. எதையும் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் அற்பத்தனமாக இருந்து விடுவோம். ஆனால் அது வாழ்க்கை இல்லை. வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும் என்பார்கள். அந்த ஆயிரமும் என்ன என்ன என்று சற்றுச் சிந்தித்துப் பார்த்ததுண்டா. என்ன? அல்லது தேடி முயற்சித்தோமா என்ன? இல்லவே இல்லை. உலகில் படைக்கப்பட்ட அத்தனை உயிரினங்களிலும் மனிதன் என்ற உயிரினத்துக்கே ஆறறிவு உண்டு. ஆறறிவுடைய மனிதன் மட்டும்தான் கோழைத் தனமாக அறிவை நல்வழியில் பிரயோகிக்காது தனது உயிரைப் பறிக்க மாய்க்கத் திட்டம் தீட்டுகின்றான். இத் தகைய கோழைத்தனமாகச் சிந்திக்காமல் முழுமையான மனிதனாக மாறவும் எதிர்காலப் பிரசைகளை நல்வழியில் உருவாக்கவும் சிறந்த முன்மாதிரியான மனிதர்களாக வாழப்பழகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஆறறிவு படைத்த மனிதனான நாம் அனைவரும் இறைவனின் படைப்பில் நாம் ஒரு கொடை என வாழ்க்கையை ஒரு வரப்பிரசாதமாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும்.

பாடசாலை செல்லும் மாணவர்கள் முதல், வயது வந்தவர்கள் வரை தற்கொலையை நாடிப்போவதும் தற்கொலையால் உயிரை மாய்ப்பதும் கோழைத்தனமானது. இறப்பின் பின் தமது மதிப்பை எண்ணுவதில்லை. தூக்கிலிட்டு இறப்பவர்கள் எல்லாருமே புத்திசாலித்தனமான முடிவை எடுப்பதும் இல்லை. பிரச்சினைகளை எதிர் கொள்ளத் தெரியாதவன் என்றே தமது நிலையை உணர்த்தி விட்டுச் செல்கிறார்கள். வாழ்க்கையை ஒருசவாலாக எடுத்துக்கொள்ள வேண்டும். மனிதா! பிரச்சினைகளைச் சந்திக்கும்போதுதான் வாழ்க்கையில் சுவாரசியம் ஏற்படுகின்றது. அத்தோடு அனுபவ அறிவும் அதற்கான மாற்று வழியையும் தேடும் நிலையும் தோன்றுகின்றது. மனிதன் கற்றுக்கொள்ள வேண்டியவை நிறையவே இருக்கின்றன. எல்லாம் தெரிந்தவன் என்று எவரும் இல்லை. எதுவுமே தெரியாதவன் என்றும் எவருமே இல்லை. பலவித மனிதர்களைச் சந்திக்கும்போது பற்பல சிந்தனைகள் ஆளுமைகள் எமக்கும் ஏற்படுகின்றன.


எவனொருவன் உன்னை பிரச்சினைக்கு உள்ளாக்குகின்றானோ அவனுக்கு நீ நன்றி சொல்லக் கற்றுக் கொள். ஏனெனில் உன் மனதைத் தைரியப்படுத்த வேண்டிய உரம் இடுகின்றான். பிரச்சினைகள் தான் உன்னை வளப்படுத்தும் உரம் என்ற சிந்தனை உன்னிடம் இருக்க வேண்டும். ஒரு நிமிடம் நீ எடுக்கும் ஓய்வு வாழ்க்கையில் பொன்னான எதிர்காலத்தை இழக்கச் செய்கின்றது.

நீரில் குமிழி போன்ற நிலையற்ற வாழ்வுதான் மனித வாழ்வு. நிரந்தரமில்லா வாழ்வை இருக்கும் வரை நிறைவாக வாழ்ந்து பிறருக்கும் எடுத்துக்காட்டாய் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். நறுமணம் தரும் மலர் கூட நான் மலர்ந்த அன்றே மண்ணில் மடிந்து விழப்போகின்றேன் என்று கவலைப்படுவதில்லை. மனிதனின் கழுத்தில் கூட மாலையாக முடியாமல் மாலைப்பொழுது வரை காத்திருந்து தன் மணம் வீசியே மண்ணில் விழுகின்றது. சாதாரண பூவின் வாழ்வை அறிந்து கொள்ள முடியாத மனிதன் எவ்வளவோ காலம் வரை வாழ்ந்தும் ஓரறிவுள்ள செடி, கொடிகள் போல வளைந்து கொடுத்து வாழத் தெரியாமல் வாழ்க்கையின் பெறுமதி தெரியாமல் சாவின் பின் குருதிக்காடாக நாட்டையே மாற்றி தன்னையும் வன்முறையால் மாய்த்துக் கொள்கின்றான். மனித குலத்துக்குக் கற்றுக் கொடுக்கப் பட வேண்டிய செய்தியா இது?

என்னதான் துன்பம் வந்தாலும், மனம் சோர்ந்து போய் விடாதீர்கள். கல்வி பயிலும் மாணவர்களாக இருந்தாலும் சரி ஏனைய தொழில் புரிபவர்களாக இருந்தாலும் சரி, மனதைச் சற்றும் தளரவிடாதீர்கள். சந்தேசமாக இருக்கும் நேரங்களைவிட பிரச்சினைகளை எதிர் கொள்ளும்போது தான் வாழ்க்கையில் நிறையக் கற்கின்றோம். ஏட்டுக்கல்வியைவிட அனுபவக்கல்வியே அதாவது உலக அறிவே அன்றாட வாழ்வியலுக்கு வழி காட்டுன்றது. உன் திறமைகளை நீயே பரீட்சித்துப்பார். உன்னையே நீ கேள்வி கேள் உனக்கே நீ பதில் சொல். உன்னை எவருடனும் நீ ஒப்பிடாதே உன்னிடம் உள்ள திறமையை நீ வெளிக்காட்டு . மௌனம் போல் சிறந்த ஆயுதம் உலகில் இல்லை. மௌனத்தால் வெற்றியை நிலைநாட்டு, உன் பெருமையை உலகே அறியும் . வாய்விட்டுப் பேசுபவர்கள் எல்லோரும் அறிவாளிகள் அல்ல. மௌனமாய் இருப்பவர்கள் எவரும் முட்டாள்களும் அல்ல, என்ற விடயம் உன்னுள் இருக்கட்டும். ஆனால் "எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும் அப்பொருள் மெய்பொருள் காண்பதறிவு" என்ற பொய்யாமொழிப்புலவர் வள்ளுவரது வாசகம் உன் மனதினுள் இருக்கட்டும். பிறரது வாய்மொழி வார்த்தைகளில் நல்லதையும் கற்றுக்கொள். தீயதையும் கற்றுக்கொள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை மனதில் வைத்துக் கொண்டு மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் அதனை வரப்பிரசாதமாக ஏற்றுக்கொண்டு வாழ்வோம். பிறரையும் வாழ வைப்போம்.

# நூலக ஆவணவாக்கமும் அதன் அவசியமும்

சுகந்தினி



ஊர்கள் தோறும் கோயில்கள் போல நூலகங்களும் சமூகத்தின் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதோடு மட்டுமல்லாமல் அறிவார்ந்த விடயங்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லும் ஊடகங்களாகவும் நூலகங்கள் விளங்கு கின்றன.

ஆரம்பத்தில் நூலகங்கள் மூடிய நிலையிலேயே காணப்பட்டன. ஆனால் அவை காலப்போக்கில் திறந்த நிலைக்குக் கொண்டுவரப்பட்டன. அதாவது நூல்களைப் படிப்பது மட்டுமல்லாமல் அவற்றை வாசகர்களின் பாவனைக்கு உதவும் வகையில் கொடுப்பதாகும்.

நூலகம் ஒரு வளரும் உயிரி எனும் பஞ்சசீலக் கொள்கையின்படியே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதில்நூலகங்களில்பாதுகாத்தல், பேணல், இரவல் வழங்கல், உசாத்துணை போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தாலும் சில பௌதிக இரசாயன மாற்றங்களால் ஆவணங்கள் அழிவடைந்து கொண்டே செல்கின்றன. இது ஆரோக்கியமானதல்ல. ஆவணங்களை மனிதர்களும் இரசாயன மாற்றங்களும் காலநிலை சீர்கேடுகளும் பாதிக்கின்றன. உதாரணமாக மழை வெயில் காலங்களில் ஆவணங்கள் சேதமடைகின்றன. இதனைவிட ஆவணங்கள் தயாரிப்புக்குப் பயன்படும் மூலப்பொருள்களில் காணப்படும் சில வேதியல்பொருள்களும் காலப்போக்கில் இரசாயன மாற்றத்துக்கு உட்பட்டு அந்த ஆவணம் அதன் தன்மை மாறுபட்டுச் செல்வதையும் காணலாம். இதனை விடுத்து ஆவணங்களை அழிவக்குள்ளாக்கும் பூச்சி புழுக்களும் காரணமாக அமைகின்றன. அத்துடன் சில மனித செயற்பாடுகளும் காரணமாகின்றன. நூல்களைக் கிழித்தல், விளிம்புகளை மடித்தல், தமக்குத் தேவையானவற்றை மட்டும் களவாக வெட்டியெடுத்தல் போன்ற விடயங்களும் இடம்பெற்று அனைத்துக் காரணிகளாலும் ஆவணங்கள் அழிவுற்றுச்செல்வதைக்காணலாம். இந்தச் செயற்பாடுகள் நல்லதன்று. இவற்றை தடுத்து ஆவணங்களைப் பேணல் அவசியமாகும். அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வேண்டும். அதற்காக ஆவணங்களை நவீனமுறையில் பாதுகாத்தோ அல்லது ஒளிப்படம் எடுத்தோ நவீன தொழில்நுட்ப முறைகளால் ஆவணப்படுத்தி அடுத்த சந்ததிக்குக் கொண்டு செல்லலாம், கொண்டு செல்ல வேண்டும்.

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பது போல இன்றைக்குப் பேணி பாதுகாப்பதே அடுத்த சந்ததிக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே ஒவ்வொருவரும் நூலகத்தையும் ஆவணவாக்கத்தையும் உணர்ந்து தங்களாலான பங்களிப்புக்ளை இந்தச் சமூகத்துக்கு ஆற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கமலைப் பிரிந்தார் கௌதமி

நடிகர் கமல்ஹாசனும், கௌதமியும் கடந்த 13 ஆண்டு காலமாக ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்து வ்ந்தனர். இந்த நிலையில், கமல்ஹாசனுடன் சேர்ந்து வாழ்ந்த வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, அவரை விட்டுப் பிரிவதாக கௌதமி திறந்த மடல் ஒன்றை எழுதியுள்ளார். அதில் கௌதமி கூறியிருப்பதாவது:

நானும் கமல்ஹாசனும் இனி இணைந்திருக்கப்போவதில்லை என்பதை உங்களுக்குத் தெரிவிக்க நேர்ந்துள்ளதை நினைத்து மனவேதனை அடைகின்றேன். 13 ஆண்டுகள் சேர்ந்திருந்த பிறகு என் வாழ்க்கையில் எடுத்த பேரழிவான முடிவாக இதைக் கருதுகிறேன். மாற்றம் ஒன்றே மாறாதது. மனித வாழ்க்கையிலும் இந்த மாற்றம் ஒவ்வொரு தனிநபருக்குள்ளும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை எனது வாழ்க்கையின் மூலம் நான் புரிந்து கொண்டேன்.

ஒரு குழந்தைக்குத் தாய் என்ற வகையில், சிறந்த தாயாக எனது முதல் தலையாய கடமையை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எனக்கு உள்ளதை உணர்ந்து, அந்தக் கடமையை நிறைவேற்ற எனக்குள்ளே சமாதானம் தேவை என்பதை அறிந்து, எந்தப் பெண்ணும் எடுக்க முன்வராத மிகவும் சிரமமான முடிவாகவும், எனக்குத் தேவையான முடிவாகவும் இது தெரிகிறது.

சினிமா துறைக்குள் நுழைவதற்கு முன்பிருந்தே கமல்ஹாசனின் ரசிகையாக இருந்து, அதன் பின்னரும் அவரது திறமை மற்றும் சாதனைகளை நான் தொடர்ந்து ஊக்கப்படுத்தியுள்ளேன். சவாலான நேரங்களில் எல்லாம் அவருக்கு பக்கத் துணையாக இருந்ததை எனது மதிப்புக்குரிய தருணங்களாகக் கருதுகிறேன்.

பல வகைகளில் ரசிகர்களாகிய நீங்கள், அனைவரும் எனது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு அங்கமாக இருந்து வந்திருக்கிறீர்கள். உங்கள் மத்தியில் என்னால் இயன்றவரை எல்லா நேரங்களிலும் எனது வாழ்க்கையை கண்ணியத்துடன் வாழ்ந்தவள் என்பதால் என் வாழ்க்கையின் இந்தத் தருணத்தில் நடப்பதை உங்களுடன் நான் பகிர்ந்துகொள்கிறேன்.

கடந்த 29 ஆண்டுகளாக உங்களிடமிருந்து ஏராளமான அன்பையும், ஆதரவையும் நான் பெற்றுள்ளேன். என் வாழ்க்கையின் இருள் சூழ்ந்த, வலியான காலங்களில் என்னை வழிநடத்தியதற்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

மதினா
வதந்திகளை ஏற்படுத்துபவர்களுக்குத் தான் தெரியும் வார்த்தையின் விளையாட்டு...



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். நண்பரால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் சிறக்க விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.

**இடபம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**மிதுனம்:** பலரும் பாராட்டும் விதத்தில் செயற்படுவீர்கள். உழைப்பால், தொழில் வியா பாரத்தில், வளர்ச்சியடைவீர்கள். பணவரவு அதிகரிக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**கடகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வருகிற இடையூறை முறியடிப்பீர்கள். பணவரவு சீராக இருக்கும். உடல்நலம் பெற மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.

**சிங்கம்:** உங்களின் நற்செயலை சிலர் குறை கூறலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கடின உழைப்பு தேவைப்படும். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். வெளியூர் பயணத்தால் திடீர் செலவு ஏற்படும்.

**கன்னி:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். நண்பரிடமிருந்து எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து, வாழ்க்கைத் தரம் உயரும். மனைவியின் விருப்பம் அறிந்து செலவழிப்பீர்கள்.

**துலாம்:** எதிலும் முன்யோசனையுடன் நடப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில், உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரி செய்வது அவசியம். லாபம் சுமார். உடல்நலம் சீராக இருக்கும். வாகனத்தில், மித வேகம் பின்பற்றவும்.

**விருச்சிகம்:** நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்கள், பாராட்டு வெகுமதி பெறுவர். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

**தனுசு:** முக்கியசெயல் நிறைவேற தாமதமாகலாம். உறவினர் வருகையால், செலவு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், சீரான லாபம் கிடைக்கும். மாணவர்கள் பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம்.

**மகரம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வளர்ச்சி அடைவீர்கள். தொழிலில், லாபம் அதிகரிக்கும். நிலுவைப்பணம் வசூலாகும். மனைவியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கும்பம்:** உற்சாகத்துடன் அன்றாடப்பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்கி மகிழ்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**மீனம்:** திடீர் பொறுப்பால் பணிச்சுமைக்கு ஆளாவீர்கள். தொழில், வியாபாரத்தில், லாபம் சுமாரான அளவில் இருக்கும். மனைவியின் ஆலோசனை நன்மைக்கு வழிவகுக்கும். மாணவர்கள் அறிவுரையை ஏற்பது நல்லது.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 7 | | | | | 8 |
| | | | | | | | 4 | |
| | 2 | | | | 9 | 5 | | 1 |
| | | | 1 | | | 7 | 8 | |
| 7 | 4 | | | 6 | 2 | 3 | 5 | |
| | | | | | | | | |
| | 6 | 7 | | 4 | | | | |
| | | | | 3 | | | 2 | |
| | 3 | 9 | | | 6 | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 4 | 5 | 9 | 7 | 3 | 1 | 8 |
| 3 | 1 | 9 | 6 | 2 | 8 | 5 | 4 | 7 |
| 7 | 5 | 8 | 1 | 3 | 4 | 6 | 9 | 2 |
| 4 | 7 | 3 | 2 | 8 | 5 | 1 | 6 | 9 |
| 5 | 2 | 6 | 7 | 1 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 9 | 1 | 4 | 6 | 3 | 2 | 7 | 5 |
| 1 | 3 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 | 6 |
| 9 | 8 | 2 | 3 | 4 | 6 | 7 | 5 | 1 |
| 6 | 4 | 7 | 8 | 5 | 1 | 9 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

சைக்கிள் வேணும் என்று பையன் கேட்டான்...!
நீ சைக்கிள் உயரமே இல்லை
எப்பிடியடா சைக்கிள் ஓட்டுவாய் என்றேன்...!



பையன் சொல்லுறான் "பஸ் ஓட்டுறவர் பஸ் உயரமா இருக்காரு"...?

எனக்கு நீங்க தீபாவளிக்கு 'நெக்லஸ்' வாங்கித் தர்ற மாதிரி கனவு கன்டேன்!



அடடா என்ன பொருத்தம் பாரு! எனக்கும் அதே கனவு வந்தது! ஆனா, அதுக்கு 'பில்' தொகையை உங்க அப்பா குடுக்கிற மாதிரி கனவுல வந்தது...

பைக்ல வேகமா போயிட்டு இருக்கும் போது...
யார் என்றே தெரியாத ஒருத்தர் "சந்தியிலை பொலிஸ் நிக்குது மெதுவா போ" என்று சொல்லுறாங்க பாருங்க...



அவர் தாங்க கடவுள்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1 தலை முடியை இரண்டாகப் பிரித்துக் கொள்ளவும்.
2 ஒரு பகுதிக்கு சிறிய பான்ட் இட்டு படத்தில் காட்டப்பட்டவாறு பொனி ரெய்ல் கட்டிக் கொள்ளவும்.
3 மற்றைய பாதிப்பகுதியை மூன்றாகப் பிரித்துக் கொள்ளவும்.
4 அதில் மேற் பகுதியை கயிறு போன்று முறுக்கி முன்னர் போடப்பட்ட பொனி ரெய்லுடன் இணைக்கவும்.
5 பின்னர் அடுத்த பகுதிக்கு முதல் செய்த படிமுறயைப்பின்பற்றவும்.
6 இறுதியாக மூன்றாவது பகுதியையும் அவ்வாறு செய்து கட்டப்பட்ட போனி ரெயிலின் வூன் பான்ட் மறையுமாறு சுற்றி கிளிப் செய்து கொள்ளவும்.



# நேற்றைய கடலுணவு
## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 600 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 400 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 400 | 300 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 700 | 600 | 500 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 300 | 300 |
| விளை | 650 | 400 | 300 | 600 | 400 | 300 | – |
| முரல் | 300 | 300 | 300 | 500 | 300 | 300 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | 400 | 300 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 300 | 400 | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 300 | 300 | 300 |
| திரளி | 300 | 250 | 100 | 150 | 200 | 200 | 250 |
| நகரை | 250 | 250 | 100 | 250 | 200 | 300 | 250 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | 200 | 150 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 400 | 300 | 130 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 200 | 300 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | 70 | 50 | 100 | – |
| பாலை | 400 | 150 | 300 | 400 | 400 | 200 | – |
| வாழை | 100 | 150 | – | 400 | 300 | 200 | 200 |


# தேங்காய் பிஸ்கட்

### தேவையான பொருள்கள்

கொப்பரைத் தேங்காய் – 120 கிராம்
முட்டை வெள்ளைக் கரு – 2 முட்டையில் எடுத்தது
சீனி – 60 கிராம்

### செய்முறை

அரைத்த சீனியையும் தேங்காய்த் துருவலையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.
முட்டையின் வெள்ளைக் கருவைத் தனியே எடுத்து முள்கரண்டியால் நன்றாக கெட்டியாக அடித்துக் கொள்ளவும்.
சீனி, தேங்காய் கலந்த கலவையை அடித்த முட்டை வெள்ளைக் கருவில் போட்டுக் கலக்கவும்.
சிறு சிறு உருண்டைகளாகச் செய்து கொள்ளவும்.
நெய் தடவி, மா தூவிய தட்டில் விரும்பிய வடிவில் வைக்கவும்
250 டிகிரி சூட்டில் 30 நிமிடம் வரை பேக் செய்யவும். தேங்காய் பிஸ்கட் தயார்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 70 | 50–120 | 60 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 80–120 | 80 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 130 | 140 | 80 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 100 | 160 | 200 | 120 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 80 | 60 | 60 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 70 | 80 | 80 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 60 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 120 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 140 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 45 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 550 | 600 | 500 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 140 | 140 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 60 | 80 | 80 | 200 | 80 | 100 |




சுவர் அலங்கார மட் தகடுகள் அறிமுகமாகியுள்ளன. வீடு கட்டுமானத்தில் சிமெந்துப் பூச்சுக்கு பதிலாக இவ்வாறான மட்பாண்டத் தகடுகளைப் பாவிக்க முடியும். இதன் மூலம் சுவருக்கு வர்ணப்பூச்சுப் பூசவேண்டிய தேவை இருக்காது. வாணிஸ் அடித்து பராமரிப்பது சிறந்ததாகும். சுகாதாரமானதுடன் வீட்டிற்கு குளிர்மையை வழங்கும். இவை அலங்காரத்தைப் பெறுத்து 12 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன. இவை இயற்கை பொருள்களால் உருவானவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி யோகம்மா கந்தசாமி



யாழ்ப்பாணம், விதானையார் வீதி, ஈச்சமோட்டை சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா கந்தசாமி கடந்த (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை இறை பதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - வள்ளியம்மை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கந்தசாமியின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், இராஜசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அமுதகுமாரி (பிரான்ஸ்) காலஞ்சென்ற சந்திரகாந்தி மற்றும் கலைச்செல்வி (கனடா), தமிழ்ச் செல்வி (கனடா), சிவஞானச்செல்வன் (ஜேர்மனி), சிவயோகச்செல்வன் (பிரான்ஸ்), பாங்கயச் செல்வி (கனடா) வசந்தகுமாரி (கனடா), மோகனச்செல்வன் (குமரன் பல்பொருள் வாணிபம் ஈச்சமோட்டை), குகதாஸ் (அமெரிக்கா) ஆகியோரின் பாசிமிகு தாயும் சண்முகலிங்கம் (பிரான்ஸ்), சடாச்சரம் (கனடா) காலஞ் சென்ற சிவராஜா மற்றும் ஜெயந்தி (ஜேர்மனி), நகுலேஸ்வரன் (கனடா) காலஞ்சென்ற லவநாதன் (நாதன்) மற்றும் சசிரேகா (ஆசிரியை - யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), பவிந்தினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமியும் செந்துரு, மேகலா, அஜந்தன், கஜானன், நாகதன்சா, சாலிக், சோபிகா, தர்சன், அஜித் குமார், சுகனியா, விஜித்குமார், ஸ்ரீவித்தியா, சருண்குமார், கிசோகுமாரி, தர்மின், கரிஷ்மா, சைமி, கீர்த்தனன், கீர்த்திகா, பிரவீன், பிரவீகா, யானுயன், பிரகஸ்வினி, பிரசாயினி, கிறிஸ்சிவ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மைலின், மிலான், கவிஸ், யனுஸ், மேகா ஆகியோரின் அன்புப்பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2016) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணிக்கு தகனக் கிரியைக்காக யாழ் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**இல.6/6 A, விதானையார் வீதி,**
**ஈச்சமோட்டை, சுண்டிக்குளி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(ஜே/5799)(17.19.20)

# மரண அறிவித்தல்

## செபமாலை லோறன்ஸ் உதயராஜ்



தேவாலயவீதி மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 2 ஆம், குறுக்குத் தெருவை, வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை லோறன்ஸ் உதயராஜ் (ஓய்வு பெற்ற ச.தொ.ச. உத்தியோகத்தர்) நேற்ற (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மோசஸ் செபமாலை - நேசம் தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சேவியா - பிலமினா தம்பதியரின் மருமகனும் யோகராணி (ஓய்வு பெற்ற உப அஞ்சல் அதிபர்) இன் அன்புக்கணவரும் ஜனுசன், ஜனுஷா, ஜொயல் ஆகியோரின் பாசமிகுதந்தையும் ஜறீன் (கொழும்பு), ஜஸ்ரின் ஜீவராஜ் (ஜேர்மனி), செக்ரஸ் யோகராஜ் (ஓய்வு பெற்ற யா/போதனா வைத்திய சாலை உத்தியோகத்தர்), Lion லொயிட்ஜெபராஜ் (மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், ஊர்காவற்றுறை), யூட் தவராஜ் (படப்பிடிப்பாளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ரோகினி மற்றும் சறோஜினி (ஆசிரியை O.L.R), குமுதினி, செல்வக்குமார் (ஜேர்மனி), ஜெசிக்கா (சவுதி), அன்ரனி (கொழும்பு), லதா (ஜேர்மனி), சந்திரா, லெற்றீசியா லொயிட் (யா/யூனியன் கல்லூரி உபஅதிபர்), அன்ரனிக்கா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு தேவாலய வீதி மல்லாகத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று நாளை (03.11.2016) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு மல்லாகம் புதுமைமாத ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தேவாலய வீதி, மல்லாகம்.**
**0113144154, 077 8186460**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(ஜே/5803)(17.19.20)

# மரண அறிவித்தல்

## திருமதி பிறேமராணி ரவீந்திரன்

**பிறப்பு**
**19 . 03 . 1956**



**இறப்பு**
**31 . 10 . 2016**

யாழ்ப்பாணம், சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறேமராணி ரவீந்திரன் கடந்த (31.10.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான விஸ்வரத்தினம்-மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் ரவீந்திரனின் அன்புமனைவியும் குமணன், பிராமினி, குணாளன், தர்ஷினி ஆகியோரின் அன்புத்தாயாரும் புஸ்பராணி, செல்வராணி, சிவபாலராசா, அம்பிகைபாலன், இந்திராணி, தேவகலா காலஞ்சென்றவர்களான தர்மபாலன், நாகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான வீரவாகு, கெங்காதரன், றங்கநாதன், ஈஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் உமாகாந்த் அவர்களின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2016) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**11/2 A, சேச் லேன்,**
**ஒட்டுமடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 808 4179, 021 222 2885**

(J 5805) (16,17,19)

# மரண அறிவித்தல்

## சுப்பர் கந்தசாமி (கார்க்கார கந்தசாமி)



கலைவாணி வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் கந்தசாமி (கார்க்கார கந்தசாமி) நேற்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர்- பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் வயித்தி- முத்து தம்பதியரின் மருமகனும் தங்கம்மா, நடேசு, நல்லதம்பி, சீனிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கவிதா (சுவிஸ்), ஜெயக் குமார் (சுவிஸ்), சந்திரகுமார், காலஞ்சென்ற ராஜ்குமார், ஜீவிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயராஜா (அன்பு- சுவிஸ்), அஞ்சனா (சுவிஸ்), ஜெயபிரியா, பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வினுஜா, வேணுஜன், ஜெஷஸ்ரன்ராஜ், நிலா,பூஜா ஆகியோரின் பேரனும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.11.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கலைவாணி வீதி,**
**சித்தன் கேணி.**

**தகவல்: மகன்**
**க. சந்திரகுமார் (சந்துரு)**
**வினுஜா பஸ் உரிமையாளர்.**
**61-4986 (789 பாதை)**

(ஜே/5570)(12.18)

**077 618 4145**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்

றங்களை உணரவில்லை. மக் களுக்குக் காண்பிக்கத்தக்க வகையில் மாற்றங்களைச் செய்ய வேண்டும்.
இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜீன் லம்பேட் தெரிவித்தார்.
இலங்கைக்குப் பயணம் மேற் கொண்டிருந்த ஐரோப்பிய ஒன் றியக் குழுவினர், கொழும்பில் நேற்று மாலை பத்தி ரிகையாளர் சந்திப்பு நடத்தினர். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.
அவர் தெரிவித்ததாவது:
இலங்கை அரசு மாற்றங்களைச் செய்துள்ளதாகச் சொல்கின்றது. அதன் பயனை மக்கள் உணர வேண்டும். அரசின் பல அமைப்புக்கள் பல்வேறு வேலைகளைச் செய் கின்றன. அவற்றுக்குப் பொறுப்பாக இருந்து யார் செயற் படுகின்றனர் என்பது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். ஒரு நேரிய முன்னோக்கிய மாற்றம் இருக் கின்றது– என்றார்.
இலங்கை அரசுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை கிடைக்குமா இல்லையா என்பது தொடர்பில் 2017 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதியே தெரியும்.
கடந்த அரசின் காலத்தில் ஜி. எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை ரத்துச் செய்யப்பட்டதற்குக் காரணம் உண்டு. இலங் கையில் சிவில் மற்றும் அரசியல் தொடர் பான கரிசனைகள் உரிய முறையில் நிறைவேற்றப்படவில்லை. சிறுவர், பெண் கள் விவகாரங்களில் முன்னேற்றம் காணப்படவில்லை.
வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரனை நேற்று (நேற்று முன் தினம்) சந்தித்தோம். இராணுவக் குறைப்பு, சிவில் பொலிஸார், பெண்களைத் தலை மைத்துவமாகக் கொண்ட குடும்பங்க ளின் தேவைகள், காணி விடுவிப்புத் தொடர்பில் கலந்து ரையாடினார். பல் வேறு ஆதாரங்களுடன் மிகப் பெரிய அறிக் கையையும் சமர்ப்பித்தார் என்று ஐரோப்பிய ஒன்றி யக் குழுவினர் பத் திரிகையாளர் சந் திப்பில்தெரிவித்தனர்.
இந்தச் சந்திப்பில், இலங்கைக் கான ஐரோப்பிய ஒன்றி யத்தின் தூதுவர் துன்லா மார்க், ஐரோப்பிய ஒன்றி யத்தின் நாடாளு மன்ற உறுப்பினர் ஜீன்லம்பேட், கவுன் சிலர் போல் கொர் பிரிமற்றும்கிறிஸ்ரின் ஆகியோர் கலந்து கொண்டனர்.(கு-5)

## பேச்சு..

திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு ஊர்காவற் றுறை நீதிமன்ற நீதிவான் ரியால் உத்தரவிட்டார்.
இலங்கைக் கடற் பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடி பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட தாகத் தெரி வித்து 4 இந்திய மீன வர்கள் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியள வில் கைது செய்யப் பட்டனர். கடற்படை யினரால் நெடுந் தீவுக் கடலில் வைத்து இவர்கள் பிடிக்கப்பட்டனர்.
இராமேஸ்வரத் தைச் சேர்ந்த எஸ். முனியசாமி (வயது -38), கே.ராமன் (வயது-42), யு.முனு சாமி (வயது-56), ஆர்.ராஜேந்திரா (வயது-53) ஆகிய மீனவர்களே கைது செய்யப்பட்டவர் களாவர். அத்துடன் அவர்கள் மீன் பிடி நடவடிக்கைக்குப் பயன்படுத்திய படகு ஒன்றும், மீன்பிடி உபகர ணங்களும் கைப் பற்றப்பட்டன.
கைது செய்யப்பட்ட மீனவர்கள் நால் வரையும் யாழ். மாவட்ட கடற் றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர் நேற்று ஒப்படைத்த னர்.
(கு-5-8-101)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கார்த்திகேசு சின்னத்துரை**
திதி: திருதியை

தோற்றம் 30.09.1929 — மறைவு 14.11.2015



தலையிழந்து போனதால்
நாம் நிலையிழந்து போனோம்
நின் இழப்பினால் ஏக்கமுற்று வாடுகிறோம்
ஆர்ப்பரிப்பின்றி ஆரத்தழுவும் தந்தையே!
அகத்தினில் எம்மைத் தவிக்கவிட்டு
அகன்று போனதன் மாயமென்ன?

7ஆம் வட்டாரம், ஊரதீவு,
புங்குடுதீவு.

பிரிவாலும் துயரத்தினாலும் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
077 1881736

---

### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியை
திருமதி மருபியா இராஜாபார்த்தீபனுடைய
அன்புத் தந்தையார்
**பரமு நவரட்ணம்**
அவர்கள் 30.10.2016 அன்று இறைவனடி
சேர்ந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி! சாந்தி!




பாடசாலைச் சமூகம்
யா/புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயம்
(T.5788) (12.18)

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் **திருநாவுக்கரசு ஆறுமுகநாதன்**



கடந்த 03.10.2016 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் திருநாவுக்கரசு ஆறுமுகநாதன் அவர் களின் இல்லத்தில் இன்று (02.11.2016) புதன்கிழமை மு.ப11.00 மணியளவில் நடைபெறும்சபிண்டீகரணகிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

குடும்பத்தினர்.
புலோலி மத்தி, பருத்தித்துறை.

---

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி
**செல்லப்பாக்கியம் மகாலிங்கம்**



தோற்றம் 01 . 05 . 1954 — மறைவு 03 . 10 . 2016

கடந்த 03.10.2016 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி செல்லப்பாக்கியம் மகாலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.11.2016) புதன்கிழமை காலை 5.00 மணி தொடக்கம் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மா சாந்தி பெற வேண்டுவதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

"அபிஷனாலயா" நவிண்டில்,
கரணவாய் வடமேற்கு, கரவெட்டி. (கே/1817) (12.17.18)

குடும்பத்தினர்.
021 226 2832

---

### சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்

### விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவு தின அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 08 . 1949 — மறைவு 03 . 10 . 2016



**திருமதி விமலாதேவி நவரட்ணம்**

கடந்த (03.10.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்த எம் அன்புத் தெய்வம் திருமதி விமலாதேவி நவரட்ணம் அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது துயரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களையும் கண்ணீர் அஞ்சலிப் பதாகைகளையும் வெளியிட்டு உதவியவர்களுக்கும் அனுதாபச் செய்திகளை தொலைபேசி மூலம் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது வீட்டில் ஆராதனை செய்த எங்கள் அருட்தந்தையர்களுக்கும், அருட் சகோதரிகள் மற்றும் செப வழிபாடுகளை நிறைவேற்றிய அன்னையர்கள், இளையோர்கள், யாழ்.கல்வாரி ஆலய போதகர்கள் மற்றும் ஏனைய போதகர்களுக்கும் இரங்கல் திருப்பலியை ஒப்புக்கொடுத்த அருட் தந்தைக்கும் திருப்பலியில் பங்கு பற்றிய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் எமது தாயார் நோயுற்று அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்திருந்தபோது எங்களுக்கு உதவிகள் புரிந்த அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி DMO அவர்களுக்கும் ஏனைய வைத்தியர்களுக்கும் தாதிய உத்தியோகத்தர்களுக்கும் எமது உளம் நிறைந்த விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (02.11.2016) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

காலானை பத்தமேனி,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.
077 672 7577

[illegible] விமலா ஸ்ரோர்ஸ் - அச்சுவேலி.
077 155 3151 - குமார் ரெயிலர் - அச்சுவேலி.

---

### 40 ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 20 . 05 . 1936



மண்ணின் மடியில் 25 . 10 . 1976

**அமரர் சின்னத்தம்பி மயில்வாகனம்**
(ஓவசியர் – பண்டத்தரிப்பு)
திதி: திருதியை(02.11.2016)

அன்பும் பண்பும் அறிவும் நிறைந்தவரே
எத்தனை உறவுகள் நமக்கு இருந்தாலும்
உமைப் போல் ஆகுமோ ?
பூக்களின் புன்னகையில் உன் குதூகலப் பேச்சை
குழந்தைச் சிரிப்பை தொலைத்து இப் பாரினில்
உன் நிஜத்தைக் காண முடியவில்லை
விதி வழியே இடை நடுவே எம்மை விட்டு
நாற்பது ஆண்டுகள் கடந்தாலும் இன்றும்
உங்கள் நினைவுகளுடன் வாழும்
(c 23727) (14,17,18,21)

குடும்பத்தினர்.
001 416 754 2276

அன்பு மனைவி கருணாம்பிகை
(கண்மணி), பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவிகளிடம்

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆவா குழு தொடர்பாக இரண்டு சந்தேக நபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். ஒரு சிலர் ஆவா குழு குறித்துப் பலவிதமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். இன்னும் சிலர் தமிழீழ விடுதலைப் புலிகள்மீளுருவாகி வருவதாகவும், இந்தக் குழு இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற ஒன்று எனவும் கூறி வருகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்களில் எந்தவித உண்மையும் இல்லை. ஆவா குழு என்பது அப்பாவி மக்களிடம் இருந்து கப்பம் கோருகின்ற குழுவாகும். சிலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட் டுள்ளனர். விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன. எந்தவித சூழ்ச்சியும் இல்லை. இதனை இராணுவம் செய்கின் றதா அல்லது விடுதலைப் புலிகள் இதனூடாக மீளுருவாகின்றார்களா என்ற ஒன்றுமே இல்லை. கப்பம் கோருகின்ற ஒரு குழுவே இது. விசாரணைகள் தொடர்ச் சியாக இடம்பெற்று வருகின்றன – என்றார். (த-5)

## மத்திய வங்கி

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கையளிக் கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மற்றும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவுக்கே பிரதமர் மேற்படி பணிப்புரையை விடுத்திருந்தார்.

கோப் குழுவின் விசாரணை அறிக்கையைச் சட்டமா அதிபர் ஆராய்ந்ததன் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அரசு ஏற்கனவே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## எச்சங்கள்

மூத்த சட்ட மருத்துவ நிபுணர், அரச பகுப்பாய்வுப் பிரிவினர் மற்றும் புவிச் சரிதவியல் திணைக் களத்தினர் ஆகியோரை உள்ள டக்கிய நிபுணர் குழு பார்வையிட்டு இது தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு நீதிபதி தனது உத்தரவில் குறிப் பிட்டுள்ளார்.

குறித்த பகுதியில் அகழ்வுப் பணிகளை இடைநிறுத்துமாறும் அவர் பொலிஸாருக்குப் பணித்தார்.

மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப்படும் தடயங்கள் காணப்பட்ட இடத்தை நேற்று நேரில் சென்று பார்வையிட்ட நீதிபதி விசாரணைகளை மேற்கொண்டார். இதன் போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய நிபுணர் பி.சி.எஸ்.பெரேராவும் சமுகமளித்திருந்தார்.

நீதிபதியின் உத்தரவின் பேரில் குறித்த இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஸ்ண மிசன் பாடசாலைக் கட்டம், அதன் அருகாமையிலுள்ள வீடுகள் மற்றும் காணிகளை உள்ளடக்கியதாக இராணுவமுகாம் அமைக் கப்பட்டிருந்தது.

தனியாருக்குச் சொந்தமான இந் தக் காணிகளின் ஒரு பகுதி போருக்குப் பின்னர் 2014ஆம் ஆண்டு விடுவிக் கப்பட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. மேலும் 45 வீடுகள் இராணுவத்தினரின் பாவனையிலுள்ளன.

கையளிக்கப்பட்ட காணிகளில்தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் உதவியுடன் 78 வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முகாமுக்கு அருகிலுள்ள காணியொன்றில் மலசல கூடம் அமைப்பதற்கான குழி வெட்டியபோது மனித எச்சங்கள் எனச் சந்தேகிக்கப் படும் தடயங்கள் காணப்பட் டுள்ளன. (த-ய-47)

## வைத்திய ...

கப்பட்டவர்களுக்குக் காவல் நின்றிருந்த இளைஞர் ஒருவர் இந்தக் குழுவின் வாள் வெட்டுக்கு உள்ளாகினார்.

வைத்தியசாலைப் பொலிஸார் கடமையில் நின்றிருந்த போதும், இந்தத் துணிகர வாள்வெட்டுச சம்பவம் நடைபெற்றுள்ளது. வாள் வெட்டுக் கும்பலில் சுமார் 30 பேர் வரை இருந்ததாகச் சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.

இந்த வாள்வெட்டுச் சம்பவம் காரணமாக துன்னாலை ஆட்டுப்பட்டித் தெருப் பகுதியில் நேற்றுப் பதற்றமான சூழல் நிலவியது. பெருமளவு பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

'துன்னாலையில் இரு குழுக்களுக்கு இடையே நீண்ட காலமாகச் சீட்டுப் பிரச்சினை நிலவி வந்தது. இதன் காரணமாக நிலவி வந்த முறுகல் நிலைமையே நேற்று மோதலாக வெடித்தது. நேற்றுக் காலை 10 மணியளவில் துன்னாலை ஆட்டுப்பட்டித் தெருப் பகுதியில் வாள்களுடன் சுற்றிய இரு கும்பல்களும் மோதிக் கொண்டன. இதனால் இருவர் படுகாயமடைந்தனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலைப் பகுதியை சேர்ந்த கிருஸ்ணபிள்ளை கமலேஸ்வரன் (வயது-33), கிருஸ்ண பிள்ளை ரவிதீபன் (வயது-22) ஆகியோரே பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். 'படுகாயத்துடன் காணப்பட்ட இருவரும் உடனடியாக அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப் பட்டுத் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்' என்று வைத்தியசாலைப் பணிப் பாளர் மருத்துவர் ஜெயராஜா தெரிவித்தார்.

அவர்கள் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்ட பின்னர், பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையின் முன்பக்கத்தாலும், பின்பக்கத் தாலும் ஒரே நேரத்தில் வாள்களுடன் பலர் நுழைந்தனர். துன்னாலைச் சம்பவத்தில் காயமடைந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றவர்களுக்குக் காவலுக்கு நின்றிருந்த இளைஞர் ஒருவரை, வைத்தியசாலைக்குள் புகுந்த வாள் வெட்டுக் கும்பல் கலைத்துக் கலைத்து வெட்டியதாகச் சம்ப வத்தை நேரில் பார்வையிட்ட வர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் துன்னாலை வேம்படிப் பகுதியை சேர்ந்த அரசன் அஜந்தன் (வயது-35) என்பவரே காயமடைந்தார். அவரின் கை, கால், கழுத்து, தோள் பட்டை என்பனவற்றில் வெட்டுக்காயங்கள் காணப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. ஏற்கனவே வாள் வெட்டுக்கு உள்ளாகிப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் வாள்வெட்டுக்கு இலக்கானவர் என்று மூவரும் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சினிமாப் பாணியில் வைத்தியசாலை ஊழியர்களையும், பாது காப்பு உத்தியோகத்தர்களையும் அச்சுறுத்தி விட்டு இந்தத் துணிகர வாள்வெட்டு நடத்தப்பட்டது. வாள்களுடன் சில நிமிட நேரம் சுற்றித் திரிந்த அந்தக் கும்பல் வைத்தியசாலையில் நின்ற ஏணைய சிலரையும் துரத்தியதோடு வைத்தியசாலை ஊழியர்கள், தாதியாகளையும் தாக்க முற்பட்ட தால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது. அங்கிருந்த மக்கள் சிதறி ஓடத் தொடங்கினர். வைத்தியசாலை பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வரே கடமையில் நின்றிருந்தார்.

இதனை அடுத்து நெல்லியடி மற் றும் பருத்தித்துறை பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல் வழங்கப்பட்டதாகவும், தகவல் வழங்கி 10 நிமிடங்களுக்குள் பொலிஸார் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டதாகவும் வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ஜெயராஜா தெரிவித்தார்.

பொலிஸார் விரைந்து வந்ததைத் தொடர்ந்து கும்பலும் அங்கிருந்து தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவம் தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றோம். இரு குழுக்களுக்கு இடையில் இருந்த பிரச்சினை தான் வாள்வெட்டுக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது என்றார். (த-5-7-26-109)

## மரண அறிவித்தல்

### சுப்பர் கந்தசாமி (கார்க்கார கந்தசாமி)



கலைவாணி வீதி, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பர் கந்தசாமி (கார்க்கார கந்தசாமி) நேற்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பர்- பொன்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் வயித்தி- முத்து தம்பதியரின் மருமகனும் தங்கம்மா, நடேசு, நல்லதம்பி, சீனிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கவிதா (சுவிஸ்), ஜெயக்குமார்(சுவிஸ்), சந்திரகுமார், காலஞ்சென்ற ராஜ்குமார், ஜீவிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயராஜா (அன்பு- சுவிஸ்), அஞ்சனா (சுவிஸ்), ஜெயபிரியா, பகீரதன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வினுஜா, வேணுஜன், ஜெஷஸ்ரன்ராஜ், நிலா,பூஜா ஆகியோரின் பேரனும் நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (02.11.2016) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மகன்**
**க. சந்திரகுமார் (சந்துரு)**
**வினுஜா பஸ் உரிமையாளர்.**
**01-4036 ([illegible] பாதை)**

**கலைவாணி வீதி,**
**சித்தன் கேணி.** (..5570)

**077 618 4145**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி புண்ணியவதி (பவளம்) சிங்கரத்தினம்



உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புண்ணியவதி சிங்கரத்தினம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) 31.10.2016 திங்கட் கிழமை இறைவனடி எய்தி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான அரியநாயகம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் புத்திரியும் காலஞ்சென்ற சிங்கரத்தினத்தின் பாசமிகு மனைவியும் விக்னராசா(லண்டன்), சிவகுமார் (லண்டன்), யசோதா (ஆசிரியை - யா/ஊரெழு கணேச வித்தி.), சிவேந்திரன்(நெதர்லாந்து), நந்தகுமார் (முகாமையாளர்- NSB அச்சுவேலி), அனுஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரேணுகா(லண்டன்), குணபூசணி(லண்டன்), செல்வக்குமாரன், இந்திரவேணி (நெதர்லாந்து), விக்கினேஸ்வரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமி யாரும் வின்சனா, இலட்சனன், அபிராமி, செந்தூரன், ஜெனனி, கஜானன், சிவதர்சன், ஆதவன், வைதேகி, வேந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2016) வியாழக் கிழமை மு.ப 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**செ.செல்வக்குமாரன்**
**உரும்பிராய் கிழக்கு,**
**சிவன் வீதி.**

(J/5691), (14,21,17)

**தகவல்:**
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**077 668 8328/ 021 223 0771**



### பரமு நவரட்ணம்

(ஓய்வுபெற்ற யாழ் மாநகரசபை உத்தியோகத்தர் - CHIEF CAPENTER)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமு நவரட்ணம் 30.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் அன்பழகன், மருபியா(ஆசிரியை - புத்தகலட்டி ஶ்ரீ விஷ்ணு வித்தியாலயம்), தேவப்பிரியா(ஆசிரியை - துணுக்காய் பாலிநகர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வதி, செல்வராணி, செல்வராசா (இளைப் பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்), கலைவாணன்(லண்டன்), காலஞ் சென்றவர்களான பழனித்துரை(இளைப்பாறிய யாழ் மாநகரசபை உத்தியோகத்தர்), யோகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனிசியஸ்ராஜ்(லண்டன்), கனிந்திரவதி, கனிந்திரராஜ் (லண்டன்), இரவிந்திரவதனி, கனிஸ்ரெலாவதனி, திருலோகநாதன் (லண்டன்), தர்மினி(சாவகச்சேரி மகளிர் கல்லூரி), விஜயகுமார் (கச்சேரி - மன்னார்), நிரஞ்சன், ராஜா பார்தீபன் (தீயணைப்பு சேவை - யாழ் மாநகரசபை) ஆகியோரின் அன்பு மாமனாரும் வசந்த்(லண்டன்), கார்த்திகா(கனடா), சுனித்திரா, ஜெயந்த், மயூரிகா ஆகியோரின் பெரியதந்தையும் நாகேஸ்வரி, சாந்தநாயகி, இந்திரவசந்தி, பிறேமராசா, வளர்மதி, புஸ்பராணி காலஞ் சென்றவர்களான சிங்கராஜா(ஓய்வு பெற்ற ஆசிரியர்), பண்டிதர் (ஓய்வு பெற்ற இலங்கை மின்சாரசபை உத்தியோகத்தர்), ஶ்ரீஸ்கந்தராசா, அஞ்சலிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தீபிகன்(யாழ் இந்துக்கல்லூரி), பிரகாஷ் (யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), மதுமிதா, சிவகரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**39/9, புவனேஸ்வரி அம்பாள் வீதி,**
**நல்லூர் கிழக்கு,**
**யாழ்ப்பாணம்.**

(J 5785) (14.21.18)

**K.ராஜா பார்தீபன்(மருமகன்) 077 115 7249**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிடத்துக்குப் பொருத்தமானவர் ஒலிம்பிக் சம்பியன் அன்டி முர்ரே

## ஜோகோவிக் புகழாரம்



பிரிட்டனின் ரென்னிஸ் வீரரான அன்டி முர்ரே, முதலிட அந்தஸ்துக்குப் பொருத்தமானவர் எனத் தெரிவித்தார் சேர்பியாவின் ஜோகோவிக்.

பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் ஆண்கள் பிரிவுக்கான தனது தரப்படுத்தலை நேற்றுப் புதிப்பித்தது. வழக்கம் போல ஜோகோவிக் முதலிடத்தில் தொடர்கிறார். ஆனால் வழக்கத்துக்கு மாறாக அவர் தனது முதலிட அந்தஸ்தை இழக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

ஜோகோவிக் 12 ஆயிரத்து 900 புள்ளிகளையும், முர்ரே 10 ஆயிரத்து 985 புள்ளிகளையும் பெற்றுள்ளனர். இந்த மாதத்தின் இறுதி வாரத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கான தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் ஜோகோவிக் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெறாமல் முர்ரே கிண்ணத்தைக் கைப்பற்றினால் ஜோகோ விக் இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு முர்ரே முதலிடம் பிடிப்பார். இந்த நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.


அன்டி முர்ரே, மிகச் சிறப்பாக விளையாடி வருகிறார். இவ்வாண்டு இறுதியில், முதலாமிடத்தைப் பெறக்கூடிய நிலமையில் இருப்பதற்கு, அவர் பொருத்தமானவர். அந்த இடத்தை அவர் அடைவாரா இல்லையா என்பது, அவரில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. அது, என்னிலும் தங்கியிருக்கிறது என ஜோகோவிக் மேலும் தெரிவித்தார். (ம)

# சிமித்தே ஸ்ரெய்னின் இலக்கு

ஆஸ்திரேலிய அணித்தலைவரான ஸ்ரீவ் சிமித்தே தனது முக்கிய இலக்கு எனத் தெரிவித்தார் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெய்ன்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே ஸ்ரெய்ன் இவ்வாறு தெரிவித்தார்.

பாம்பின் தலையை நீங்கள் வெட்டினால், உடம்பின் ஏனைய பகுதிகளும் வீழ்ந்துவிடும். கிரிக்கெட்டிலும் அவ்வாறே கடந்த காலங்களில், அதை நாங்கள் செய்திருக்கிறோம். அணித்தலைவரை இலக்கு வைக்க நாங்கள் முயன்றிருக்கிறோம், ஏனெனில், அங்கு பிரச்சினைகளை ஏற்படுத்தினால், ஏனையோரையும் அது பாதிக்கும். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் எனது இலக்கு ஸ்ரீவ் சிமித். அவரை நிலைக்க அனுமதித்து விட்டால் ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றி விடுவார் என ஸ்ரெய்ன் மேலும் தெரிவித்தார். (ம)





# நான்கு முறை தற்கொலைக்கு முயன்றாராம் ஆஸியின் ஹொக்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் பிரட் ஹொக், தான் நான்கு தடவைகள் தற்கொலைக்கு முயன்றவர் எனத் தனது சுயசரிதைப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆஸ்திரேலிய வீரர்கள் பலரும் தமது வாழ்க்கையில் நடந்த முக்கிய சம்பவங்களைத் தொகுத்து சுயசரிதையாக வெளியிட்டுள்ளனர். பொண்டிங், கிளார்க், வற்சன், ஜோன்சன் ஆகியோர் அவர்களில் சிலர். இந்த வரிசையில் ஹொக்கும் இணைந்துள்ளார்.

கிரிக்கெட்டிலிருந்து ஓய்வெடுத்த பின்னர், திருமண பந்தமும் முடிந்து போனதால் மதுவுக்கு அடிமையானேன். வேலையிலும் மனநிறைவு கிடைக்கவில்லை. இதனால், தற்கொலை செய்யும் எண்ணம் தோன்றியது. நான்கு முறை உயிரை மாய்த்துவிட முயற்சித்தேன். இருப்பினும் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினேன் என ஹொக் தனது சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

2003 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் உலகக்கிண்ணம் வென்ற ஆஸ்திரேலிய அணியில் ஹொக் இடம்பெற்றிருந்தார். 2008 ஆம் ஆண்டு பன்னாட்டு மதிப்புப்பெற்ற மூன்றுவகை ஆட்டங்களிலிருந்தும் ஓய்வு பெற்றார். தற்போது 45 வயதாகும் அவர் ஐ.பி.எல். தொடரிலும், ஆஸ்திரேலிய அணியின் கழக மட்டப் போட்டிகளிலும் விளையாடி வருகிறார். அதிக வயதில் ஐ.பி.எல். தொடரில் களமிறங்கியவர் என்ற பெருமையும் அவருக்கு உண்டு. (ம)




# பாகிஸ்தானுக்கு எதிராக மே.இ.தீவுகள் முன்னிலை

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாளில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது மேற்கிந்தியத் தீவுகள்.

நாயணச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 281 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அஸ்லாம் 74 ஓட்டங்களையும், மிஸ்பா 53 ஓட்டங்களையும், யுனிஸ் கான் 51 ஓட்டங்களையும், சர்பிராஸ் அகமட் 51 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் பிஸ்சூ 4 இலக்குகளையும், கபிரியேல் 3 இலக்குகளையும், ஜோசெப் 2 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் இரண்டாம் நாள் முடிவில் தீவுகள் 244-6 என்றிருந்தது. பிரீத்வைட் 95 ஓட்டங்களுடனும் கோல்டர் 6 ஓட்டங்களுடனும் களமிறங்கினர். சதம் கடந்தார் பிரீத்வைட். 16 ஓட்டங்களுடன் கோல்டர் ஆட்டமிழந்தார். பிஸ்சூ, பிரீத்வைட் இணை எட்டாவது இலக்குக்காக 60 ஓட்டங்களைப் பகிர்ந்தது. இந்த இணைப்பாட்டத்தின் மூலம் பாகிஸ்தானை முந்திச் சென்றது தீவுகள். 27 ஓட்டங்களுடன் பிஸ்சூவை வீழ்த்தினார் ரியாஸ். ஜோசெப், கபிரியேல் இருவரையும் அடுத்தடுத்து வீழ்த்தினார். 337 ஓட்டங்களில் தீவுகள் சகல இலக்குகளையும் இழந்தது. ஆரம்ப வீரராகக் களமிறங்கிய பிரீத்வைட் 142 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தார்.

பதிலுக்கு தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் நாள் முடிவில் 84-4 என்றுள்ளது. அசார் அலி 45 ஓட்டங்களுடனும், அகமட் 19 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

# ஐ.எஸ். அமைப்பின் தாக்குதல் முறியடிப்பு



சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முயற்சியொன்று முறியடிக்கப்பட்டது என சவூதி அரேபியப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரஷ்யாவில் 2018 ஆம் ஆண்டு கால்பந்தாட்ட உலகக் கிண்ணம் நடைபெறவுள்ளது. இந்தத் தொடருக்கான தகுதிகாண் ஆட்டமொன்றில் ஐக்கிய அரபு இராச்சியமும், சவூதிஅரேபியாவும் நேற்றுமுன்தினம் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டம் சவூதியின் ஜெட்டாவில் உள்ள பன்னாட்டு கால்பந்து மைதானத்தில் நடைபெற்றது. ரசிகர்களின் போர்வையில் சந்தேகத்துக்குரிய வகையில் நடமாடிய 8 பேரை பொலிஸார் கைது செய்தனர். அவர்களிடத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் ஆட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மைதானத்துக்குள் பெரும் தற்கொலைத் தாக்குதலை அல்லது மைதானத்துக்கு அருகில் கார் குண்டுத் தாக்குதலை நடத்துவதை அவர்கள் தமது திட்டமாகக் கொண்டிருந்தமை அம்பலமானது. அவர்கள் அனைவரும் தாம் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைச் சார்ந்தவர்கள் என ஏற்றுக்கொண்டனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம)

# உலகத் தரமான சுழல் வீரர்கள் இங்கிலாந்து அணியில் இல்லை

## இது குக்கின் கவலை

டெஸ்ட் ஆட்டங்களில் மிகவும் பலமிக்க இங்கிலாந்தை, கத்துக்குட்டியான பங்களாதேஷ் சமப்படுத்த முக்கிய காரணம் இங்கிலாந்து அணியில் உலகத் தரமான பந்துவீச்சாளர்கள் இல்லாதமையே எனத் தெரிவித்தார் அந்த அணியின் தலைவரான அலிஸ்டர் குக்.

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் அந்த அணி எமக்கு 240 ஓட்டங்களை இலக்காக வைக்கும் என்று கருதினேன். நினைத்ததைவிட 30 ஓட்டங்களைக் கூடுதலாக அந்த அணி பெற்றது. சிறப்பான பந்து வீச்சு எங்களிடத்தில் இல்லை. வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டுமாயின் உலகத்தரமான சுழல் பந்துவீச்சாளர்களை இங்கிலாந்து கொண்டிருக்கவில்லை. தோல்விக்கான மற்றொரு முக்கிய காரணமாக பிடியெடுப்புக்களைத் தவறவிட்டமையைக் குறிப்பிடலாம். ஒரு இலகுவான பிடியெடுப்பைக் கோட்டைவிட்டு, மோசமான களத்தடுப்பை நானே ஆரம்பித்து வைத்தேன் என குக் மேலும் தெரிவித்தார்.



குக்கின் கருத்து பலராலும் விமர்சிக்கப்படுகிறது. ஏனெனில் 273 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இங்கிலாந்து இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஏனைய 64 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் பறிகொடுத்தது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர், சென். சேவியர் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி

Nestlé MILO
மைலோ கிண்ணத் தொடர்


சென்.சேவியர் அணி


இளைஞர் அணி

யாழ்ப்பாணம், நவ. 2
மைலோ கிண்ணத்துக்காக பருத்தித்துறை லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர், சக்கோட்டை சென். சேவியர் அணிகள் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றன.

நெற்கொழு கழுகுகள் வி.கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்டச் சுற்றக்குத் தகுதிபெறும் முதலாவது ஆட்டத்தில் விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் எதுவித கோல்களையும் பெறாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல்களின் அடிப்படையில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்று மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் சக்கோட்டை சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம-23-108)

## இந்தியாவுக்கு புறப்படுகிறது இங்கிலாந்து

ஐந்து ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி இந்தியாவுக்கு இன்று புறப்படுகிறது.

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ளது. இந்தியாவில் தொடர் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்காக இங்கிலாந்து அணி இன்று இந்தியாவுக்குச் செல்கிறது.

நடைபெற்று முடிந்த பங்களாதேஷுக்கு எதிரான தொடரை 1:1 என்று இங்கிலாந்து சமன் செய்திருந்தது. முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்தும், இரண்டாவது ஆட்டத்தில் பங்களாதேஷும் வெற்றிபெற்றிருந்தன. இங்கிலாந்து சந்தித்த படுதோல்விகளில் ஒன்றாக இந்தத் தொடர் சித்திரிக்கப்படும் நிலையில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவிலிருந்து இங்கிலாந்து அணி இந்தியாவுக்குச் செல்கிறது. (ம)



## களமிறங்குகிறார் மிச்செல் ஸ்ராக்



பயிற்சியின் போது, முழங்காலில் வெட்டுக் காயம் ஏற்பட்டு, தற்போது குணமடைந்து வரும் ஆஸ்திரேலிய அணியின் வேகப் பந்து வீச்சாளர் மிச்செல் ஸ்ராக், தான் இன்னமும் முழுமையாகக் குணமடையவில்லை என ஏற்றுக் கொண்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் பருவகாலம் ஆரம்பிக்கும் போட்டியாக, நாளை ஆரம்பிக்கவுள்ள தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டி அமையவுள்ளது. பருவகாலத்தின் முதலாவது போட்டியில், ஸ்ராக் பங்குபற்ற வேண்டுமென்பது, ஆஸ்திரேலிய அணியின் எதிர்பார்ப்பு ஆகும்.

எனினும், அவரது காயம், இன்னமும் முழுமையாகக் குணமடையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. காயம், இன்னமும் மூடப்படாமல், தினமும் சுத்தப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகக் காணப்படுகிறது. எனினும், அதற்கு மத்தியிலும், முதலாவது போட்டியில் அவர் விளையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (ம)

## போராடி வென்றது பார்சிலோனா வி.க.

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பார்சிலோனா வெற்றிபெற்றது. பார்சிலோனா, கிரனெடா அணிகளுக்கு இடையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. பெரும் போராட்டத்தின் பின்னர் 1:0 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா வெற்றி பெற்றது. பார்சிலோனாவின் சார்பாக இரண்டாவது பாதியில் கோல் பதிவானது. நெய்மர் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பிவர றொபின்கோ அதைக் கோலாக்கியிருந்தார். (ம)

## பங்களாதேஷ் அணிக்கு சங்கா பாராட்டு



இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1:1 என்று சமன் செய்த பங்களாதேஷ் அணிக்கு இலங்கை அணியின் முன்னாள் தலைவர் சங்கக்காரா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இரண்டு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி பங்களாதேஷ் சென்றிருந்தது. முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 23 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் 108 ஓட்டங்களால் மிகப்பெரும் வெற்றியைப் பதிவுசெய்த பங்களாதேஷ் கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்துக்கு சிறந்த பாடத்தைக் கற்பித்ததுடன் தொடரை 1:1 என்று சமனும் செய்தது. இங்கிலாந்துக்கு எதிராக பங்களாதேஷ் பெற்ற முதலாவது வெற்றி இதுவாகும். அந்த அணிக்கு ஒட்டுமொத்தமாக கிடைத்த எட்டாவது டெஸ்ட் வெற்றி இதுவாகும். இதற்கு முன்னர் சிம்பாப்வேயை 5 தடவைகளும், மேற்கிந்தியத் தீவுகளை 2 தடவைகளும் வீழ்த்தியிருந்தது. இந்த நிலையில் பங்களாதேஷின் இந்த வெற்றிக்கு பல தரப்பிடமிருந்தும் பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன. சங்காவும் வாழ்த்தியுள்ளார். "வியக்க வைக்கும் வேலையை செய்துவிட்டீர்கள். பரபரப்பான வெற்றி இது. அனைவருக்கும் வாழ்த்துக்கள். இங்கிலாந்து அணிக்கு சாதகமாக எதுவும் அமையவில்லை" என்று சங்கா தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயிற்சிக்குத் திரும்பினார் சாய்னா

முழங்காலில் ஏற்பட்ட காயத்துக்கு அறுவைச் சிகிச்சை செய்து கடந்த பல வாரங்களாக ஓய்விலிருந்த பூப்பந்தாட்ட வீராங் கனை சாய்னா நேவால், தற்போது மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார்.

முக்கியமான பூப்பந்தாட்டத் தொடர்களில் ஒன்றான சீனத் தொடர் இந்த மாதம் நடுப் பகுதியில் நடைபெறவுள்ள நிலையில் சாய்னா பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இதனால் அவர் சீனத் தொடரில் களமிறங்க அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகக் கருதப்படுகிறது.

அறுவைச் சிகிச்சை வலிகள் தற்போது இல்லை. காயத்தை மறந்து விளையாடக் கூடிய அளவுக்கு உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சீனத் தொடரில் களமிறங்க அதிகவாய்ப்புக்கள் உள்ளன என சாய்னா தெரிவித்தார். (ம)





# மானிப்பாய் இந்து சம்பியனானது ஸ்கந்தாவின் கால்பந்தாட்டத்தில்

யாழ்ப்பாணம், நவ. 2

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி அழைக்கப்பட்ட அணிகளுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியனானது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் மானிப்பாயின் முதல் கோலைப் பதிவுசெய்தார் தர்சிகன். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியின் 15 ஆவது நிமிடத்தில் மானிப்பாயின் கோல் கணக்கை ஆரம்பித்தார் தர்சிகன். 22 ஆவது நிமிடத்தில் தில்லைகாந்தன் பதிவுசெய்த கோல் மானிப் பாய் இந்துக் கல்லூரியின் மூன்றாவது கோலாக அமைந்தது. முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி மோதியது. இதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-422)

# இயல்பான டெஸ்ட் ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை இலங்கை

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய நான்காம் நாள் நிலவரத்தின் படி இலங்கை அணி அதன் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஹராரேயில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 537 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தரங்க ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களையும், குசல் பெரேரா 110 ஓட்டங்களையும், சில்வா 94 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய சிம்பாப்வே 373 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. கீரிமர் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும், மூர் 79 ஓட்டங்களையும், திரிபானோ 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

164 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை 5-0 என்ற நிலையில் இருந்த போது மூன்றாம் நாள் முடிவு கண்டது. நான்காம் நாளான நேற்று 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கௌசால் சில்வா. குசல் பெரேரா, மெண்டிஸ் இருவரும் பதின்ம ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் கருணாரத்ன. நேற்று அடித்தாடி ஆட்டத்தை விரைவில் இடைநிறுத்தி சிம்பாப்வேயை சுருட்ட இலங்கை எத்தனிக்கும் என்றே பொதுவாகக் கருதப்பட்டது. ஆனால் எவரும் அடித்தாடவில்லை. சதத்துக்காக 162 பந்துகளை எடுத்துக் கொண்டார் கருணாரத்ன. டி சில்வா அரைச்சதம் கடந்தார். 110 ஓட்டங்களுடன் கருணாரத்னவும், சில்வா 64 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நாள் முடிவில் இலங்கை 247-6 என்றுள்ளது.

இதுவரை இலங்கை 411 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது. இறுதிநாளான இன்றைய தினத்தின் ஆரம்பத்திலேயே தனது ஆட்டத்தை இடைநிறுத்தி சிம்பாப்வேயை துடுப்பெடுத்தாடப் பணித்ததால் இலக்குகளைச் சரிக்க ஓரளவு அவகாசம் கிடைக்கும். (ம)

# பிறைற்பிக்ரர் அணி சம்பியன்



மாந்தை கிழக்கு விளையாட்டு கழகத்தினால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத்தில் வன்னி வேளாங்குளம் பிறைற்பிக்ரர் அணி சம்பியனானது.

வன்னி வேளாங்குளம் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. பிறைற்பிக்ரர் அணியை எதிர்த்து உதயதாரகை அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய பிறைற்பிக்ரர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக எழில் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் தினேஸ், உமாகாந்தன் ஆகியோர் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய உதயதாரகை அணி 8.4 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து, 40 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதையடுத்து, 31 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது பிறைற்பிக்ரர் அணி. பந்துவீச்சில் காந்தன் 4 இலக்குகளை வீழ்த்தினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். தொடராட்ட நாயகனாக எழில், உமாகாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422)

அகரம் கல்வி நிலையம்
மல்லாகம் கே.கே.எஸ் வீதி காங்கேயன் வெதுப்பகம் முன்பாக
கொக்குவில் கே.கே.எஸ் வீதி சம்பியன் வீதி அருகில்

கல்வியாண்டு 2017 புதியதரம் 06
தமிழ்,ஆங்கில மொழி மூல வகுப்புக்களுக்கான அனுமதி வழங்கப் படுகின்றன.
02.11.2016 இல் இருந்து அனுமதிகளை அலுவலக நேரத்தில் எமது இரு நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
"அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
நிர்வாகி
(J 5800) (16,17,19)

வேலைவாய்ப்பு
24 பேருக்கு முன்னுரிமை
கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர்கள், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.
எமது கோல்டன் குறூப் கம்பனியில்
1. விற்பனைப் பிரதியாளர் 2. மேற்பார்வையாளர்
3. உதவி முகாமையாளர் 4. அலுவலகப் பெண்
அடிப்படைச் சம்பளம் 18500+ கொமிசன் + உணவுப்படி
120 - 150 நாள்களில் பயிற்சியளித்து உள்வாங்கப்படுவர். பயிற்சியின் நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு. 48,000/= - 75,000/= சம்பளம் பெற முடியும்.
ETF, EPF வழங்கப்படும்.
077 621 9536, 077 998 7699
இல.38, பற்றிக்ஸ் றோட், (சென்.சாள்ஸ் பாடசாலைக்கு அருகில்)

வீடு வாடகைக்கு
நீர்வேலி தெற்கு, குருந்தடி வீதியில், சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 6621745
077 6181930

# மேரிஸ், றோயலுக்கு விதிக்கப்பட்டது தடை

கரணவாய், நவ. 2

கால்பந்தாட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது மைதானத்தில் குழப்பம் விளைவித்த குற்றச் சாட்டில் நாவாந்துறை சென். மேரிஸ், ஊரெழு றோயல் அணிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தடை விதித்துள்ளது பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கம்.

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் கடந்த மாதம் 17 ஆம் திகதி நடைபெற்ற ஆட்டமொன்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தில் ரசிகர்கள் குழப்பம் ஏற்பட்டு அடிதடி வரையும் சென்றது. ரசிகரொருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். தொடர் இடைநிறுத்தப்பட்டு சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்திடம் முறையிடப்பட்டது. நீண்ட பரிசீலனையின் பின்னர் தீர்ப்பு நேற்று வெளியானது.

நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்துக்கு 2018 ஆம் ஆண்டு வரை இரு வருடங்களும், ஊரெழு றோயலுக்கு 2017 ஆம் ஆண்டு வரை ஒரு வருடமும் பருத்தித்துறை கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்களில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதைவிட சென். மேரிஸுக்கு 50 ஆயிரம் ரூபாவும், றோயலுக்கு 25 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதிக்கப்பட்டது.

சென். மேரிஸ் அணி கடந்த வருடம் களமிறங்கிய இறுதியாட்டத்தின் போதும் இவ்வாறானதொரு குழப்பம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-108)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org